

# செங்காந்தள் - வழிபாடு

முனைவர் ஆ. மகாலட்சுமி

புத்தகக்குறிப்பு

9 789391 115951



# செங்காந்தள் - வழிபாடு

**முனைவர் ஆ. மகாலட்சுமி**

**Title Verso**

**TITLE OF THE BOOK** : **Chenkaantal - Vazhibadu**

**புத்தகத்தலைப்பு** : **செங்காந்தள் - வழிபாடு**

**EDITOR** : **Dr. A. Mahalakshmi**

**தொகுப்பாசிரியர்** : **முனைவர் ஆ. மகாலட்சுமி**

**FIRST EDITION** : 2023

**முதல் பதிப்பு** : 2023

**PAGES/ பக்கங்கள்** : 124

**PRICE/ விலை** : 350

**ISBN NUMBER** : 978-93-91115-95-1

PUBLISHER : Pandian Educational Trust,
3/350, Veterinary Hospital Backside,
Virudhunagar – 626001.
Tamil Nadu

PRINTER : Maheswari Publishers,
3/350, Veterinary Hospital Rear side,
Virudhunagar – 626001.
Tamil Nadu

**பதிப்புரிமை/Copyright © 2023 – கட்டுரையாளர்களுக்கு /Authors'**

அனைத்து பதிப்புரிமையும் பெறப்பட்டுள்ளது. இப்புத்தகத்தின் எப்பகுதியும் பதிப்பகத்தின் அனுமதியின்றி அச்சிடப்படக்கூடாது.

All rights reserved. No part of this book should be transmitted to any type of printed material without proper permission from the publisher.

# செங்காந்தள்

குறிஞ்சி நில தெய்வமான முருகனின் அடையாளப்பூ செங்காந்தள் பூ. போர் கடவுளான முருகன் பிறந்த கார்த்திகை மாதத்தில் இதன் பூ அகல்விளக்கு போல பூப்பதால் கார்த்திகைப் பூ என்று அழைக்கப்படுகிறது. *கரும்பு மூசாசச் சுடர்பூங் காந்தள் பெருந்தண் கண்ணி மிலைந்த சென்யன்* என்ற திருமுருகாற்றுப்படை பாடல், வண்டு இனங்கள் மொய்க்காத நல்ல மணமுடைய, நெருப்புப் போன்ற செந்நிறம் மற்றும் ஒளியுள்ள செங்காந்தள் பூவாலாகிய குளிர்ச்சியுடைய மாலையைச் சூடியவன் முருகன் என்று வர்ணிக்கிறது. தமிழர்களின் வீரம் மற்றும் கலாச்சார பெருமையைப் அடையாளப்படுத்தும் செங்காந்தள் மலரின் பெயரையே இவ்ஆய்வுநூல் வரிசைக்குச் சூட்டுவதழில் அகமகிழ்வடைகிறேன்.

செங்காந்தளின் அழகிய முகை தன் இதழ் விரியும் வரை வண்டுகளைக் காத்திருக்க வைக்காமல் வண்டு வந்தவுடன் அதனை எதிர்நோக்கி தம் இதழை விரித்து தேனைத் தந்து வண்டினை மகிழ்ச்சிப்படுத்தும். செங்காந்தள் தன்னுள் உள்ள தேனை அடக்கி வைத்திருப்பது போன்று கல்தோன்றி மண்தோன்றா காலந்தொட்டே தமிழ்மொழி அரிய இனிய செய்திகளைத் தன்னுள் அடக்கி வைத்துள்ளது.

தேனைப் பருக வண்டுகள் அணிவகுப்பது போல் தமிழ்ச் சமூகம் தமிழ்த்தேன் பருக தமிழ்ப்பேராசிரியர்கள், ஆர்வலர்கள் தங்கள் எழுத்தாற்றலை அர்ப்பணிக்க ஆயத்தமாயுள்ளனர். தமிழ் ஆர்வலர்களுக்காகத் துளிர்விடும் இப்புத்தகப்பகுதி நூல் பயணத்திற்குச் செங்காந்தள் என்று பெயரிட்டது சாலப் பொருந்தும்.

முருகன் என்றால் அழகன். அவன் கார்த்திகை மலரைச்சூடி பேரழகுடன் திகழ்வது போல் தமிழின் பல்வகை இலக்கிய செய்திகளைப் புதிய ஆய்வு நோக்கத்துடன் தமிழ்மொழியில் மாலையாகத் தொடுத்து வெளிக்கொணர்வதில் இச்செங்காந்தள் பயணம் இனிதே மலர்கிறது.

# மதிப்புரை



**முனைவர் ஆ. மகாலட்சுமி,**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, தமிழ்நாடு, இந்தியா.

மனிதன் தோன்றிய ஆரம்ப காலத்தில் எவையெல்லாம் அவனுக்கு அச்சம் ஏற்படுத்தியதோ அவற்றையெல்லாம் வழிபடத் தொடங்கினான். பின்பு மனித சிந்தனையாற்றல் வளரத் தொடங்கிய போது அவற்றுக்கெல்லாம் உருவம் கொடுத்து, வழிபடத் தொடங்கினான். இதனால் பல்வேறு வகையான மதங்களை அடிப்படையாகக் கொண்டு வழிபாடுகளும், அதற்கு அறம் சேர்ப்பதாக இலக்கியங்களும் தோன்றி வளரலாயின. இதன் அடிப்படையில் ஆய்வாளர் ந.தமிழரசி அவர்கள் *பிள்ளைத்தமிழ் கூறும் வழிபாட்டு முறைகள்* என்னும் தலைப்பில் கொங்கேழ் சிவத்தலங்களில் ஒன்றான திருமுருகன் பூண்டியில் அருள் பாலிக்கும் திருமுருகநாதப் பெருமான் உடனமர் இறைவி மீது பாடப்பட்ட பிள்ளைத்தமிழ் கூறும் வழிபாட்டு முறைகள் என்பது

பழம்பெரும் இலக்கியங்களை மீட்டுருவாக்கம் செய்து, வழிபாட்டு முறைகளை மக்கள் அறியும் வகையில் அமைந்துள்ளது.

*பாரதியார் கவிதைகளில் வழிபாடுகள்* என்னும் தலைப்பில் ஆய்வாளரான செ.பவித்ரா அவர்களின் ஆய்வுக் கட்டுரையில், வழிபாடு என்பது விண்ணப்பம் செய்தல், வழங்குதல் என்பன போன்ற பொருள்களில் வழங்கப்படுகிறது. பாரதியார் காளிதேவி, விநாயகர், சக்தி, மற்றும் முருகப்பெருமான் போன்ற கடவுள்களைப் போற்றி வணங்கி தன் விண்ணப்பத்தை வைப்பதாக இவ்வாய்வின் கருதுகோள் அமைந்திருப்பது சிறப்பு.

*சிலம்பு உணர்த்தும் வழிபாட்டு மரபுகள்* என்னும் தலைப்பில் முனைவர் வெ.பிரபாவதி அவர்களின் கட்டுரையில் ஆரம்ப கால மனிதன் இயற்கையைத் தான் முதலில் தெய்வமாக வழிபட்டான் என்பதற்குச் சான்றாக விளங்கும் இலக்கியம் சிலப்பதிகாரம் ஆகும். இதில் தான் மாமழையை, திங்களை, ஞாயிற்றை இறைவனாகக் கருதி இளங்கோ போற்றி வழிபட்டு தம் காப்பியத்தைப் பாடத் தொடங்கினார். பின்பு காப்பியத்தில் பாடப்பட்ட சிவன், முருகன், திருமால், இந்திரன், கொற்றவை, நடுகல், பத்தினி வழிபாடு எனப் பல தெய்வங்களின் வழிபாடுகள், வழிபடப்படும் சடங்கு முறைகள் ஆகியவற்றை வெளிப்படுத்தி இருக்கும் ஆய்வின் நோக்கம் சிறப்புடையது.

*சிலப்பதிகாரத்தில் நாட்டுப்புற தெய்வ வழிபாடு* என்னும் தலைப்பில் முனைவர் ஆ.மகபுபூ அவர்களின் ஆய்வுக் கட்டுரையானது சிலம்பில் கூறப்பட்டுள்ள சிறு தெய்வங்களின் வழிபாட்டு முறைகளையும், அத்தெய்வங்களின் வல்லமையையும் வெளிப்படுத்தியுள்ளது. பூதங்கள் என்று சொல்லப்படுவது மனிதனுக்கு நன்மை தரும் என்பதையும், சதுக்கபூதம், மதுராபதி தெய்வம் போன்றவை அரசனின் வழி வழியான செய்திகளைக் கூறி மக்களை நல்வழிப் படுத்துகின்றன என்ற செய்திகளையும், சிலம்பில் வெளிப்படுத்தி இருப்பது சிறு தெய்வ வழிபாட்டுக்குத் துணை சேர்த்திருந்தது பாராட்டுதற்குரியது.

ஆசிரியர் பணியோடு இதழியல் பணியையும், தமிழ் இலக்கிய இலக்கணச் செய்திகளைப் புதிய ஆய்வு நோக்கத்துடன் தமிழ்மொழி வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு இச்செங்காந்தள் புத்தகப்பகுதிப் பயணத்தையும் வெளிக்கொணர்வதில் மிகச் செம்மையுற செய்து வரும் பேராசிரியர் முனைவர் த.மகேஸ்வரி அம்மா அவர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**முனைவர் ஆ. மகாலட்சுமி**

# உள்ளடக்கம்


| வ.எண் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|
| 1. | பிள்ளைத்தமிழ் கூறும் வழிபாட்டு முறைகள்<br>திருமதி ந. தமிழரசி<br>முனைவர் ஆ. மகாலட்சுமி | 1-33 |
| 2. | பாரதியார் கவிதைகளில் வழிபாடுகள்<br>செ. பவித்ரா<br>முனைவர் ஆ. மகாலட்சுமி | 34-69 |
| 3. | சிலம்பு உணர்த்தும் வழிபாட்டு மரபுகள்<br>முனைவர். வெ. பிரபாவதி | 70-97 |
| 4. | சிலப்பதிகாரத்தில் நாட்டுப்புறத் தெய்வவழிபாடு<br>முனைவர் அ.மகபுபூ | 98-124 |

# Worshipping Methods in Pillaitamil

**Mrs. N. Tamilarasi,** Full Time Ph.d Scholar, Department of Tamil, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi-642001, Tamilnadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-2450-4671**

**Dr. A. Mahalakshmi,** Assistant Professor, Department of Tamil, Nallamuthu Gounder Mahalingam college, Pollachi-642001, Tamilnadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0001-5234-0750**
**DOI: 10.5281/zenodo.7776899**

## Abstract

*Man who lived in harmony with nature was afraid of natural calamities. The man was afraid of what he saw and started worshipping them all as gods. Sun, moon, planets, rain, and trees all became objects of worship. Then as civilization grew, they started worshipping the objects they worshipped. When religions such as Saivism, Vaishnavism, Jainism, Buddhism, Islam and Christianity appeared. According to those religions, people used to perform their worship. Innumerable devotional literature also came into being. One of the short pieces of literature, Pillaitamil, has sung about the Lord as a child for ten stages of life from Bhava to Niradal. This article is intended to explain the worship methods found in it.*

**Keywords**: Saivism, Vaishnavism, Jainism, Bhava, Neeradal, Muyangu

## References


[1] S.Goumareeswari, (Edited). *Text of Tirukkural Parimelazagar*, First Edition, December - 2002, Saratha Publishing House, Chennai-600005.

[2] Subureddiar, Na. *Spirituality and Science*. Pari Nilayam, 184, Broadway Chennai-600108.

[3] Dr. Ira Chenniappanar. *Arultharu Muyangapoomulai Valliammai Pillaithamil*. First Edition -2004, Arulmiku Thirumuruganathar Swami Trust, Thirumuruganpoondi.

[4] Dr. C. Balasubramanian, *Explanation of Tirupa*, First Edition, November- 1995, Paristanyam, Chennai-600 005.

[5] Parvathy. *Manikkavasaka Peruman Thiruvai Malarantaruliya Thiruvembavai* (with Text), E-Book Publication: http://FreeTamilEbooks.com

[6] Dr. C. Sangeeta. *Saivism and Bhava Worship*, Tamil Web Magazine, geotamil.com, March 22, 2021, Article.

[7] https://www.instanews.city/spirituality/-devotion Accessed 23 February 2023.


**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

 ISBN Number: 978-93-91115-95-1

# பிள்ளைத்தமிழ் கூறும் வழிபாட்டு முறைகள்

**திருமதி ந. தமிழரசி,** முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-2450-4671**

**முனைவர் ஆ. மகாலட்சுமி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0001-5234-0750**
**DOI: 10.5281/zenodo.7776899**

## ஆய்வுச்சுருக்கம்

*இயற்கையோடு இணைந்து வாழ்ந்த வந்த மனிதன் இயற்கையால் உண்டான பேரிடர்களை கண்டு அஞ்சினான். மனிதன் எதைக் கண்டு அஞ்சினானோ அவற்றையெல்லாம் இறையாக எண்ணி வழிபடத் தொடங்கினான்.சூரியன், சந்திரன், கோள்கள், மழை, மரங்கள் இவையெல்லாம் வழிபடு பொருள்களாயின. பின்பு நாகரிகம் வளர வளரத் தான் வழிபடும் பொருள்களுக்கு உருவம் கொடுத்து வழிபடத் தொடங்கினர்.சைவம், வைணவம், சமணம், புத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம் போன்ற சமயங்கள்*

 ISBN Number: 978-93-91115-95-1

*தோன்றியபோது அச்சமயங்களுக்கு ஏற்றாற்போல் மக்கள் தங்கள் வழிபாடுகளை மேற்கொண்டு வந்தனர். தங்கள் சமயக் கடவுளுக்கு விழா எடுத்துக் கொண்டாடினர். மனித வாழ்வில் இறைவழிபாடானது இன்றியமையாத இடத்தைப் பெற்றது. இறைவனுக்காக நோன்பு நோற்றல், நீராடல் போன்ற வழிபாடுகளைச் செய்து வந்தனர். எண்ணற்ற பக்தி இலக்கியங்களும் தோற்றம் பெற்றன .அவ்வகையில் சிற்றிலக்கியங்களில் ஒன்றான பிள்ளைத்தமிழானது இறைவனைக் குழந்தையாகப் பாவித்து காப்பு முதல் ஊசல் வரை பத்துப் பருவங்களாகப் பாடியுள்ளது. அதில் அமைந்துள்ள வழிபாட்டு முறைகளைப் பற்றி எடுத்துரைக்கும் பொருண்மையில் இக்கட்டுரையானது அமைந்துள்ளது.*

**திறவுச் சொற்கள்**: சைவம், வைணவம், சமணம், காப்பு, நீராடல், முயங்கு.

**முன்னுரை**

சைவ இலக்கியங்கள் சிவபெருமானின் சிறப்புகளையும், திருவிளையாடல்களையும் பற்றிக் குறிப்பிடுவதாக அமைகிறது. சிவபெருமான் மீது பல இலக்கியங்கள் பாடியுள்ளனர். பிறவா யாக்கைப்

 ISBN Number: 978-93-91115-95-1

பெரியோன் என்பதால் சிவபெருமான் மீது பிள்ளைத்தமிழ் இலக்கியம் பாடப்பெறவில்லை. சிவனுடன் உடனமர் அம்மை மேல் பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் பாடப்பட்டுள்ளன.அவிநாசி, கரூர், வெஞ்சமாக்கூடல், திருச்செங்கோடு, கொடுமுடி, பவானி, திருமுருகன்பூண்டி போன்ற கொங்கேழ் சிவத்தலங்களில் ஒன்றான திருமுருகன்பூண்டியில் அமைந்துள்ள திருமுருகநாதப் பெருமான் உடனமர் இறைவி மீது பிள்ளைத்தமிழ் இலக்கியம் பாடப்பட்டுள்ளது. இந்த நூலில் அமைந்துள்ள வழிபாடு தொடர்பான செய்திகளை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

**முயங்கு பூண்முலை வல்லி-பெயர் விளக்கம்**

கொங்கு நாட்டில் திருமுருகன்பூண்டித் திருத்தலத்தில் திருமுருகநாதசுவாமி உடனமர் முயங்கு பூண்முலை வல்லியம்மை திருக்கோயில் அமைந்துள்ளது. இங்கு எழுந்தருளியுள்ள அன்னை மீது அருள்தரு முயங்கு பூண்முலை வல்லியம்மை பிள்ளைத் தமிழ் என்ற நூலை சித்தாந்த ஞான சரஸ்வதி முனைவர் ந.இரா. சென்னியப்பனார் பாடியுள்ளார்.

**முயங்குதல் - உயிர் அறிவில் அத்து விதமாகக் கலந்து நிற்றல் - பூண் - கலந்து நின்று அறிவு விளக்கம் பெற வைத்து ஈடேற்றுவதில் உறுதிபூண்டிருத்தல்**

 ISBN Number: 978-93-91115-95-1

**முலை - அபர பர ஞானங்களாகிய இரண்டு ஞானங்கள்**

குறை அறிவுடைய உயிர்களுக்கு அபர பர ஞானங்களாகிய இரண்டு ஞானங்களையும் உயிர் அறிவில் அத்துவிதமாகக் கலந்து நின்று அறிவு விளக்கம் பெற வைத்து, ஈடேற்றுவதில் உறுதிபூண்டு இருக்கின்ற அன்னை என்பதே முயங்கு பூண்முலை வல்லி என்ற பெயரால் உணர்த்தப்படும் பொருளாகும்.

**திருமுருகன்பூண்டி**

கொங்கு நாட்டில் அமைந்துள்ளபாடல் பெற்ற சிவத்தலங்களில் ஒன்று திருமுருகன்பூண்டி. சுந்தரமூர்த்தி சுவாமிகளால் பாடல் பெற்ற தலமாகும்.சுந்தரர் தன்னிடம் மட்டுமே பொருளைப் பெற வேண்டும் என்ற நோக்கில் சேரமான் பெருமாள் நாயனாரிடம் பெற்ற செல்வத்தை திருமுருகநாத பெருமான் கவர்ந்தார். பின்பு சுந்தரர் திருமுருகநாதப் பெருமான் மீது தமிழ்ப் பாடி இறைவனால் கவரப்பட்ட பொருளை மீண்டும் பெற்றார்.இத்திருத்தலத்தில் உள்ள இறைவனை வணங்கினால் மனநலம் குன்றியவர்கள் தெளிவு பெறுவார்கள் என்ற நம்பிக்கை உண்டு.இத்தலம் அமைந்துள்ள கொங்கு நாட்டை,

**ஆள அறிவுடை ஆன்றோர் செறிந்திடும் காஞ்சி**
**என்றோர் தொன்றூரும்**


ISBN Number: 978-93-91115-95-1

**ஏகன் உடனமர் ஏகை இடனமர் ஏர்கொங்**
**கென்றோர் நன்றேயம் (அருள்தரு முயங்கு பூண்முலை வல்லியம்மை பிள்ளைத்தமிழ், செங்கீரைப் பருவம், பாடல்-11)**

என்ற வரிகளில் ஒருவனிடத்தில் இருக்கின்ற ஒருத்தியாக (அம்மையப்பராக) இறைவன் அமர்ந்திருக்கும் கொங்குநாடு அழகு மிகச் சிறந்தது, நல்ல நாடு என்று குறிப்பிடுகிறார். மேலும், இத்திருத்தலத்தில் அர்ச்சனையானது தமிழில் நடைபெறுகிறது என்பதை,

**உரிமை உயர்வுறு பெருமை மிகவுறு**
**உறுதித் தமிழ்மொழி அர்ச்சனை யாக்கினர்**
**உததி உவகையில் உறைவர் தமிழ்வழி**
**உதகக் குடமுழுக் குங்குவந் தாட்டினர் (அருள்தரு முயங்குபூண்முலை வல்லியம்மை பிள்ளைத்தமிழ், காப்புப் பருவம், பாடல்-3)**

என்று கூறுகிறார். கடல் போன்ற பெருமகிழ்ச்சியில் இறைவனுக்குத் தமிழ்வழியில் அர்ச்சனையும், மழை போன்று நீர் சொரியும் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவையும் கொங்கு நாட்டு மக்கள், மகிழ்வோடு சிறப்பாகச் செய்தனர். அறங்களைச் செய்து பிறவி அறுக்கும் ஆடவர்களையும் மகளிரையும் உடையது கொங்கு நாடு என்பதை அறிய முடிகிறது.


ISBN Number: 978-93-91115-95-1

## வழிபாடு

நோன்பு நோற்பவர்கள் தங்கள் சமய முழுமுதற் கடவுளைத் தங்கள் சமய விதிமுறைகளின்படி வீட்டிலோ, கோயில்கள், பள்ளிவாசல்கள், கிறிஸ்துவ ஆலயங்கள் போன்றவற்றிற்கோ சென்று வழிபடுவர்.அவரவர் மதங்களில் போற்றப்படும் புனித நூல்களைத் தாங்கள் கடைப்பிடிக்கும் விரதங்களுக்கேற்ப பாராயணம் செய்வர். பிரார்த்தனைகளும், பூசைகளும் சிறப்பாக நடைபெறும். இவ்வழிபாட்டு முறைகளானது நோன்பாளியின் மனதைத் தூய்மைப்படுத்தும் சாதனமாக அமைகிறது. மேலும், அவர்களுக்கு உயர்ந்த ஒழுக்க நெறியையும் கற்றுத்தருகிறது. நோன்பு நாட்களில் கடைபிடிக்கும் அற ஒழுக்கங்கள் எல்லாம் நோன்பாளியின் மற்ற காலங்களிலும் தொடர்ந்து வந்து அவர் வாழ்நாள் முழுவதும் கடைப்பிடிக்கப்படும் பயிற்சியாக அமைகிறது. இப்பழக்கங்கள் ஒருவரை நலமுடன் வாழ வழி அமைக்கிறது. **(பாவை நூல்களில் உளவியலும் அறிவியலும், பெ. கண்ணதாஸ்,பக்க எண் - 34-35)**

ஒரு செயலைச் செய்யும் முன்பு அச்செயலானது சிறப்பாக நடைபெற வேண்டும் என்பதால், இறைவனை வழிபட்டுப் பின்பு எந்தச் செயலையும் தொடங்குவது

 ISBN Number: 978-93-91115-95-1

வழக்கமாகும். அவ்வகையில் இப்பிள்ளைத்தமிழ் நூலை இயற்றிய முனைவர் ந. இரா சென்னியப்பனார் காப்புப் பருவத்தில் திருமால், முருகநாதர், மாமாங்கவிநாயகர், முருகப்பெருமான், சமயக்குரவர், சிவனடியார், சாத்திரஞானியார், யாப்புநூல் புலவர், திருநீறு, ஐந்தெழுத்தும் காண்டிகையும் என்ற முறையில் பாடியுள்ளார். திருமுருகன்பூண்டியில் உயிர்களை ஈடேற்றவும் வேண்டும் அவர்கள் வேண்டும் பயன்களைக் கொடுக்க வேண்டும் என்ற பெருவிருப்பத்தோடும் எழுந்தருளியிருப்பவர் முயங்கு பூண்முலை அன்னை ஆவாள்.அந்த அன்னை மீது பாடப்படும் இப்பிள்ளை தமிழ் இலக்கியத்தை காக்க வேண்டும் என்பதை,

> **வீற்றிருந்த பூண்டிமா நகரதனில் விழைவடிவாய் வியங்கொண்ட பயன்கொடுக்கும் முயங்குபூண் முலையன்னை வீடுதரும் பேறு தரும் பிள்ளைக் கவி காக்கவென்றே (அருள்தரு முயங்கு பூண்முலை வல்லியம்மை, காப்புப் பருவம், பாடல்- 4)**

என்று கூறுகிறார். இப்பிள்ளைத் தமிழ் பாடல்களைப் படிப்போருக்கு பாச நீக்கம் எனப்படும் விடுதலையும், சிவப்பேறு எனப்படும் இன்ப ஆக்கமும் கிடைக்கப்பெற


ISBN Number: 978-93-91115-95-1

வேண்டும் என்று மாமாங்க விநாயகரின் திருவடிகளை வணங்குவதாக அமைகிறது.

**திருநீறு வழிபாடு**

சிவ சின்னங்களில் ஒன்றான திருநீற்றை பிள்ளைத்தமிழ் நூலை காக்க வேண்டி வழிபடுவதை,

**மறைத்திடக் கொடுப்பது மறைத்திறம் உரைப்பது**
**மதித்துணி சடைக்கணி அறவோனின்**
**வளத்தினை நலத்தினைத் துதிப்பதில் வகுத்தநல்**
**வளப்பதி கமுற்றுரை திருஞானம்**
**மனத்துறை மருத்துவத் தனிக்கவி மதித்திடும்**
**மகத்துவ மணிப்பொடி பணிவோமே (அருள்தரு முயங்கு பூண்முலை வல்லியம்மை பிள்ளைத்தமிழ், காப்புப் பருவம், பாடல்- 10)**

என்று குறிப்பிடுகிறார். பிறைச்சந்திரனைச் சடையில் அணிந்திருக்கின்ற ஒப்பற்ற இறைவனாகிய சிவபெருமானின் பெருமையையும் நலத்தையும் போற்றி வணங்குவதாக திருஞானசம்பந்தர் மருத்துவத்தன்மை வாய்ந்த திருநீற்றுப்பதிகப் பாடல்களைப் பாடியுள்ளார். அத்தகைய சிறப்பு பொருந்திய ஒளிமிக்க திருநீற்றுப் பொடியினை முயங்குபூண்முலை அன்னை மீது பாடப்படும் பிள்ளைத்தமிழ் கவிகளைக் காக்க வேண்டும் என்று கூறி வணங்கப்படுகிறது.

 ISBN Number: 978-93-91115-95-1

**அடியார்களை வழிபடுதல்**

நாள்தோறும் நெற்றியில் திருநீறு பூசி, ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதி சிவபெருமானை வணங்கும் அடியார்களைப் போற்றி வணங்குவதை,

> **நீறணி நெற்றியினார் நிரையக்கு மாலையினார்**
> **நித்தநித்தம் கோயில் சென்று நின்மலனை வழிபடுவார்**
> **நெக்குநெக் குருகிநிலா**
> **வணியானை நினைத்திடுவார்**
> **ஆறணி செஞ்சடையான் அடிவணங்கும் அன்புடையார்**
> **அஞ்செழுத்தை நெஞ்சழுத்தி அனுதினமும் கணித்திடுவார்**
> **அனையவர் தம் திருவடியை மனமுருக வாழ்த்திடுவோம் (அருள்தரு முயங்குபூண்முலை வல்லியம்மை பிள்ளைத்தமிழ், காப்புப் பருவம், பாடல் -8)**

என்று கூறுகிறார். சிவபெருமானை வழிபடும் சிவனடியார்கள் உருத்திராக்க மணிகளை வரிசையாக அணிந்தவர்கள். தினந்தோறும் திருக்கோயில் சென்று முறையாக வழிபடுபவர்கள். சிவபெருமானின் திருவடிகளில் இடையறா அன்பு உடையவர்கள்.


ISBN Number: 978-93-91115-95-1





இத்தகைய சிறப்புடைய சிவனடியார்களை அம்மை மேல் பாடிய பிள்ளைத் தமிழைக் காத்தல் பொருட்டு அடியார் பெருமக்களின் திருவடிகள் வணங்கப்படுகிறது என்பதை அறிய முடிகிறது.

**சமயக்குரவர் வழிபாடு**

வேதம் நான்கினும் மெய்ப்பொருள் அஞ்செழுத்து என்று ஓதிய ஞானசம்பந்தரையும்,அப்பூதியடிகளின் அன்பு மகனின் மீதிருந்த நஞ்சை நீக்கிய நாவரசப் பெருமானையும், வேதம் ஓதும் அந்தணனின் மகனை முதலை வாயிலிருந்து மீட்டெடுத்த சுந்தரமூர்த்தி சுவாமிகளையும், தில்லை வாழ் அந்தணர்கள் ஆகிய வேதியர்களுக்கு திருவாசகத்தின் பொருள் கூத்தப் பெருமானே என்று காட்டிய மாணிக்கவாசகப் பெருந்தகையையும் வாழ்த்தியுள்ளார். அம்மை மீது பாடிய இப்பிள்ளைத்தமிழ் ஆனது சிறப்புப் பெற்று நிலைத்திடத் தமிழ் வேதம் ஓதிய சமயக் குரவர் நால்வரின் பொற்பாதங்களையும் வழிபட்ட வேண்டும் என்பதை,

**வேதநான்கின் மேன்மெய்ப் பொருள் அஞ்செழுத்தே என்றோதினர்**
**வேதவித்தாம் அப்பூதியார் வேசறமகன் விடம்போக்கி**
**வேதனைவெ ளித்தலுறு வீரதைசெய் நாவரசர்**

 ISBN Number: 978-93-91115-95-1

**வேதமோதி யனின்மகனை விருககரா விடுவித்தார்**
**வேதியர்க்குத் தில்லையம்பல வனேமுதல்வர் எனவிளம்பினார்**
**வேதத்தமிழ் நால்வர்நற் பாதம் பணிந் தேத்துவாம்**
**(அருள்தரு முயங்குபூண்முலை வல்லியம்மை பிள்ளைத்தமிழ், காப்புப் பருவம், பாடல் - 7)**

என்ற வரிகளில் குறிப்பிடுகிறார். இத்தகைய சமயக்குரவர்கள் ஆகிய நால்வரும் சைவசமயத்திற்குப் பெருந்தொண்டு ஆற்றியுள்ளனர். பொதுவாக சிவாலயங்களின் பிரகாரத்தில் நால்வரின் சிலைகளும், தனிச்சந்நிதிகளும் அமைக்கப்பட்டு வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன என்பதை அறிய முடிகிறது.

**யாப்பு நூல் புலவர் வழிபாடு**

ஒரு நூலை இயற்றும் முன் அந்நூலானது சிறப்பான முறையில் அமைய வேண்டும் என்று இறைவனை வேண்டி இறைவாழ்த்து எழுதுவது மரபு. இந்நூல் ஆசிரியரான ந. இரா. சென்னியப்பனார் நம் முன்னோர்கள் இயற்றிய பழமையான இலக்கண நூல்களையும் அந்நூல்களை இயற்றிய ஆசிரியர்களையும் போற்றிக் காப்புப் பருவத்தில் பாடியுள்ளார். இதை,


ISBN Number: 978-93-91115-95-1

**நாப்புக்கு முதனூல்செய் நானிலத்துத் தொல்காப்பிய**
**நாதர்முதல் நாவல்லோர் நாளடைவில் யாப்பிலக்கண**
**நாயகர்தம் தூயவடி நாந்தலைமேல் ஏத்துவோமே**
**(அருள்தரு முயங்குபூண்முலை வல்லியம்மை பிள்ளைத்தமிழ், காப்புப்பருவம், பாடல்- 9)**

என்று குறிப்பிடுகிறார். இலக்கணத்தை முறையாக அமைத்து முதல்நூல் செய்த தொல்காப்பியர் முதலாக நாவன்மை மிக்க செய்யுள் இலக்கணம் செய்த புலவர்களின் திருவடிகளைத் தலைமேல் வைத்துப் போற்றிப் பிள்ளைத்தமிழ் நூலைக் காக்க வேண்டுமென்று வேண்டுவதாக அமைகிறது.இவ்வாறாக பிள்ளைத்தமிழ் நூலைக் காக்க இறைவனையும், அடியார்களையும், சமயக்குரவர்களையும், யாப்பறி புலவர்களையும் வாழ்த்தி வேண்டிய பகுதி சிறப்பானதாக அமைந்துள்ளது என்பதை அறிய முடிகிறது.

**மர வழிபாடு**

மக்கள் வழிபடும் அனைத்து ஆலயங்களிலும் தலவிருட்சம் உண்டு. இத்தலவிருட்சமானது ஆலயத்திலுள்ள இறைவனுடன் தொடர்புடையதாகவே அமைந்துள்ளது. வில்வம் சிவனுக்கும், வேப்பமரம்

 ISBN Number: 978-93-91115-95-1

மாரியம்மனுக்கும், அரசமரம் விநாயகருக்கும் தல விருட்சங்களாக அமைந்துள்ளன. இத்தல விருட்ச மரங்களானது அதிக மருத்துவ குணம் கொண்டதாகவும், அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் பொருட்களில் ஒன்றாகவும் அமைந்துள்ளது. உதாரணமாக வேப்பமரக் குச்சிகளில் பல் தேய்த்தல் பல காலமாக இருக்கும் வழக்கமாகும்.அரசமரமானது பல மருத்துவ குணங்களை கொண்டது. அதன் இலை முதல் வேர் வரை அனைத்து அனைத்தும் மருத்துவ குணம் உடையது. அரச மரத்தைச் சுற்றினால் குழந்தை இல்லாதோர்க்குக் குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கையும் உண்டு.

அரச மரத்தின் காற்று கருப்பைக் கோளாறுகளைப் போக்கும் தன்மையுடையது. அதுபோல் மூளையின் செயல்பாடுகளைத் தூண்டி, மன அமைதியைக் கொடுக்கும் அரச மரம் நாளொன்றுக்கு 1800 கிலோ கரியமில வாயுவை உட்கொண்டு, 2400 கிலோ பிராண வாயுவை வெளியிடுகிறது. அரசமரத்தின் வேர்ப் பகுதியில் பிரம்மனும், நடுவில் திருமாலும், உச்சியில் ஈசனும் அருள்புரிவதாக புராணங்கள் கூறுகின்றன. அரசமரம் ராச விருட்சம் ஆகும். **(https://www.instanews.city/spirituality/-devotion)**

இத்தகைய மகத்துவம் மிகுந்த மரங்கள் சூழ்ந்துள்ள பகுதியில் அம்மை வீற்றிருக்கிறாள் என்பதை,

 ISBN Number: 978-93-91115-95-1

**வளவினில் வெட்சியும் வண்மலர் வகுளமும்**
**வளவிதழ்க் கொன்றையும் பிடவொடு வள்ளையும்**
**வழையும் குருந்தும் வளையும் கோடலும்**
**தளவினி தழைத்திடும் தன்பூண்டி நகரினில்**
**தள்ளையை வல்லியைத் தத்தையை சங்கரியை**
**தருணையை கருணையைத் தற்பரையைக்**
**காக்கவென்றே (அருள்தரு முயங்குபூண்முலை வல்லியம்மை பிள்ளைத்தமிழ். காப்புப் பருவம் - பாடல் 6)**

என்று கூறுகிறார். செழுமை மிகுந்த வெட்சி, தட்பம் மிகுந்த மகிழம், நல்ல இதழ்களைக் கொண்ட கொன்றை, பிடா, வள்ளை, சுரபுன்னை, குமுதம், காந்தள், முல்லை ஆகியவை இனிதாகக் தழைக்கும் இயற்கை வளம் மிக்க திருமுருகன்பூண்டியில் பூண்முலை வல்லியம்மை வீற்றிருந்து உயிர்களுக்கு அருள் செய்கிறாள். இவ்வாறு மர வழிபாட்டின் அடிப்படையிலேயே அனைத்துக் கோயில்களிலும் தலவிருட்சமானது அமைந்துள்ளது என்பதை அறியமுடிகிறது.

மேலும், மாமரமாக நின்ற சூரபத்மனை இரு கூறாகப் பிளந்து அசுரர் கூட்டத்தை அழித்த முருகப்பெருமானை கேடான குணத்தை உடைய அசுரர்களைக் கொன்ற பாவம் தொடர்ந்து வந்ததால்

 ISBN Number: 978-93-91115-95-1

திருமுருகன்பூண்டி மாநகரில் வந்து குருக்கத்தி மரநிழலில் இருந்த என்றும் நிலைபெற்ற திருமுருகநாதப் பெருமானை வழிபட்டுப் பாவம் நீங்கினான் என்பதை,

> **குலைகீழாய் அசுரர்விழச் சுரர்வாழச் செய்தபிரான் குணக்கேடற் கொன்றபாவம் குறுகிவரக் குருமுருகன் பூண்டிமா நகர்போந்து குருக்கத்திக் கீழமர்ந்த நிலைநீங்கி நிலையான முருகநாதப் பெருமானை நிகளநீங்க வழிபட்டதாய் (அருள்தரு முயங்குபூண்முலை வல்லியம்மை பிள்ளைத்தமிழ், செங்கீரைப் பருவம், பாடல்- 6)**

என்று குறிப்பிடுகிறார். இவ்வாறு மர வழிபாடு பழங்காலத்திலேயே இருந்தது என்பதை அறிய முடிகிறது. மேலும் முற்காலத்தில் மரங்களுக்குக் கீழே தெய்வங்களை வைத்து வழிபட்டு வந்ததாலும் இம்மர வழிபாடு உருவானது என்பதை அறிய முடிகிறது. அதிக மருத்துவ குணம் கொண்ட அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் மரங்களை வெட்டக் கூடாது என்பதற்காகவும் மரங்களை கடவுள் பெயர் கூறி வழிபட்டனர் என்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது.

**மழை வழிபாடு**

மரங்களை வெட்டி இயற்கைக்கு எதிராக

 ISBN Number: 978-93-91115-95-1



செயல்படும் போது இயற்கையானது உயிர்களை வதைக்கும். அவ்வாறு மழையானது பொய்த்தால் மழை பெய்ய வேண்டி வருணனை வழிபடுவர். அவ்வாறு வழிபாடு செய்தால் மழை பெய்யும் என்பது மக்களின் நம்பிக்கையாக இருந்தது. இதை,

> **தழைத்த தருக்கள் விதைத்த வித்துக்கள் தக்கநீர்பக் கமின்மையால்**
> **தகர்ந்த வேர்கள் தவிர்ந்த முளைகள் தப்பியபட் டம்தகர்மனம் மழைத்து ளிபார்த்துப் பார்த்திழைத்த உள்ளங்கள் மயங்கியம னஞ்சோர்ந்து மழைமே கம்வாரா மையால்மனங் கலங்கித்தான் மாவேது தாமேது இழைத்துத் தடம்பார்த்தே இடம்பார்த்து ஏங்கியேங்கி**
> **இனைந்தினைந் துநொந்திட்டு இனிவருமா மாமேகம் இன்புயல்தான் என்றிங்குறும் ஏங்கியுள் ளந்தாங்கி பிழைத்த வழிபாட்டைச் செய்யமழை பொழியச்செய் பெருந்தேவி! வருகவே! (அருள்தரு முயங்குபூண்முலை வல்லியம்மை பிள்ளைத்தமிழ், வருகைப் பருவம், பாடல் - 4)**

என்று குறிப்பிடுகிறார். தழைத்த மரங்கள், விதைக்கப்பட்ட விதைகள், போதிய நீர் கிடைக்கப் பெறாமையால் காய்ந்து போன வேர்கள், வாடிப்போன

 ISBN Number: 978-93-91115-95-1

முளைகள், பருவம் மாறிப் போனதால் இனி மழைத்துளி எப்போது விழும் எனப் பார்த்து இழைத்துப் போனது உள்ளம். அறிவுத் தெளிவின்றி மயங்கி மனம் சோர்வடைந்து மழை பெய்யக்கூடிய மேகம் வானத்தில் காணப்படாமையால் இனி மழையே பெய்யாது என்று கலக்கம் எய்தியவர்கள். மழை பெய்யாமைக்குச் சரியான காரணத்தைச் சிந்தித்து மழை வரும் திசையைப் பார்த்து ஏக்கமுற்று மனம் நொந்து வருந்தினர். பின் மனதில் நினைந்த வழிபாட்டைச் செய்யத் தவறியதால் தான் மழை பெய்யவில்லை என்பதை உணர்ந்து வழிபாடு செய்தனர். வழிபாடு செய்ததன் பயனால் பூண்முலை வல்லியம்மை மழையைப் பெய்வித்தாள். வானிலிருந்து பெய்யும் மழையானது பொய்த்தால் உயிர்களை உள்ளிருந்து பசி வாட்டும் என்பதை,

> **விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து**
> **உள்நின்று உடற்றும் பசி (திருக்குறள், வான்சிறப்பு - குறள் 3)**

என்று வள்ளுவரும் குறிப்பிடுகிறார். இவ்வாறு மழையை வேண்டி வழிபாடு செய்யும் வழக்கம் தொன்று தொட்டு இருந்து வருகிறது. ஆடி மாதம் மழை வேண்டி அம்மனுக்கு கூழ் ஊற்றும் வழக்கம் இன்றும் நடைபெற்று வருகிறது.

 ISBN Number: 978-93-91115-95-1

**மார்கழி நீராடல் வழிபாடு**

மார்கழி நீராடலானது மழை பெய்யவும், ஒருமித்த கணவனைப் பெறும் வகையிலும் அமைந்த ஒரு வழிபாடாகும். திருப்பாவை, திருவெம்பாவையில் இவ்வழிபாடானது மார்கழி நீராடல் எனவும், சங்க இலக்கியங்களில் தைந்நீராடல் என்றும் குறிப்பிடுகிறது. திருப்பாவை திருமாலின் சிறப்புகளை கூறுவதாகவும் திருவெம்பாவை சிவபெருமானின் சிறப்புகளைக் கூறுவதாகவும் அமைந்துள்ளது. இறைவனிடம் மழை வேண்டிப் பாடுவதாக திருப்பாவையில்,

**ஆழிமழைக் கண்ணா ஒன்று நீ கைகரவேல்**
**ஆழியுள் புக்கு முகந்து கொடார்த்தேறி**
**ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்துப்**
**பாழியந் தோளுடைப் பத்மநாபன் கையில்**
**(திருப்பாவை, பாடல்- 4)**

என்ற பாடல் அமைந்துள்ளது. வருணபகவானிடம் சாரங்கன் விடும் தொடர் அம்புகளைப் போல நிற்காமல் மழையைப் பெய்ய விடு, உலகில் நல்லவர்கள் வாழ உன் மழை உதவட்டும் என்று வேண்டுவதாக அமைகிறது. மேலும் திருவெம்பாவைப் பாடலில்

**முன்னிலைக்கடலைச் சுருக்கி எழுந்துடையாள்**
**என்னத்திகழ்ந்து எம்மை ஆளுடையாள்**


ISBN Number: 978-93-91115-95-1

**மின்னிப் பொலிந்து எம்பிராட்டி திருவடிமேல்**
**பொன்னம் சிலம்பின் சிலம்பித் திருப்புருவம்**
**(திருவெம்பாவை, பாடல்- 16)**

என்ற வரிகளில் சிவனின் துணைவியான பார்வதி தேவி சிவனின் அடியார்களுக்கு வழங்கும் அருளைப் போல மழையே நீ விடாமல், பொழிவாயாக என்று வேண்டுவதாக அமைந்துள்ளது. இவ்வாறு பண்டைய காலம் முதல் தற்காலம் வரை மழை வழிபாடானது வழக்கில் இருந்து வருகிறது என்பதை அறிய முடிகிறது.

**தீர்த்தம் ஆடல் வழிபாடு**

ஆலயங்கள் அமைந்துள்ள இடங்களில் புண்ணிய தீர்த்தங்களும் அமைந்திருக்கிறது. இத்தீர்த்தத்தில் மூழ்கி எழுந்தால் பலவிதமான நோய்கள் குணமாகும் என்பது நம்பிக்கையாக உள்ளது. இதை,

**மாதவி வனத்து மாமுனிவர் தாமகிழும்**
**மாதானம் நிதானமாம்**
**வழங்கி வணங்கி மலரடி பணிந்து**
**மாதேவா! காதேவாயென**
**போதவிழ் பூவிட்டு நாத்தளரப் புகழ்த்தேத்தி**
**பொன்வெள்ளி நன்திங்கள்**
**பொலிவிலாக் கிரணநாள் துருவாசப்**
**பேர்ப்பொய்கை புகுந்தாடியே மிகமகிழ்ந்தே**


ISBN Number: 978-93-91115-95-1

**(அருள்தரு முயங்குபூண்முலை வல்லியம்மை பிள்ளைத்தமிழ், நீராடல் பருவம், பாடல் - 5)**

என்று கூறி, மாதவி வனம் ஆகிய திருமுருகன்பூண்டியில் வாழக்கூடிய பெரிய முனிவர்கள் மிகவும் மகிழ்ந்து, பொன் தானம் செய்து, வெள்ளி,திங்கள் மற்றும் விளக்கம் இல்லாத கிரகண நாட்களிலும் துர்வாசர் பொய்கையில் அமைந்த தீர்த்தத்தில் குளித்தால் குற்றங்கள் நீங்கி மேன்மை அடைவர் என்று குறிப்பிடப்படுகிறது. மேலும் மாமாங்கத் தீர்த்தத்திற்கு அருகில் அமைந்த ஆயிரம் கண்ணுடையானாகிய இந்திரத் தீர்த்தமானது மருத்துவ தன்மை உடையது என்பதை,

**மாப்புகழ் மாமகத்து மாந்தர்புகழ் மேதீர்த்தம்**
**மருங்கமைந் தஆயிரங் கண்ணான்பெயர் மன்தீர்த்தம் மண்ணுலகில் தண்புனல் வண்புனல் மருந்தீர்த்தம் மூப்புகழ் மூவிருதிங் கள்முறை படிந்தாடின் முத்தியாம் சீர்முத்தி, சிவன்முத்தி, பதமுத்தி முழுமுக்தி பரமுத்தி முற்றும்வந் தணைந்திடும் (அருள்தரு முயங்குபூண்முலை வல்லியம்மை, நீராடல் பருவம், பாடல் - 6)**

என்று கூறுகிறார். உயர்ந்த புகழுடைய இத்தீர்த்தத்தில் ஆறுமாதம் முறையாக நீராடினால் முக்தி என்று

 ISBN Number: 978-93-91115-95-1

சொல்லப்படும் சிவன் முக்தி, அபர முக்தி, முழு முக்தி, பர முக்தி எல்லாம் கிட்டும் என்று குறிப்பிடுகிறார்.

**திருமுருகன்பூண்டி மெய்ஞ்ஞானத் தீர்த்தம்**

திருமுருகன் பூண்டியில் அமைந்துள்ள மெய்ஞ்ஞானத் தீர்த்தத்தில் கார்த்திகை மாதத்தில் மூழ்கிக் குளித்தால் நோய் நீங்கி நன்மைகள் உண்டாகும் என்பதை,

> **செய்தொழில் மிகுதியினால், பொய்கலவி சேர்புணர்வால் சேயனையர் தாயனையர் சேயிழையார்ச் சேர்ந்துபலர்க் கூடிய சேர்க்கையாலே செல்லுணவு நல்லுணவு எய்தொழில் எதுவுமின்றி இரையெடுத் துண்டிடலால் எய்துறு நோய், செய்தவினைகள் எண்ணிலவாம், எட்டிய குட்ட நோய், பால்வினை நோய் என்புருக்கும் துன்புருக்கி, மெய்தொழில் மெய்நடுக்கம், பெரும்புண்ணு, மூட்டுவாதம், முயலகனோய், கயரோகம் மேல்பூண்டி மெய்ஞ்ஞான மேல் தீர்த்தம் வான்தீர்த்தம் மேயாரல் தோய்ந்தாடினே (அருள்தரு முயங்குபூண்முலை வல்லியம்மை பிள்ளைத்தமிழ், நீராடல் பருவம், பாடல் - 8)**


ISBN Number: 978-93-91115-95-1

ஆசிரியர் குறிப்பிடுகிறார். ஓய்வின்றி தொழில் செய்ததன் காரணமாகவும், பொய்யான உறவுமுறை சேர்க்கையினாலும், செய்யக் கூடிய தொழில் எதுவும் இல்லாமல் இறை எடுப்பதுபோல் உண்பதாலும் வரக்கூடிய நோய்கள் எண்ணில்லாதன. செய்த தீய வினைகள் காரணமாக வரும் நோய்கள், விரல்களை குறுக்கும் குட்ட நோய், பால்வினை நோய்கள், எலும்பினை உருக்கித் துன்புறுத்தும் எலும்புருக்கி நோய், தொழில் செய்யக்கூடிய உடம்பின் உறுப்புகளில் ஏற்படும் நடுக்கம், பெரும் புண், மூட்டுவாதம், முயலகன் நோய், சயரோகம் முதலான நோய்களில் துன்புறுவோர் மேன்மை தாங்கிய திருமுருகன் பூண்டியில் மேற்குப்புறம் அமைந்த மெய்ஞ்ஞான தீர்த்தமாகிய உயர்ந்த தீர்த்தத்தில் கார்த்திகை மாதத்தில் மூழ்கிக் குளித்தால் நோய் நீக்கம் பெற்று உய்தி பெறுவர் என்று குறிப்பிப்படுகிறது.

ஆலயங்களில் அமைந்துள்ள ஒவ்வொரு தீர்த்தத்திற்கும் ஒரு புனிதத் தன்மை உண்டு. தீர்த்தக்குளத்தில் நிகழ்ந்த அசாதாரண நிகழ்வுகளைக் கொண்டும் அவை சிறப்படைகின்றன என்பதை அறிய முடிகிறது.

 ISBN Number: 978-93-91115-95-1

**திருவாதிரை வழிபாடு**

மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரை நட்சத்திரத்திற்கு முன்பு வரும் ஒன்பது நாட்களுக்கு முன்னர் இந்த நோன்பை தொடங்குவர். பத்தாம் நாள் திருவாதிரை நாளாகும். சிவன் கோயில்களில் இத்திருவாதிரையை ஆருத்ரா தரிசனம் என்ற பெயரில் வழிபடுகின்றனர். இன்நோன்பைத் திருவெம்பாவை நோன்பு என்றும் அழைக்கின்றனர்.இந்நோன்பு திருமணப் பேற்றினை அருளும் தன்மையுடையது. மேலும் மார்கழியில் திருவெம்பாவைப் பாடல்களைக் கூறினால் சிவனருள் பெற்ற அடியாரே தமக்குக் கணவராக அமைவர் என்பது நம்பிக்கை. **(சைவமும் பாவை வழிபாடும், தமிழ் இணைய இதழ், geotamil.com, முனைவர் சி. சங்கீதா, மார்ச் 22, 2021, கட்டுரை)**

மகளிர் இறைவனின் கருவறை வரை சென்று திருவாதிரை வழிபாடு செய்ததை,

**ஆலால சுந்தரனார் நாவாரப் பாடியநல்**
**ஆர்பூண்டி இடுகுநுண் ணிடையழகி பாகத்தன்**
**ஆதிரைநாள் மார்கழிமா தப்பாவைச் சாற்றினில்**
**ஆலால சுந்தரநங் கைசவுண்ட யநங்கை**
**ஆன்றதிரு வுணாழியார் நங்கையோ டனைவரும்மே அருநடனம் புரிந்தறைமூன்றும்**

 ISBN Number: 978-93-91115-95-1





**கடந்துள் சென்றங்கு காலாரி கருவறையும் புகுங்கடமை பலவுரிமை காலத்துப்பெற் றனுபவித்த கடமைகளைக் காட்டாகக் கல்வெட்டுச் சொல்வெட்டாய்க் காட்டுகின்ற கான்பூண்டி (அருள்தரு முயங்குபூண்முலை வல்லியம்மை பிள்ளைத்தமிழ், சப்பாணிப் பருவம், பாடல்- 9)**

என்று கூறுகிறார். ஆலால சுந்தரராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிப் புகழ்ந்த அழகிய பூண்டியில் உறைகின்ற முயங்கு பூண்முலை அம்மை பாகத்தில் இருக்கின்ற பெருமானின் மார்கழித் திருவாதிரை திருவெம்பாவைப் பெருவிழாவில், ஆலால சுந்தர நங்கை, சவுண்டய நங்கை, மேலான திருவினை உடைய உண்ணாழியார் நங்கையோடு அனைவரும் அழகிய நடனம் புரிந்த வண்ணம் மூன்று அறையும் கடந்து சென்று காலனை வென்ற காலாரியாகிய திருமுருகநாதப்பெருமானின் கருவறையில் புகுந்து வழிபட்டனர். அதுமட்டுமின்றி இன்ன பல உரிமைகளையும் பெற்றிருந்தனர் என்பதை பூண்டியில் அமைந்துள்ள கல்வெட்டு காட்டுகிறது என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். இவ்வாறு திருவாதிரை நாளன்று சிவபெருமானை வழிபாடு செய்வதையும்,

 ISBN Number: 978-93-91115-95-1

அவ்வழிபாட்டில் மகளிர் கருவறைவரை சென்று இறைவனை வழிபட்ட செய்தியையும் அறிய முடிகிறது. இந்த திருவாதிரை தினத்தன்று தில்லை நடராசப் பெருமான் திருத்தேரில் வலம் வரும் செய்தியை,

**தில்லைக் கூத்தன் தித்திக்கக் கேட்டுவந்து**
**தினமகிழ மனமகிழச் சிந்தைசெய் திருப்பாட்டு**
**திருமுறைபெறுமுறை தீந்தமிழ்க் கவிகளே**
**திருவீதி வலம்வரும்திருத்தேர் திறமாறி**
**வல்லை யோடாது வழிநிற்கப் பழிமேவ**
**வருந்தி யழுதழு தல்லற் பட்டனர்**
**வண்புகழ்ச் சேந்தனார் வண்டமிழ்ப் பல்லாண்டு**
**மனமுருகச் செயல் பெருக. மனங்கசிந்து**
**பாடினர் ஒல்லைத்தேரோடத் தில்லைவா**
**ழந்தணர் ஒண்டமிழ்க் கற்றோரும் மற்றோரும்**
**கண்டோரும் உளமகிழ உயிர்மகிழ உவமையிலா**
**உவகையராய் உயர்தமிழ் உறுதியை உலகறிய**
**உயர்த்தினர் (அருள்தரு முயங்கு பூண்முலை வல்லியம்மை பிள்ளைத்தமிழ், முத்தப்பருவம், பாடல் - 2)**

என்று கூறுகிறார். உலாவரும் தேர் ஓடாது நிற்கவே சேந்தனார் திருப்பல்லாண்டு பாடி தேரை ஓடச் செய்தார். தற்போதுவரை திருவாதிரை நாளன்று ஆருத்ரா தரிசன


ISBN Number: 978-93-91115-95-1

வழிபாடு நிகழ்ந்து கொண்டு வருகிறது என்பதை அறிய முடிகிறது.

**கேரளத்தில் திருவாதிரை**

மலையாள நாட்டில் தமிழ்நாட்டின் பழைய பழக்க வழக்கங்கள் பல இன்னும் காணப்படுகின்றன. அந்நாட்டிலுள்ள இளம் பெண்கள் திருவாதிரைத் திருவிழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர்.மார்கழி மாதத்தில் திருவாதிரைக்கு ஒரு வாரத்திற்கு முன்பே இவ்விழா தொடங்கப்பெற்று, அம்மாதத்தில் வரும் திருவாதிரை நாளோடு முடிவு பெறும். திருவாதிரைத் திருவிழாவிற்கும், பண்டைய மார்கழி நோன்புக்கு ஒற்றுமைகள் அதிகமாக உள்ளன. எனினும் இத்திருவிழா கார்த்தியாயினி விரதமாகக் கருதப்படாமல் காமனைப் பற்றியதாக பாவிக்கப்படுகிறது என்று ந.சுப்புரெட்டியார் குறிப்பிடுகிறார். **(ந.சுப்புரெட்டியார், ஆன்மீகமும் அறிவியலும், பக்க எண் - 81-84)**

**வேடுவர் வழிப்பறி விழா**

வளமில்லாது, மழை பெய்யாது, நலம் இல்லாது, பஞ்சம் ஏற்பட்டு நல்ல விளை நிலங்கள் எல்லாம் காய்ந்து போய் விரிய காடுகளில் திரியும் வேடர்கள் வயிற்றுக்கு உணவு இல்லாதுபோய் அழகினை இழந்து வாழ்கின்ற


ISBN Number: 978-93-91115-95-1





காலத்தில் மாதவி வனம் (திருமுருகன்பூண்டி) வந்து தங்கினர்.குற்றம் அதிகம் புரிந்து வாழ்கின்ற கள்வர்களில் உணவு வேண்டிக் களவும், கொலையும் அளவுக்கு அதிகமாக செய்தனர்.வில்லும் அம்பும் உடைய வஞ்சகன் ஒருவன் (மாலா தரன்) தன் மனைவியோடு மாதவி வனம் வந்து தங்கி உறங்கினான். காலையில் எழுந்து தன் மனைவி வைத்திருந்த முல்லைச் சரத்தை எடுத்து உயர்ந்த மாதவி வனக் கொம்பொன்றில் பொருந்துமாறு கட்டினான். அவ்வனத்தில் எழுந்தருளி இருந்த இலிங்கப் பெருமான் மீது அம்மலர்கள் விழுந்தன. மாலாதரன் இறைவழிபாடு இயற்ற வேண்டுமென நினையாது அபுத்திப்பூர்வ புண்ணியத்தால் கையிலை செல்லும் அரிய பேறு பெற்றான். என்பதை,

**வளமற்று மழையற்று நலமற்று நடுக்குற்ற**
**வற்கடமிக்கு நற்கடம்வெம்ப**
**வனசரர்கள் வயிற்றுக்கு வழியற்று வனப்பற்று**
**வாழ்சந்திக்கு வாசந்திபுக்கார்**
**களமுற்று வாழ்கள்வர் உணவுற்றுப் பெற்றிடவே**
**களவுகொலை அளவற்றார்**
**கட்கசன் விற்சிலையான் காதலியோடு**
**மாதவிவனம் கண்ணுறங்கிப் பின்னெழுந்தான்**


ISBN Number: 978-93-91115-95-1

**உளமுற்றுத் தளவத்தொடை யுங்கியிருந்த. உயர்மாதவி**

**உறுகொம்பில் நெடுகப்பிணைத்தான்**

**உளமற்றுச் செய்திட்ட உறுபுண்ணிய மாலாதரன்**

**உறும்பேறால் கயிலையடைந்தான் (அருள்தரு முயங்குபூண்முலை வல்லியம்மை பிள்ளைத்தமிழ், அம்புலிப் பருவம், பாடல் - 9)**

கூறுகிறார். இறைவனை வழிபட வேண்டும் என்று இறைச்சிந்தனை இல்லாமல், தான் கொம்பில் வைத்த பூவானது தானாகவே இறைவன் மீது விழுந்ததன் பயனால் கையிலை செல்லும் பேறு பெற்றான் மாலா தன். இறைவனை மனதார எண்ணி வழிபடும் போது ஞானம் அடைந்து முக்தி பெறுவர் என்பதை அறியமுடிகிறது. திருமுருகன்பூண்டி சிவத்தலத்தில் நிகழ்ந்த, வில்லை உடைய வேடுவர் வழிப்பறி செய்த செயல் எல்லாத் தலங்களிலும் விழாவாகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது என்பதை,

**மடபுறக் கொங்கில் மனநலம் காத்து**

**மலைமுருகன் தலைவணங்கும் சிலைமலி வேடர் வழிப்பறி செய்த சீர்வேடு பறிச்சாறாச் சிவத்தலம் எங்கும் சிறந்துகொண்டாட சிவனுடன் அணைந்திடும் அலைபுனல் நள்ளா றருகணை**


ISBN Number: 978-93-91115-95-1

**அன்னாய்! (அருள்தரு முயங்கு பூண்முலை வல்லியம்மை பிள்ளைத்தமிழ், செங்கீரைப் பருவம், பாடல்- 9)**

என்று குறிப்பிடுகிறார். இவ்வாறாக திருமுருகன்பூண்டித் திருத்தலத்தில் இறைவன் நடத்திய திருவிளையாடல்களையும், அவை இன்றும் விழாக்களாக கொண்டாடப்பட்டு வருகின்றன என்பதையும் அறியமுடிகிறது.

**முடிவுரை**

வழிபாடு என்பது மனிதன் தன்னை நெறிப்படுத்தி அறவழியில் வாழ்வதற்காகவும் மனத் தூய்மையை பெறவும் மேற்கொள்ளும் ஒரு செயலாகும். இறைவனை மட்டுமின்றி அவ்விறைவனை எண்ணி இறைச் சிந்தனையுடன் வாழும் அடியார்களும் வழிபடுவதற்கு சமமானவர்கள் என்பதை அறிய முடிகிறது. அடியார்களை வழிபடும் முறையானது ஆலயங்களில் இன்றும் நடைமுறையில் உள்ளது. சமயக்குரவர் களையும் அவர்கள் நிகழ்த்திய அற்புதங்களையும் இன்றும் மக்கள் விழாவாகக் கொண்டாடி வருகின்றனர்.இறைவன் மற்றும் இறைவனின் அடியார்கள் மட்டுமின்றி பழமையான இலக்கண நூல்களை தமிழ்மொழிக்கு வழங்கி பெருஞ்சிறப்புப் பாடிய புலவர்களை வழிபட்ட


ISBN Number: 978-93-91115-95-1

முறையானது இப்பிள்ளைத்தமிழின் சிறப்பான பகுதியாக அமைகிறது. மனித வாழ்வின் பெரும்பகுதியை மனிதனின் வழிபாட்டிற்காக பயன்படுத்துகிறான் என்பது மறுக்க முடியாத ஒன்றாகும் என்பதை உணர முடிகிறது.

**துணை நின்ற நூல்கள்**


[1] எஸ் கௌமாரீஸ்வரி. பதிப்பாசிரியர், *திருக்குறள் பரிமேலழகர் உரை.* முதல் பதிப்பு, டிசம்பர்-2002,சாரதா பதிப்பகம், சென்னை-600 005.

[2] சுப்புரெட்டியார், ந. *ஆன்மீகமும் அறிவியலும்.* பாரிநிலையம், 184, பிராட்வே சென்னை-600 108.

[3] முனைவர் ந. இரா. சென்னியப்பனார். *அருள்தரு முயங்குபூண்முலை வல்லியம்மை பிள்ளைத்தமிழ்.* முதல் பதிப்பு - 2004, அருள்மிகு திருமுருகநாதர் சுவாமி அறக்கட்டளை, திருமுருகன்பூண்டி.

[4] டாக்டர் சி.பாலசுப்பிரமணியன், *திருப்பாவை விளக்கம்.* முதல் பதிப்பு, நவம்பர் - 1995, பாரிநிலையம், சென்னை-600 005.

[5] பார்வதி இராமச்சந்திரன். *மாணிக்கவாசகப் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய திருவெம்பாவை* (உரையுடன்), மின்னூல் வெளியீடு: http://FreeTamilEbooks.com


 ISBN Number: 978-93-91115-95-1

[6] முனைவர் சி. சங்கீதா, *சைவமும் பாவை வழிபாடும்.* தமிழ் இணைய இதழ், geotamil.com, மார்ச் 22, 2021, கட்டுரை

[7] https://www.instanews.city/spirituality/-devotion 23 பிப்ரவரி 2023 அன்று அணுகப்பட்டது.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

 ISBN Number: 978-93-91115-95-1

# Worship in the Poetry of Bharathiyar

**S. Pavithra,** Research Scholar of Tamil, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi-642001, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0003-0505-5433**

**Dr. A. Mahalakshmi,** Research Guide, Assistant Professor of Tamil, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi-642001, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0001-5234-0750**
**DOI: 10.5281/zenodo.7776911**

## Abstract

*Worship is the act of praying to the Lord in order to fulfill the intention of a human being in his mind. This form of worship is a practice that has been followed by our people since the Sangam period till today. It can be seen from Sangam literature that the people of Sangam period used to worship nature, trees and animals. The early people started worshiping the Lord before doing any work. Our people used to worship Goddess Kali before going to war. Similarly, this review examines the manner in which the Bharatiyas worshiped and worshiped gods like Kali, Shakti, Ganesha and Lord Muruga in their poems. The purpose of this study is to explore and explain the great place of worship in Indian poetry.*

**Keywords:** Bharathiyar, Kaali, Murugan, Vinayagar, Sakthi, Sun, Moon, Vazhipaadu, Kannan.

## References

[1] Dr. Su.Usharani. *Bharatiyar Poems Source and Explanation*. Volume-1, First Edition-2019.
[2] B. I. Seypal. *Agananooru*. Sixth Edition, October-2017.
[3] Q.V. Balasubramanian, *Natrinai.* Sixth Edition- 2017.

[4] Ma. Parimanam, K. Ve. Balasubramanian, Narrator, *Poorananuru*. Sixth Edition - 2017.
[5] GNA. Manikkavasakam, *Ettuththogai*. Second Edition, August - 2007.
[6] Dr. A. Viswanathan, Study Guide, Fifth Edition October -2013.
[7] N.M.Venkatasamy Natar. Text, *Silapathikaram* (Madurai Kandam)
[8] Jna.Manikavasagan. Ettuthogai. Uma Publishing House, Chennai.
[9] Nalvazhi.
[10] Muthalthirumurai.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

 ISBN Number: 978-93-91115-95-1

# பாரதியார் கவிதைகளில் வழிபாடுகள்

**செ. பவித்ரா**, முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி - 642001, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0003-0505-5433**

**முனைவர் ஆ. மகாலட்சுமி,** நெறியாளர், உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி - 642001, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0001-5234-0750**
**DOI: 10.5281/zenodo.7776911**

## ஆய்வுச்சுருக்கம்

*மனிதனானவன் தன் மனதில் எண்ணும் எண்ணம் நிறைவேறுதலின் பொருட்டு இறைவனை வேண்டுதல் முறை வழிபாடு. இந்த வழிபாட்டு முறை என்பது சங்க காலம் முதல் இன்று வரை நம் மக்களால் பின்பற்றப்பட்டு வரும் ஒரு நடைமுறை ஆகும். சங்க கால மக்கள் இயற்கையையும், மரம், விலங்குகள் எனஅனைத்தையும் வழிபட்டு வந்ததை சங்க இலக்கியங்களின் வழி காண முடிகிறது. முற்கால மக்கள் எந்த ஒரு செயலை செய்வதற்கு முன்னும் இறைவனை வழிபட்டே தொடங்கி இருக்கின்றனர். போருக்குச் செல்லும் முன்பு காளி தேவியை வழிபட்டு செல்வதை வழக்கமாகக்*

 ISBN Number: 978-93-91115-95-1

*கொண்டிருந்தனர் நம் மக்கள். இதேபோல் பாரதியார் தமது கவிதைகளில் காளிதேவி, சக்தி, விநாயகர் மற்றும் முருகப்பெருமான் போன்ற கடவுள்களைப் போற்றி வணங்கி வழிபட்ட முறைகளை பற்றி கூறியிரு வழிபாடு என்பதுக்கும் பாங்கினை ஆராய்வதை இவ்வாய்வு ஆகும். இறைவழிபாடு என்பது பாரதியார் கவிதைகளில் பெரும் இடம் குறித்த ஆராய்ந்து விளக்குவதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது.*

**குறிப்புச்சொற்கள்:** பாரதியார், வழிபாடு, சூரியன், சந்திரன், காளி, விநாயகர்,முருகன்,சக்தி, கண்ணன்.

**முன்னுரை**

வழிபாடு என்பது தெய்வத்திடம் நாம் வேண்டுவது நல்லபடியாக நடந்தேற வேண்டும் என்று வேண்டுவதையே வழிபாடு எனலாம். வழிபாடு என்பதற்குவழங்குதல் என்பது பொருள். வழிபாடு என்பதும் மதங்களுக்கு ஏற்ப மாறுபடுகிறது.இந்த வழிபாட்டை பாரதியார் தமது கவிதைகளில் எந்தெந்த கடவுள்களை போற்றிவணங்குகிறார் என்பதை ஆராய்வதே கட்டுரையாகும். பாரதியார் தமிழ் நூலில் பெரிதும் காளி தேவியையும், சக்தியையும் முருகன் மற்றும்விநாயகர் போன்ற கடவுள்களையும் வணங்கி எழுதியிருக்கிறார். கடவுள்களை பற்றிஅவர் கூறுவது

 ISBN Number: 978-93-91115-95-1

போன்ற செய்திகளை ஆராய்ந்து விளக்குவதே இக்கட்டுரையாகும்.

**வழிபாடு**

வழிபாடு என்பது நாம் எண்ணிய எண்ணம் நிறைவேறுதலின் பொருட்டு இறைவனை நோக்கி வழிபடுதலை வழிபாடு என்கிறோம். இந்த வழிபாடு என்பது பலவகைகளாக பிரிக்கப்படுகின்றன. அவையாவன,

**1. இயற்கை வழிபாடு**

இயற்கை வழிபாடு என்பது நிலம், நீர், மரம், விலங்குகள், மழை, சூரியன் போன்றவற்றை வணங்கும் முறையை இயற்கை வழிபாடு எனலாம். இயற்கை வழிபாடு என்பது நம் முன்னோர்களால் கடைபிடிக்கப்பட்டு வந்த ஒரு முறையாகும். இன்று வரை இம்முறையை நாம் பல இடங்களில் காணலாம்.

**2. பெருந்தெய்வ வழிபாடு**

பெருந்தெய்வ வழிபாடு என்பது ஆகம விதிகளை பின்பற்றி வழிபாடு செய்யும் தெய்வங்களை பெருந்தெய்வங்கள் எனலாம். சிவன், திருமால், சக்தி, கணபதி, முருகன், சூரியன் போன்ற கடவுள் வழிபாட்டை குறிக்கிறது.

**3. சிறு தெய்வ வழிபாடு**

சிறு தெய்வ வழிபாடு என்பது வீட்டு தெய்வங்கள்,

 ISBN Number: 978-93-91115-95-1

குலதெய்வம் போன்ற நாட்டுப்புற தெய்வங்களை வணங்குவதே ஆகும். இவ்வாறு வழிபாடுகள் என்பது பல வகைகளாக இன்று நம் சமுதாயத்தால் பின்பற்றப்பட்டுள்ளது. தெய்வம் என்பது ஒன்றே ஆனால் தெய்வங்களை வணங்கும்முறை மட்டுமே சற்று மாறுபடலாம்.

**பாரதியார் கவிதைகளில் வழிபாடு**

பாரதியார் தமது கவிதைகளில் இறைவனை வணங்கியும் வாழ்த்தியும்பாடியிருக்கிறார். விநாயகர் தொடங்கி முருகன், காளி, சக்தி, கண்ணன், ராதை, சரஸ்வதி போன்ற தெய்வங்களையும் இவற்றுடன் சூரியன், நிலா போன்ற இயற்கை தெய்வங்களையும், இயேசு கிறிஸ்து, அல்லா போன்ற பிற தெய்வங்களையும் பற்றி தமது கவிதைகளில் படைத்திருப்பதைக் காணலாம்.

**ஞாயிறு வழிபாடு**

சூரியனை வழிபடும் முறை நம் முன்னோர்கள் காலம் முதலேகாணப்படுகிறது. சங்ககால மக்கள் பெரிதும் இயற்கை வழிபாட்டு முறைகளையும் பின்பற்றினர். இன்று கூட நம் மக்கள் சூரியனுக்கு பொங்கல் வைத்து வழிபடுவது நம்காணலாம். இந்த சூரியன் வழிபாட்டை பாரதியார்,

**சுருதியின் கண் முனிவரும் பின்னே**
**தூமொழிப்புல வோர்பலர் தாமும்**


ISBN Number: 978-93-91115-95-1

**பெரிது நின்றன் பெருமையென் றேத்தும்**
**பெற்றி கண்டனை வாழ்த்திட வந்தேன்**

**(தோத்திரப் பாடல் - 69)**

என்ற வழியில் சூரிய பகவானை வேதங்களின் மகரிஷிகளும் தூய்மையான சொற்களைக் கொண்டு பாவலர்கள் பலரும் மிகுதியாக உன்னுடைய சிறப்பைப் புகழ்வதைக் கண்டு நானும் உன்னைப் போற்றி தொழ வந்தேன் என்று பாரதியார் சூரியனைத் தொழுவதை காணலாம்.

**சோதி கண்டு முகத்தில் இவட்கே**
**தோன்றுகின்ற புதுநகை யென்னே**
**ஆதி தாய் தந்தை நீவீர் உமக்கே**
**ஆயிரந்தரம் அஞ்சலி செய்வேன்**

**(தோத்திரப் பாடல் - 70)**

உன்னுடைய ஒளியை பார்த்து இவளுடைய அழகில் புதிய முறுவல் உதயமாவதை நான் என்னவென்று சொல்வேன் எம்முடைய முதல் மூலமான தாயும்தந்தையும் நீங்களே உங்களுக்கு ஆயிரம் முறை வணக்கம் செலுத்துவேன் எனபாரதியார் சூரியனே வணங்குவதாகவும் பாடியிருக்கிறார். இதே போல் சிலப்பதிகாரத்தில்,

**அமரர் தரும் கோட்டம் வெள்யானைக் கோட்டம்**
**புகர் வெள்ளை நாகர் தங்கோட்டம் பகல்வாயில்**


ISBN Number: 978-93-91115-95-1

**உச்சிக்கிழான் கோட்டம் ஊர் கோட்டம்**

**வேற்கோட்டம் (கனா திறம் முரைத்த காதை - 10)**

இங்கு உச்சிக்கிழான் கோட்டம் என்பது சூரியன் கோயில் ஆகும். இந்தவரிகளைக் கொண்டு முற்காலத்தில் சூரியனுக்கு கோவில் எழுப்பி வணங்கியதை சிலப்பதிகாரம் கொண்டு காணலாம். இதேபோல் நற்றிணையில்,

**ஓங்கு திரை முந்நீர் மீமிசைப்பலர் தொழத்தோன்றி**
**ஏழற விளங்கிய சுடரினும்**
**வாய்மை சான்றா நின்சொல் நயந்தோர்க்கே**
**(நற்றிணை 283 (5)**

உயர்ந்து வரும் அலையை உடைய கடலின் மீது பலரும் தொழுமாறு தோன்றி வரும் என்ற இந்த இடத்தில் சூரியனை தொழுகின்றனர் சங்ககால மக்கள் என்பதை காணலாம்.

**சந்திர வழிபாடு**

சந்திரன் என்பது நிலா. அதாவது சூரியனைப் போன்றே பாரதியார் சந்திரனையும் புகழ்ந்து பாடியுள்ளார். அவை,

**தோன்றும் உலகவளே என்று கூறுவர்**
**வெண்ணிலாவே!**
**பின்னிய மேகச் சடைமிசை கங்கையும்**
**வெண்ணிலாவே!**

 ISBN Number: 978-93-91115-95-1

**நல்ல பெட்புற நீயும் விளங்குதல் கண்டனன்**

**(தோத்திர பாடல்கள்- 73)**

நீல நிறம் பொருந்திய பராசக்தியே இங்கு உருவாகும் உலகமாக இருக்கிறாள்என்று உரைப்பார்கள். மேகம் போன்ற அவளுடைய பின்னல் சடையின் மீதுகங்காதேவியும் வெண்ணிலாவாகிய நீயும் மென்மையுடன் பொலிவதை நான்அறிவேன் என்று சந்திரனை வாழ்த்துகிறார். இதே போல் மற்றொரு பாடலில்,

**புல்லியன் செய்த பிழை பொறுத்தே**
**அருள் வெண்ணிலாவே! -இருள்**
**போகிடச் செய்து நினதெழில்**
**காட்டுத்தி வெண்ணிலாவே!**

**(தோத்திரப் பாடல்கள் – 73:5)**

என்ற வரிகளில் நான் கூறிய சொற்களால் வெட்கப்படுகிறாய் போலும், அதனால் உன் வலி பொருந்திய முகத்தை முழுவதுமாக மறைத்துக் கொண்டாயோ! அர்பனாகிய நான் செய்த தவற்றை பொறுத்துக் கொண்டு கருணைக் காட்டுவாயாக இருட்டை ஒழித்து உனது அழகைப் பார்த்திடுமாறு செய்வாயாக என்று கருணைக் காட்டு என்று சந்திரனை போற்றுவதைக் காணலாம்.


ISBN Number: 978-93-91115-95-1

**விநாயகர் வழிபாடு**

விநாயகர் முருகனின் சகோதரராகவும், சிவபெருமானின் மூத்தமகனாகவும் இருப்பவர். நம் மக்கள் அனைத்து மங்கள நிகழ்வுகளுக்கும் விநாயகரை வணங்கி தொடங்குகின்றனர். ஆனால் இம்முறை தற்காலத்தில் தோன்றியதாகவே கூறப்படுகிறது. சங்க கால இலக்கியங்களில் விநாயகர் என்ற சொல்லோ அல்லது வழிபாட்டு முறைகளோ, சான்றுகளோ காணப்படவே இல்லை. இந்த விநாயகர் வழிபாட்டை பாரதியார் புதுச்சேரியில் உள்ள மணக்குள விநாயகர் மீது வெண்பாபாடியிருக்கிறார். அவையாவன,

**நீயே சரணம் நினதருளே சரணஞ்சரணம்**
**நாயேன் பலபிழை செய்து கலைத்துன்னை**
**நாடி வந்தேன் (தோத்திரப் பாடல் - 1:2)**

விநாயகப் பெருமானே உன்னையே அடைக்கலமாகப் பற்றினோம். உன் திருவருளையே அடைக்கலமாகக் கொண்டோம். நாய் போன்ற இளிந்தவனான நான்பல தவறுகளைப் புரிந்து உன்னைச் சரணடைந்தேன் என தன் தவற்றையும் மன்னித்து என்னை ஏற்றுக்கொள் என்பது போல கூறி விநாயகரைச் சரணடைவதாகக் கூறுகிறார்.

**சந்திர மவுலித் தலைவன்**
**மைந்தன் கணபதி தாளை (தோத்திரப் பாடல் - 5)**

 ISBN Number: 978-93-91115-95-1

இதில் பிறை நிலவைத் தலையில் சூடிய சிவபெருமானின் மைந்தனான கணபதியின் பாதங்களை எங்கள் எண்ணத்தில் வைத்துப் போற்றுகிறோம் என கணபதியே எண்ணுவதாகக் கூறுகிறார் பாரதியார். இதேபோல்,

**காலை பிடித்தேன் கணபதி! நின்**
**பாதங்கண்ணிலொற்றி**
**நூலை பலபலவாக சமைத்து**
**நொடிப்பொழுதும் (தோத்திரப் பாடல் – 1:6)**

என்ற பாடலில் கணபதியே உன்னுடைய திருப்பாதங்களை என் இரு கரங்களாலும் தொட்டு கண்களின் மேல் வைத்து வணங்கி உன் திருவடிகளைப் பற்றிக் கொண்டேன் என விநாயகரை வணங்குவதாகப் பாரதியார் கூறுகிறார். இந்த விநாயகரைப் பற்றி அவ்வையார்,

**பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை**
**நாலும் கலந்துனக்கு நான் தருவேன் கோலஞ்செய்**
**துங்க கரிமுகத்து தூமணியே நீ எனக்கு**
**சங்கத்தமிழ் மூன்றும்தா (நல்வழி கடவுள் வாழ்த்து)**

என்று அவ்வையார் சங்கத் தமிழ் மூன்றும் தரும்படி விநாயகரை வணங்குவதுகாணலாம். இதே போல்,

**பிடியதனுருவுமை கொலமிகு கரியது வடிகொடு**
**தனதடி வழிபடு மவரிடர் கடிகண பதிவர**
**வருளினன் மிகுகொடை வடிவினர் பயில்வலி**

 ISBN Number: 978-93-91115-95-1

**வலமுறை யிறையே (முதல் திருமுறை - 5: 123)**

என்ற பாடலில் ஆண் யானை வடிவு கொண்டு தன் திருவடியை வணங்கும் அடியவர்களின் இடர்களை போக்குவதற்காக கணபதியை சிவபெருமான் தோற்றுவித்தார். என்கின்றார் திருஞானசம்பந்தர்.

**முருகன் வழிபாடு**

குறிஞ்சி நிலத்திற்குண்டான கடவுள் முருகன். இவர் முருகு, முருகன், ஆறுமுகன், குமரன், குகன், சுப்ரமணியன், கந்தன் என பல பெயர்களில் அழைக்கப்படுகிறார். கௌமாரம் என்னும் மதத்தைச் சேர்ந்தவர்கள் முருகனைவணங்குகின்றன. இந்த முருகனைப் பற்றி பாரதியார்,

**வருவாய் மயில் மீதினிலே**
**வடிவேலுடனே வருவாய்**
**தருவாய் நலமும் தகவும் புகழும்**
**தவமும்திறமும் தினமும்கனமும்**

**(முருகன் பாட்டு - 1)**

முருகப்பெருமானே உனது வாகனமான மயிலின் மீது ஏறி வருவாயாக கையில் கூர்மையான வேல் கொண்டு வருகை தருவாயாக! புகழையும், செல்வத்தையும், பெருமையும், ஆற்றலையும், மேன்மையும் எனக்குத் தந்து அருள்வாயாக என முருகனை வேண்டி வணங்குகிறார். பாரதியார் இதே போல்,

 ISBN Number: 978-93-91115-95-1





**தருவாய் தொழிலும் பயனும் அமர**

**சமராதிபனே! சரணம் சரணம் (முருகன் பாட்டு-6)**

இந்த வரியில் தொழிலையும் அதற்குரிய பலனையும் கொடுப்பாயாக முருகனே! உன்னை அடைக்கலமாக சரண் புகுந்தோம். என்னை காப்பாயாக எனும்முருகன் காக்கும் படி வணங்குகிறார். இதேபோல்,

**மாறு பட பல வேறு வடிவோடு**

**தோன்றுவாய்**

**எங்கள் வைரவி பெற்ற....**

**வடிவேலாவா (வேலன் பாட்டு - 3)**

என்ற பாடலில் ஒன்றுக்கொன்று மாறுபடும்படி உருவெடுத்து நீதோன்றுவாய். எங்கள் பராசக்தி பெற்றெடுத்த பெரும் நெருப்பே! வடிவேலனே! உன்னை நாங்கள் வணங்குகிறோம் என்ற இடத்தில் பாரதியார் முருகனை வணங்குவதை காணலாம்.

**ஆவிலறிந்தருள் கூட்டுவான் நித்தம்**

**ஆண்மையும் வீரமும் ஊட்டுவான்**

**(முருகன் பாட்டு - 3)**

என்ற வரியில் பாரதியார் முருகனிடம் ஆண்மையையும், மறமாண்பையும் தந்தருள்வாய் என வேண்டுவதாக அமைந்துள்ளது.

**தோகைமேல் உலவுங் கந்தன்**

**திருக்கும் வெற்றி**

 ISBN Number: 978-93-91115-95-1

**வாகையே சுமக்கும் வேலை வணங்குவது**
**எமக்கு வேலை (எமக்கு வேலை - 6)**

தோலுடைய மயிலின் மீது பவனி வருகின்ற கந்தப் பெருமானின் ஒளிபொருந்திய கரத்தில் இருக்கும் எப்பொழுதும் வெற்றி மாலையை சூடிக்கொண்டிருக்கும் வேலை பணிந்து போற்றுவது தான் எங்களுக்கு தொழிலாகும் என்று பாரதி முருகன் வேலை வாங்குகிறார். சங்ககால இலக்கியம் முழுவதும் ஒன்பது இடங்களில் முருகன் என்ற பெயர் சுட்டப்படுகிறது. மற்ற இடங்களில் முருகன் 42 பெயர்களில் சுட்டப்படுகிறார்.

**கேட்டதும் பாணி எழுதும் கிணை முருகன்**
**தாள் தொழுதண் பரங்குன்று! (பரிபாடல் - 8:85)**

என்ற வரியில் சங்க இலக்கியங்களில் ஒன்றான பரிபாடலில் முருகனை தொழுவதை காணலாம். இதேபோல், முருகன் நற்போர் நெடுவேல் ஆவி (அகநானூறு - 1:3) என்ற அகநானூற்று வரிகளைக் கொண்டு முருகனே அக்கால மக்கள் தொழுது வழிபட்டதை காணலாம்.

**கண்ணன் வழிபாடு**

கண்ணன் விஷ்ணு அவதாரத்தில் எட்டாவது அவதாரமாக விளங்கும் கிருஷ்ணன் அவதாரமாகும் இவரை கண்ணன் என்று அழைக்கப்படுகிறார் இவர் கோவிந்தன், கோபாலன் போன்ற பெயர்களாலும்

 ISBN Number: 978-93-91115-95-1

அழைக்கப்படுகிறார் வைணவ சமய கடவுளாக போற்றப்படுபவர் கிருஷ்ணன். இந்த கிருஷ்ணரை பற்றி பாரதியார்,

**தொழுவேன் சிவ நாம் நினையே**
**கண்ணா துணையே அமரர் தொழும் வானவனே**
**(தோத்திரப் பாடல்- 45)**

என்ற வரியில் எனக்கு ஆதரவாக இருப்பவனே மாணவர்கள் வணங்குபவனே சிவனாகவும் விளங்குபவனே உன்னை நான் வணங்குவேன் என பாரதியார் கண்ணனை வணங்கி வழிபடுவதை மேற்கண்ட வரிகளில் மூலம் காணலாம்.

**ஏற்றி நின்னை தொழுவேதென்னே**
**எளியர்தம்மை காப்பதென்னே?**
**(தோத்திரப் பாடல்- 47)**

என்ற பாடலில் கிருஷ்ணனை வணங்குகிறோம் சாதாரணமான எங்களையும் அடியவர்களையும் நீதான் பாதுகாக்கின்றாய் என கண்ணபெருமானை வணங்குவதாக பாரதியார் தமிழ் கவிதைகள் எடுத்துரைக்க காண்கிறோம். இது போலவே,

**வன்புனல் தொழுநை வார் மணல் அகன்துறை**
**அண்டர் மகளிர் தண்தழை உடீஇயர்**
**மரம் செல மிதித்த மா அல் போல (அகநானூறு-59)**

 ISBN Number: 978-93-91115-95-1

தோழி தலைவியிடம் கூறுவதாக இப்பொடர் அமைகிறது இதில்குளுமையான குளத்தில் பூத்திருக்கும் ஆம்பல் போடும் உன் கண்கள் பெருந்தகைமையை இழந்து காணப்படுகின்றன நீயும் பெரிதும் வருத்தத்தோடு இருக்கின்றாய் வட புலத்தில் ஓடும் வளமையானில் அண்டர் என்னும் இடையர் குல மகளிர் தலையாடையை உடுத்திக் கொள்வதற்காக கண்ணன் மரத்தில் ஏறி கிளைகளை மிதித்து வளைத்துக் கொடுத்தான் என்ற வரிகளில் கண்ணனை பற்றி அம்மக்கள் அறிந்து வழிபட்டதை காணலாம்.

**காளி வழிபாடு**

காளி தேவி என்பவர் இந்துமத கடவுள்களில் ஒரு பெண் கடவுள் இவர்சக்தியின் மறு வடிவமாக பார்க்கப்படுபவர் இவர் சிவனின் மனைவியான பார்வதி ஆவார் இக்காலி தேவியை பாரதியார் தமது கவிதைகளில் பெரும் இடங்களில் கூறுகிறார். என்பதை,

**தாடுங்காளீ! சாமுண்டி! காங்காளீ!**

**அன்னை !அன்னை! ஆடுங்கூத்தை**

**நாடச்செய்தாய் என்னை! (தோத்திரப் பாடல்- 35)**

என்ற வரியில் உன் திருவடியில் சலங்கை ஒலியோடு ஒத்திசைய ஆனந்த நடனமிடம் காளி தேவியே சாமுண்டியே கங்காளியே தாயே மாதா நீ ஆடும் இத்தகைய நடனத்தை காண என்னை விரும்பி வருமாறு

 ISBN Number: 978-93-91115-95-1

செய்தாய் என காளி தேவியின்யின் ஆனந்த தாண்டவ கூத்தை காண வரும்படி தன்னை அழைத்ததாக பாரதியார் பாடி இருப்பதை காணலாம்.

**மானம் வீரியம் ஆண்மை நன்னேர்மை**
**வன்மையாவும் வழங்குற செய்வேன். ஞானம்**
**ஓங்கி வளர்ந்திட செய்வேன் நான் விரும்பிய**
**தருவாள்! (தோத்திரப் பாடல்- 38)**

என்னும் பாடலில் சுயமரியாதை வீரம் அஞ்சாமை நல்ல நீதி வள்ளல் தன்மை ஆகிய அனைத்தையும் நடைமுறையில் இருந்திடுமாறு செய்வேன் நல்லறிவு உயர்ந்து மேலும் கிடைச்ச செய்வேன் நான் நாடும் காளிதேவி இவற்றை எனக்குத் தருவாள் என காளிதேவியின் மீது தான் கொண்டுள்ள நம்பிக்கையை வெளிப்படுத்தி இருப்பதை காணலாம். இது போலவே கவிதையில்,

**மண்ணும் காற்றும் புனலும் அண்ணலும்**
**வானும் வந்து வணங்கி நில்லாவே?**
**விண்ணுலோர் பணிந்தேவல் செய்தோரே?**
**வெல்க காளி பாதங்களென் பார்க்கே!**

**(தோத்திரப் பாடல்கள்- 39)**

என்ற வரியில் காளிதேவியின் திருவடிகள் வெல்லட்டும் என்று போற்றுபவர்களை நிலமும் காற்றும் நெருப்பும் விண்ணும் பணிந்து வணங்கி நிற்கும் தேவ உலகத்தார்

 ISBN Number: 978-93-91115-95-1

காளி தேவிக்கு வணங்கி பணி செய்வார்கள் என காளி தேவியை வணங்குவதை குறிப்பிடுகிறார் பாரதியார். இதுபோல் காளியை சிலப்பதிகாரத்தில்,

**அறுவருக்கு இளைய நங்கை இறைவனை**
**ஆடல் கண்டருளிய அணங்கு சூருடைக்**
**கானகம் உகந்த காளி (சிலப்பதிகாரம் -மதுரை காண்டம்)**

என்ற வரிகளில் கோவலனின் இறப்புச் செய்தியை கேட்டு கண்ணகி பாண்டிய மன்னனிடம் நியாயம் கேட்க சென்றபோது அவளது தோற்றத்தை கண்ட காவலன் மன்னனிடம் சென்று கண்ணகியின் தோற்றத்தை காளிதேவி ஏழாவது கன்னியாக இருப்பதால் மற்ற ஆறு தெய்வங்களுக்கும் இளையவள் பேயை போன்றவள் என்றும், அத்துடன் காட்டில் உறைந்து வாழும் காளியைப் போன்று இருக்கிறாள் என கண்ணகியின் நிலையை கூறும் போது காளியை பற்றி குறிப்பிடுவதை காணலாம். இவ்வாறு காளி தேவியை வணங்கி போற்றி வழிபடுவதை பற்றி பாரதியார் கவிதை கொண்டு காணமுடிகிறது.

**சக்தி வழிபாடு**

சக்தி வழிபாடானது மிகப் பழமையானது முக்கால மக்களால் இந்த வழிபாடு தாய் தெய்வ வழிபாடு என அழைக்கப்பட்டதை சங்க இலக்கியங்களைக் கொண்டு காணலாம் துர்க்கை காளியனும் சக்தியை குறிப்பிடுவர்

 ISBN Number: 978-93-91115-95-1

சக்தி சிவபெருமானின் துணைவியார் ஆவார் இந்த சக்தி வழிபாட்டை பாரதியார் தமது கவிதையில் அதிகமாக கூறியிருக்கிறார் அவர் தமது கவிதை நூலில் சக்தியை முழுமுதற் கடவுளாக கொண்டு தொழுகிறார். இதை,

**கலந்தாற் போல நீ, அனைத்திலும் கலந்தாய்!**
**உலகெலாந் தானாய் ஒளிர்வாய் போற்றி**
**(தோத்திரப் பாடல் -10)**

என்ற போற்றிய அகவல் என்னும் தலைப்பில் அமைந்த கவிதையில் சக்தியை காற்றிலே அசைவையும் சேர்த்து வைத்தது போல நீ எல்லாவற்றிலும் கூடியிருக்கிறார் வையம் எல்லாம் தானாக சுடர்விடுபவளே! உன்னை போற்றி வணங்குகிறோம் என பாரதியார் சக்தியை வணங்குவதை காணலாம். இதே போலவே சிவசக்தி என்னும் தலைப்பில் அமைந்த கவிதை

**மின் படு சிவசக்தி எங்கள் வீரைநின்**
**திருவடி சரண்புகுந்தோம் (தோத்திரப் பாடல்-11)**

என்பதில் கருணை கூர்ந்து எமக்கு விண்ணுலக வாழ்வு தன்னை அழித்திடுவாய் மின்னலை ஒத்த சிவ சக்தி தாயே துர்கா தேவியே உன் பாதம் மலர்களை அடைக்கலமாக பற்றுவேன் என பாரதியார் சக்தி தேவியினை சரணடைந்ததை அவரது வரிகொண்டு நம்மால் காண முடிகிறது.

**வல்லமை தாராயோ இந்த மாநிலம்**


**ISBN Number: 978-93-91115-95-1**

**பயனுற வாழ்வதற்கே?**

**சொல்லடி, சிவசக்தி- நிலச் (தோத்திரப் பாடல் -13)**

நல்லதோர் வீணை செய்வோம் என்ற கவிதையில் என்னுடைய இந்த தாய் திருநாடு நல்ல பலனடையுமாறு நான் பணி செய்திடுவதற்கு எனக்கு போதுமான சக்தியை அழித்து விடுவாயாக சிவசக்தி தாயே இல்லை இந்த பூமியில் நான் பாரமாக வாழ்ந்திடும்படி என்னை செய்திடுவாயோ என பாரதியார் சக்தியிடம் வேண்டுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. மகாசக்தி வெண்பாவில்,

**சக்தியே நம்மை சமைத்துகாண் நூறாண்டு**

**பக்தியுடன் வாழும் படிக்கு (தோத்திரப் பாடல் -17)**

என்ற வரியில் சக்தியே நூறாண்டு அவள் மீது நேசம் வைத்து வாழும்படி நம்மை பாதுகாத்தால் பார் என சக்தி நம்மை காத்திடுவாள் பயம் கொள்ளாமல் வாழ்வோம் என்று சக்தியை போற்றி பாடல் பாடி இருப்பதை காணலாம். இதுபோன்றே ஓம் சக்தி பாடலில் சக்தியை போற்றுவதை,

**வெல்ல மெனப்பொழி வாய் சக்தி வேல் சக்தி**

**வேல் சக்தி வேல்சக்தி வேல்**

**(தோத்திரப் பாடல் - 18)**

இப்பாடலில் எள்ளின் அளவு நேரம் கூட வீணாக கழியாமல் என்னுடைய நாக்கில் கவிதைகளை

 ISBN Number: 978-93-91115-95-1





பொழிந்திடும்படி செய்வாயாக சக்தி வேல் சக்தி மேல் சக்தி மேல் என சக்தியிடம் தான் ஓய்வில்லாமல் இந்நாட்டிற்கு கவிதைகளை இயற்றி வழங்கி தமிழ் மொழியை சிறப்பிக்க வேண்டும் என தெய்வத்திடம் வேண்டுவதை இப்பாடலின் அடி கொண்டு நம் காண முடிகிறது. இதுபோன்ற சக்தி விளக்கம் என்னும் கவிதையில்,

**ஆதிப் பரம்பொருளின் ஊக்கம் அதை**
**அண்னை எனப்பணிதல் ஆக்கம்!**

**(தோத்திர பாடல்- 23)**

முன்னைக்கும் முதல்வனான பரம்பொருளின் உந்து சக்தியாக இருப்பவளை தாயென வணங்குவதே நமக்கு நன்மை தரக்கூடிய செயலாகும் என பாரதியார் சக்தி தேவி வணங்கும்படி கூறுவதை பார்க்கலாம் இவை போன்று கலித்தொகையில் கடவுள் வாழ்த்து பாடலில்,

**பாடுபறை பல இயம்ப பல் உருவம் பெயர்த்து நீ கொடுகொட்டி ஆடுங்கால், கோடு உயர் அகல் அல்குல் கொடிபுரை நுசும்பினால் கொண்ட சீர் தருவாளோ (கலித்தொகை, கடவுள் வாழ்த்து)**

பறை முழக்கத்துடன் பல உருவம் காட்டிக்கொண்டு நீ கொடுகொட்டி ஆடும் போது உன்னோடு இருக்கும் உமையம்மை உன் ஆடலுக்கு துணையாக சீர் பாடுவாளோ என சங்க இலக்கியங்களில் சக்தியை


ISBN Number: 978-93-91115-95-1

சிவனின் பாதியாக குறிப்பிட்டு பாடி இருப்பதைக் காணலாம். இதுபோல் ஐங்குறுநூற்றில் வரும் கடவுள் வாழ்த்து பாடலில்,

**ஆகத்தனது பேரருண் மேனியிற்**
**றினையைந் தமைத்த வினையிலி நாயகன்**
**(ஐங்குறுநூறு கடவுள் வாழ்த்து)**

என்ற வரிகள் ஐங்குறுநூற்று கடவுள் வாழ்த்தில் கூறப்பட்டுள்ள கல்லாடம் என்னும் நூலில் பெண்ணை தனது ஒரு பாகத்தில் கொண்டவர் என கூறப்பட்டுள்ளது. அவ்வாறு கூறப்பட்ட பெண் அது சக்தி தேவியே ஆகும். இவ்வாறு சங்க இலக்கியங்களின் காலம் முதல் இன்று வரை மக்கள் சக்தி தேவியை வணங்கி வந்ததை நாம் இச்சான்றுகளின் மூலம் காணலாம்.

**சரஸ்வதி வழிபாடு**

பாரதியார் தமது கவிதைகளில் கல்வியின் தெய்வமான சரஸ்வதியும் பற்றி பாடியிருக்கிறார். சரஸ்வதியின் சிறப்பையும் அவரை வாழ்த்தியதையும் பற்றி கூறியிருக்கிறார். இதை,

**கையில் ஏடு தரித்திருப்பாள் அதில்**
**இங்கிதமாகக் பதம் படிப்பாள்; அதை**
**நாடி யருகணைந்தால்- பல**
**ஞானங்கள் சொல்லி இனிமை செய்வாள்**
**(தோத்திரப் பாடல் -64)**

 ISBN Number: 978-93-91115-95-1

திருக்கரத்தினில் புத்தகங்களை ஏந்தி இருப்பாள் அதிலுள்ள சொற்களை இனிமையாக வாசிப்பால் அதில் விருப்பம் கொண்டு அவள் அருகே சென்றால் பல் விதை அறிவினை ஊட்டி இடம் புரிவால் என்று சரஸ்வதி தேவியை புகழ்ந்து பாடி இருப்பதை நாம் காண முடிகிறது சரஸ்வதி தேவியோ நமக்கு பல அறிவுகளை புகட்டுவாள் என கூறி இருக்கிறார். இதேபோல்,

**வைத்த நினைவை யல்லால்பிற**
**வாஞ்சையுண்டோ? வயதங்ஙன மேயிரு**
**பத்திரண்டாமளவும்-வெள்ளப்**
**பண்மகள் காதலைப் பற்றி நின்றேன் அம்மா**
**(தோத்திரப் பாடல்- 64 (4)**

என்ற வரிகளில் இரவில் உறக்கத்தில் கண்ட கனவு நாளாக அவள் மேல் கொண்ட எண்ணமே அல்லாமல் வேறு ஆசை என்னுள் இல்லை. அவ்வாறே இருபத்திரண்டு வயது ஆகும் வரை வெள்ளை நிற தாமரையில் உரையும் கலைமகள் மீது கொண்ட நேசத்தை கைவிடாது வாழ்ந்திருந்தேன் என்ற வரிகளில் கலைமகள் வழங்கப்படும் கல்வியை கைவிடாமல் காத்திருந்ததை பற்றி பாரதியார் இவ்விடத்து கூறுகிறார்.

**வெள்ளை தாமரைப் பூவில் இருப்பாள்,**
**வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்;**
**கொள்ளை யின்பம் குலவு கவிதை**

 ISBN Number: 978-93-91115-95-1

**கூறு பாவலர் உள்ள திருப்பாள்;**

**(தோத்திர பாடல் -62(1)**

அதாவது கலைமகள் ஆனவள் வெள்ளை தாமரை மலரில் வீற்றிருப்பாள். வீணையில் இருந்து எழும் நாதத்தில் குடியிருப்பாள். மிகுதியான ஆனந்தத்தை தருகின்ற பாடல்களைப் புனையும் கவிஞர்களின் நெஞ்சத்தில் குடி இருப்பாள். நிலையான பொருளை அலைந்து தேடி அறிந்து உரைக்கும் மறையின் மையப் பொருளாக நின்று ஒளி வீசுவாள். தூய்மையான மனம் உடைய மகரிஷிகள் உரைக்கின்ற அருள் மொழிகளின் ஆழ்ந்த அர்த்தமாக விளங்கிடுவாள் வெள்ளை தாமரையில் வீற்றிருக்கும் சரஸ்வதி தேவி என பாரதியார் சரஸ்வதியை புகழ்ந்துரைப்பதை நாம் இக்கவிதை வரி கொண்டு காணமுடிகிறது.

இதே போல்

**செந்த மிழ்மணி நாட்டிடை யுள்ளீர்!**
**சேர்ந்தித் தேவை வணங்குவம் வாரீர்!**
**வந்தனம்இவட் கேசெய்வ தென்றால்**
**வாழி யஃதிங் கெளிதன்று கண்டீர்!**

**(தோத்திரப்பாடல்கள் - 62(5))**

என்ற வரிகளில் அழகிய செந்தமிழ் தேசத்தில் வாழும் மக்களே! நாம் எல்லோரும் சேர்ந்து கலைமகளாகிய இந்த தெய்வத்தை துதிப்போம் வாருங்கள். இவளை வணங்கி

 ISBN Number: 978-93-91115-95-1

போற்றி வாழ்வது என்பது எளிதானதல்ல என்பதை அறியுங்கள். வேத மந்திரங்களை உதட்டளவில் உச்சரித்து புத்தகங்களை வரிசையாக ஒன்றின் மேல் ஒன்றாக வைத்து அவற்றின் மீது சந்தனத்தையும் பூவையும் வைத்து வழிபடும் சடங்கு இவ்வளவு பெரிய வழிபாட்டு முறை அல்ல. இல்லங்கள் தோறும் அறிவு கலைகளின் விளக்கம் பெருக்கல் தோறும் ஓர் இரண்டு பள்ளிகள் தேசம் ஒழுக்க உள்ள பளபள ஊர்கள் நகரங்களில் கல்விக்கூடங்களை ஏற்படுத்துதல் கல்வியறிவு இல்லாத ஊரினை தேடி கண்டறிந்து நெருப்பிட்டு அளித்தல் இவை எல்லாம் தீயதை அளிக்கும் அமுதமாக விளங்கும் என தாய் கலைவாணையோடு நட்புக் கொள்வதற்கான பாதைகளாக பாருங்கள் என கலைவாணியான சரஸ்வதி தேவியை எவ்வாறு தொழுக வேண்டும் என்பதை கூறி இருக்கிறார் பாரதியார். இதேபோல் முப்பெரும் பாடல்களில் ஒன்றான பாஞ்சாலி சபதத்தை எழுதுவதற்கு முன் சரஸ்வதி தேவியை தொழுதே படைத்திருக்கிறார் அதில்,

**வேதத் திருவிழியாள்,-அதில்**
**மிக்க பல்லுரை யெனுங் கருமையிட்டாள்**
**சீதக் கதிர் மதியே-நுதல்**
**சிந்தனையே குழ லென்றுடையாள்,**

**(பாஞ்சாலி சபதம்- சரஸ்வதி வணக்கம்)**


ISBN Number: 978-93-91115-95-1

என்ற பாடலில் கலைமகள் வேதங்களை இரண்டு கண்களாக கொண்டவள் கண்களில் பலவித வேத நூல்களுக்கான விளக்க உரைகளையே கருமை நிற மையாக தீட்டியவள் குளிர்ந்த ஒளியினை உடைய சந்திரனையே நெற்றியாகவும் சிந்தனைகளையே நீளமான அடர்ந்த கூந்தலாகவும் கொண்டவள் தடுக்க சாஸ்திரம் என்னும் செவிகளில் சித்தாந்த முடிவு என்னும் தோடு அணிந்தவள் ஞானத்தையே மிருதுவான நாசியாகவும் நன்மைகளை மிகுதியாக வழங்கும் சாத்திரங்களையே வாயாகவும் உடையவள் நமது சரஸ்வதி தேவியான வேத நூல்களுடன் சரஸ்வதி தேவியின் தோற்றத்தை ஒப்பிட்டு கூறியிருக்கிறார் பாரதியார்.

**பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொல் பனுவலும் யான்**
**எண்ணும் பொழுது எளிதெய்த நல்காய் எழுதா மறையும்**
**விண்ணும் புவியும் புனலும் கனலும் வெங்காலும் அன்பர்**
**கண்ணும் கருத்தும் நிறைந்தாய் சகல கலாவல்லியே (ஸ்ரீ குமரகுருபரர், சகலகலாவல்லி மாலை-6)**

 ISBN Number: 978-93-91115-95-1

எல்லாம் கலைகளிலும் வல்லமை தருபவள் எழுதப்படாதவையான வேதங்களிலும் வானம் பூமி நீர்தி விரைந்து வீசும் காற்று ஆகிய ஐம்பூதங்களிலும் பக்தர்களின் கண்களிலும் நெஞ்சிலும் நிறைந்து இருப்பவள் இசையும் ஆடலும் மற்ற எல்லா விதமுமான கலைகளையும் நிறைந்ததான முத்தமிழ் பாடல்களை நான் நினைத்த மாத்திரத்தில் எழுதுவதற்குரிய ஆற்றலை எனக்கு அருள்வாய் என குமரகுருபரர் சரஸ்வதி தேவியை வேண்டி வணங்குவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

**திருமகள் வழிபாடு**

திருமகளாக கூறப்படுபவர் லட்சுமி தெய்வமே ஆகும். கல்விக்கு எடுத்துக்காட்டாக கூறப்படும் கலைமகளை போல செல்வத்திற்கு எடுத்துக்காட்டாக கூறப்படுபவர் திருமகளே ஆவர். இவர் செந்தாமரை மலரில் வீற்றிருப்பவர். இந்த திருமகளை பற்றி பாரதியார்,

**மலரின் மேவு திருவே- உன் மேல்**
**மையல் பொங்கி நின்றேன்!**
**நிலவு செய்யும் முகமும் - காண்பார்**
**நினைவ ழிக்கும் விழியும்,**
**கலக லென்ற மொழியும் -தெய்வக்**
**களிது லங்கு நகையும், (தோத்திர பாடல் - 57)**

செந்தாமரை மலரின் மேல் உரைகின்ற திருமகளே உன் மீது காதல் பெருக்கெடுத்து நிற்கிறேன் சந்திரன்


ISBN Number: 978-93-91115-95-1

ஒளியை வெளிப்படுத்துகின்ற முகமும் பார்ப்பவர்களுடைய மதியை மயக்கும் கண்களும் கலகலவென்று உரைக்கும் பேச்சும் இறைவனின் பேரின்பம் வழங்கும் சிரிப்பும் பொலிவுடன் திகழ்கின்ற உணவு திருமேனியையும் தரிசித்து உன்னால் ஆனந்தம் பெற அழைக்கின்றேன் என லட்சுமி தேவியை தரிசிப்பதை பற்றி கூறுகிறார். திருமகளின் அருளை பெற ஆசைப்பட்டு பாரதியார் திருமகளை போற்றிப் பாடி இருக்கிறார் என்பதை வரிகளை அடிப்படையாகக் கொண்டு நாம் காணலாம். இதே போல்,

**செல்வ மெட்டும் மெய்தி - நின்னாற்**
**செம்மை யேறி வாழ்வேன்;**
**இல்லை என்ற கொடுமை - உலகில்**
**இல்லையாகவே வைப்போம்**

**(தோத்திரப் பாடல்- 57 (5)**

வரம்பற்ற இனிமை கொண்டவளே நான் எட்டு வகை செல்வங்களான பொன் பொருள், புகழ், சுற்றமும் நட்பும், பூமி, மனைவி, மக்கள், அரசு, கவுரவம், ஆளடிமை, அதிகாரமாகியவற்றை உன்னால் அடைந்து இவ்வுலகில் சிறப்புற வாழ்வின் வறுமை என்னும் பாதகத்தை இந்த பூமியிலிருந்து ஒட்டிடுவேன். முல்லைமலர் ஒத்த சிறுநகை சிந்தி என் ஆசை துன்பங்களை ஒழித்து என்னை நீ எந்நாளும் வாழ வைப்பாயாக! என்ற வரிகளில்


ISBN Number: 978-93-91115-95-1

திருமகளை பாரதியார் தனக்கு ஆசைகளை கட்டுப்படுத்திட வேண்டும் என்று விரும்புவதாக கூறுகிறார். இதே போல்,

**அழகுடைய பரியும்**
**வீடுகளும் நிலமும்**
**விரைவினிலே தருவாய்! (தோத்திர பாடல் -58)**

என்ற வரிகளில் ஆடுகள் பசுக்கள் அழகான குதிரைகள் வீடுகள் மிகப்பெரிய விளைச்சல் பூமி ஆகியவற்றை சீக்கிரமாக எனக்கு கொடுக்க வேண்டும். உனக்கு இணையான கடவுள் இவ்வுலகில் யாரும் இல்லை. எனக்கு உன்னைத் தவிர வேறு யாரும் அடைக்கலும் இல்லை. காய்ந்து கிடக்கின்ற நிலத்தை பார்த்து மனம் இழகாமல் போகின்ற மழையைப் போல உள்ளம் நெகிழாமல் இருக்கிறாயே. நான் விரும்புகிற எல்லா செல்வமும் முதலியவற்றை எல்லாம் சிறப்பாக எனக்கு தந்திடுவாய். திருமகளை பெருமைமிக்க பேரின்பமே எமக்கு அருள் புரிவாயாக! என திருமகளை பாரதியார் தனக்கு அத்தனை செல்வமும் வேண்டும் என வணங்குவதை காணலாம்.

**நற்றவ நடையினிலும்- நல்ல**
**நாவலர் தேமொழித் தொடரினிலும்**
**உற்றசெந் திரு தாயைத்- நித்தம்**
**உவகையிற் போற்றியிங் குயர்ந்திடுவோம்**

 ISBN Number: 978-93-91115-95-1

(தோத்திரப் பாடல்- 59)

என்ற வரிகளில் வெற்றியைப் பெற்றுத் தருகின்ற சேனையிலும் பண்புமிக்க சொற்களை பேசுகின்றவர் வீட்டு வாயில்களிலும், நல்ல ஒழுக்க நெறிகளிலும், மிகச்சிறந்த நாவண்மை உடையவரின் தேன் போன்ற இனிமை மிக்க சொல்லாற்றலிலும், பொருந்தி இருக்கும் லட்சுமி அன்னையை அனுதினமும் மகிழ்வோடு துதித்து பூமியில் மேலோங்கி சிறந்து விடுவோம். நாம் அறிந்த பல கலை அறிவுகள் அனைத்தும் அவள் அருளால் புகழ்பெற அதனால் நமது வறுமை நீக்கிடுவோம். லட்சுமி தேவியை துதிப்பதால் நமது வறுமை நீங்கி இவ்வுலகில் நமக்குத் தேவையான அனைத்து நன்மைகளும் கிடைக்கும் என்று உரைக்கிறார்.

**அல்லா வழிபாடு**

அல்லா எனப்படுபவர் இஸ்லாமிய மத கடவுளாவார். இவர் இஸ்லாமிய மக்களால் போற்றி வணங்கப்படுபவர். இந்த அல்லாவை பற்றி பாரதியார் சமூக கவிதைகளில் கூறியிருக்கிறார். அவையாவன,

**பல்லாயிரம் பல்லாயிரம் கோடி கோடி யண்டங்கள்**
**எல்லாம் திசையிலுமோ ரெல்லை யில்லாவெளி வானிலே**
**நில்லாது சுழன்றோட நியமஞ் செய்தருள் நாயகன்**

 ISBN Number: 978-93-91115-95-1

**சொல்லாலும் மனதாலுந் தொடரொணாத பெருஞ்சோதி**

**அல்லா அல்லா அல்லா (தோத்திர பாடல்- 78)**

ஆயிரம் லட்சம் கோடிக்கணக்கான பிரபஞ்ச தொகுதிகளை எல்லா திசைகளிலும் ஓர் வரம்பு இல்லா பரந்த வெட்ட வெளியான ஆகாயத்திலே இடைவிடாது இயங்கிக் கொண்டிருக்கும்படி விதித்த கருணை தலைவனே வாக்காலும் எண்ணத்தாலும் எட்டையெல்லாம் மிகப்பெரிய ஒளி மாயமானவனே என அல்லாஹ்வை பாரதியார் பாட காண்கிறோம்.

இதேபோல் மற்றொரு பாடலில்

**கல்லாதவராயினும்**

**உண்மை சொல்லாதவராயினும்**

**பொல்லாதவராயினும் தவம் இல்லாதவராயினும்**

**நல்லோரை நீதியின் படி நில்லாதவர் ஆயினும்**

**எல்லாரும் வந்தேற்றும் அளவில் யம பயங்கிட செய்பவன்**

**அல்லா அல்லா அல்லா (தோத்திர பாடல்கள்-78(2)**

படிப்பறிவு இல்லாதவர்களாக இருந்தாலும், சத்தியத்தைக் கடைப்பிடிக்காதவராக இருந்தாலும், மிகவும் தீயவர்களாக இருந்தாலும்,தவ வலிமை அற்றவர்களாக இருந்தாலும், சான்றோர் கூறிய அறநெறிகளின்படி நடக்காதவர்களாக இருந்தாலும்,

 ISBN Number: 978-93-91115-95-1

யாவரும் வந்து தொழுதமறுகணமே அவர்களுக்கு மரண பயத்தை அழித்திடுவான் என தீயவர்களுக்கு உரிய தண்டனையை அளிக்கும் கடவுளாக அல்லாஹ்வை இவ்விடத்து பாரதியார் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு அல்லாவையும் மத இன பேதங்கள் இன்றி எல்லா கடவுள்களையும் இயல்பாகவே மக்கள் வணங்கி போற்ற வேண்டும் என்பதற்காக பாரதியார். நம் மக்கள் ஒற்றுமையில் இணைக்க வேண்டும் என்பதற்காக தனது கவிதைகளில் வீரத்தை மட்டுமில்லாமல் வேதமின்றியும் படைத்திருப்பதை காணலாம்.

**இயேசு வழிபாடு**

இயேசு என்பவர் கிறிஸ்துவ மதத்தின் கடவுளாக போற்றப்படுபவர். இந்த இயேசுவைப் பற்றி பேதமின்றி பாரதியார் தனது கவிதைகளில் எழுதி இருக்கின்றார். இதை,

**நேசத் தீர் இதன் உட்பொருள் கேளீர்**
**தேவர் வந்து நமக்குட் புகுந்தே**
**நாச மின்றி நமை நித்தங் காப்பார்**
**நம்அ கந்தையை நாம் கொன்று விட்டால்.**

**(தோத்திரப் பாடல்-77)**

என்ற பாடலில் இறைவன் இயேசுவாக இங்கே தோன்றி சிலுவையில் அறையப்பட்டு உயிரிழந்தான். மூன்றாம் நாளில் மீண்டும் உயிரிழந்த அன்புடைய மேரி மாதா


ISBN Number: 978-93-91115-95-1

கண்ணெதிரே இந்த நிகழ்வை பார்த்தாள். என் நாட்டு மக்களே! இதனுடைய உட்கருத்தை கேட்பீராக. நாம் நமது ஆணவத்தை அழித்துவிட்டால் தெய்வ சக்திகள் இங்கு தோன்றி நமக்குள் கலந்து துன்பம் ஏற்படாமல் நம்மை அனுதினமும் பாதுகாப்பார்கள். என்று கடவுளை நாம் ஆணவம் அழித்து வழிபட்டால் நமக்கு நன்மையே செய்து நம்மை பாதுகாப்பார் என்கின்ற பாரதியார்.

இதே போல் மற்றொரு பாடலில்,

**பெண்மை கான் மரியா மக்லேநா**
**பேணும் நல்லறம் இயேசு கிறிஸ்து**
**உண்மை கொண்ட பொருளிது கண்டீர்**
**நொடியிலிஃது பயின்றடலாகும்.**

**(தோத்திரப் பாடல்- 77)**

நமது உள்ளுணர்வை சத்தியம் என்ற சிலுவையில் கட்டி தவமாகிய ஆணையால் அடித்து வல்லமை மிக்க இயேசு கிறிஸ்து விண்ணாகிய ஆகாயவெளியில் விளங்குவர். பெண்மையின் குறியீடு தான் மேரி மக்தலேனா. நல்ல அறநெறியின் குறியீடு தான் இயேசு கிறிஸ்து. இதுவே நுட்பமான கருத்தாகும் என்று அறிவீர்களா காணப்பொழுதில் இதை நாம் அறிந்து விடலாம். என்று இயேசு கிறிஸ்துவையும், மேரி மாதாவையும் பற்றி பாரதியார் புகழ்ந்துரைப்பதையும் காணலாம்.


ISBN Number: 978-93-91115-95-1





இவ்வாறு அல்லா மட்டுமல்லாமல் இயேசு கிறிஸ்துவையும் மேரி மாதாவையும் புகழ்ந்துரைப்பதைக் காணலாம். அனைத்து கடவுள்களும் ஒருவரே என்பதை நமக்கு உணர்த்தும் பொருட்டு எல்லா கடவுள்களையும் பற்றி கவிதை பாடி நம்மை ஒன்றிணைப்பதை காணலாம்..

முடிவுரை

பாரதியார் தமது கவிதைகளில் சுதந்திர தாகம் வீரம் என இல்லாமல் முற்றிலும் அவற்றிலிருந்து மாறுபட்டு கடவுள் வழிபாட்டையும் பாடி இருப்பது ஆச்சரியமான ஒன்றே இவரது கவிதை நூல்களை புரட்டினால் நமக்குத் தேவையான அத்தனை கருத்துக்களையும் அவரது வரிகளில் அடக்கி வைத்திருப்பதை காண முடிகிறது பொதுவாக கடவுள் வாழ்த்து எனக் கூறிவிடாமல் தனித்தனியாக விநாயகர் முருகன் இவர்களுடன் கண்ணன் மற்றும் காளியனம் தெய்வங்களைப் பற்றிய பாடல்களை பாடியதுடன் சக்தியை பற்றிய அதிக அளவில் போற்றிப் பாடி இருக்கிறார் இதன் வழி பாரதியார் சக்தி வழிபாட்டில் இரண்டரை கலந்துள்ளதற்கு அவரது கவிதை வரிகளேயே சாட்சியாக கொள்ளலாம். இவ்வாறு பாரதியார் கவிதைகளில் சக்தி காளி மற்றும் கண்ணன் விநாயகர் முருகன் என அனைத்து கடவுள்களையும்

வணங்கி பாடி இருப்பதை கட்டுரையின் மூலம் காணமுடிகிறது.

**பயன்பட்ட நூல்கள்**


[1] முனைவர் சு. உஷாராணி. *பாரதியார் கவிதைகள் மூலமும் தெளிவுரையும்*, தொகுதி-1. முதற் பதிப்பு- 2019 .

[2] உரையாசிரியர் இரா. செயபால். *அகநானூறு*. ஆறாவது பதிப்பு, அக்டோபர் -2017.

[3] கு.வே. பாலசுப்பிரமணியன். உரையாசிரியர், நற்றிணை, ஆறாவது பதிப்பு 2017.

[4] மா. பரிமணம், கு.வே. பாலசுப்பிரமணியன், உரையாசிரியர், *புறநானூறு*. ஆறாவது பதிப்பு- 2017.

[5] ஞா மாணிக்கவாசகம். *பத்துப்பாட்டு மூலமும் உரையும்*. இரண்டாம் பதிப்பு, ஆகஸ்ட்- 2007.

[6] முனைவர்.அ. விசுவநாதன். *கலித்தொகை*. ஐந்தாவது பதிப்பு அக்டோபர் -2013.

[7] நா.மு .வெங்கடசாமி நாட்டார். உரை. *சிலப்பதிகாரம்* (மதுரை காண்டம்).

[8] ஞா.மாணிக்கவாசகன். *எட்டுத்தொகை*. உமா பதிப்பகம், சென்னை.

[9] *நல்வழி*

[10] *முதல் திருமுறை*


 **ISBN Number: 978-93-91115-95-1**

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

 **ISBN Number: 978-93-91115-95-1**

# The Worshipping Methods as Seen in Silambu

**Dr. V. Prabhavathi,** Assistant Professor, Department of Tamil, VVV College, Virudhunagar- 626001, Tamilnadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0003-0395-075X**
**DOI: 10.5281/zenodo.7776920**

## Abstract

*Religion in society is something that can be felt by humans. Religion is belief in the rare reality of the supernatural. Religion works as a good tool to cultivate human feelings. The era of worshipping nature as God has changed and man has created many religions with many leaders before his eyes. They have evolved into many branches such as Saivism, Vaishnavism, Jainism, Buddhism, Islam and Christianity and are conveying many good ideas to the world. On that basis, Silapathikaram, the first epic of Tamil, can be said to be a non-religious copy, but many religious ideas are embedded in it. This chapter aims to explain the life values of many religious traditions that are found in Silambu (Silapathikaram).*

**Keywords**: *Worship, Methods, Silapathikaram.*

## References

[1] Subramanian, S.V. *Silapathikaram*. Ganga Bookstore, Chennai.
[2] Sivajnanam, M.B.O. *Silapadhikarasintuyu Alakai.* Amman Publishing House, Trichy, 2012.
[3] Irakubaran, K. Cultural Circles in *Silapathikaram*. Department of Hindu Religious and Cultural Affairs, Sri Lanka, 2003.

[4] Mohan, I. Nirmala Mohan, *Panmuganokkil Silapathikaram*, Vanathi Publishing House, Chennai.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

 ISBN Number: 978-93-91115-95-1

# சிலம்பு உணர்த்தும் வழிபாட்டு மரபுகள்


**முனைவர். வெ. பிரபாவதி**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர் - 626001, தமிழ்நாடு, இந்தியா

**ORCiD: https://orcid.org/0000-0003-0395-075X**



**DOI: 10.5281/zenodo.7776920**


**ஆய்வுச்சுருக்கம்**


*சமூகத்தில் சமயம் என்பது மனிதனால் உள்ளத்து உணரக் கூடியதாகும். இயற்கைக்கு அப்பாற்பட்டு விளங்கும் அரிதான உண்மையை நம்புவதே சமயமாகும். மனித உணர்வுகளை பண்படுத்தும் நல் கருவியாக சமயம் செயல்படுகிறது. இயற்கையைக் கடவுளாக வழிபட்ட காலம் மாறி மனிதன் தன் கண் முன்னே பல தலைமைகளைக் கொண்டு பல சமயங்களைத் தோற்றுவித்தான். அவை சைவம், வைணவம், சமணம், பௌத்தம், இஸ்லாம், கிறித்தவம் என பல கிளைகளாக பரிணமித்து நல்ல பல கருத்துக்களை உலகிற்கு உணர்த்தி வருகின்றது. அவ்வடிப்படையில் தமிழின் முதற்காப்பியமான சிலப்பதிகாரம் சமயச்சார்பற்ற காப்பியமாகக் கூறப்படினும் அதில் பல சமயக் கருத்துக்கள் பொதிந்துள்ளன. சிலம்பில் இடம் பெறும் பல*

*வழிபாட்டு மரபுகள் எத்தகைய வாழ்வியல் விழுமியங்களை எடுத்தியம்புகின்றன என்பதை விளக்கும் முகமாக இவ்வாய்வு கட்டுரை அமைகின்றது.*

**குறிப்புச் சொற்கள்:** வழிபாடு, முறைகள், *சிலப்பதிகாரம்.*

**முன்னுரை**

மனித மனம் என்பது ஏதாவது ஒன்றைப் பற்றுதலாய் அடையவே விரும்பும். அவ்வகையில் மனமானது இறைவனைப் பற்றிக் கொண்டு அவ் இறைப்பணிக்காக தன் வாழ்வையே அர்ப்பணிப்பது சிறந்த பக்தி நெறியாகும். இந்த பக்திநெறியில் மனிதன் தன்னை முழுவதுமாய் பிணைத்துக் கொண்டு மற்றவர்களையும் தன் பக்கம் பிணைத்துக் கொள்ள முயல்கிறான். இத்தகைய மனித மனநிலையின் விளைவுகளே சடங்கு, நம்பிக்கை, வழிபாடு ஆகியவைகள் எனலாம். இந்த வழிபாட்டு மரபுகளின் பல்வேறுபட்ட நிலைகளை எண்ணற்று இருக்கும் தமிழ் இலக்கியங்களில் காண முடிகின்றது. இலக்கியங்களில் வெளிப்படும். வழிபாட்டு முறைகள் வழி அக்கால மக்களின் சமய நம்பிக்கைகளைத் தெற்றென அறிந்து கொள்ள முடிகின்றது.. அறிவியல் தொழில்நுட்பம் வளர்ந்து வரும் இத்தகைய காலக்கட்டத்தில் நம்

 ISBN Number: 978-93-91115-95-1

முன்னோர்கள் மீட்டெடுத்த சடங்கு முறைகளையும், வழிபாட்டு மரபுகளையும் நினைவுக் கூர்வது அவசிய தேவையாகின்றது.

**ஆய்வு அணுகுமுறைகள்**

பல வழிபாட்டு மரபுகளைத் தன்னகத்தே கொண்டுள்ள தமிழின் முதன்மைக் காப்பியமான சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றிருக்கக் கூடிய வழிபாட்டுச் செய்திகளை எடுத்தியம்பும் நோக்கில் இவ்வாய்வுக் கட்டுரையின் பொருண்மை தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சிலப்பதிகாரத்தில் நிறைந்துள்ள வழிபாட்டு மரபுகளை விளக்கும் விதமாக விளக்க முறைத் திறனாய்வு அணுகுமுறையும், உலகிற்கு வழிபாட்டுச் செய்திகளை எடுத்துரைப்பதால் எடுத்துரைப்பியல் அணுகுமுறையும், சிலப்பதிகார சமயச் செய்திகளை பிற இலக்கியங்களோடு ஒப்பிடுவதால் ஒப்பீட்டு முறை திறனாய்வு அணுகுமுறையும் இவ்வாய்வில் பின்பற்றப்பட்டுள்ளன.

**வழிபாடு – தோற்றம்**

ஆரம்பக் காலத்தில் மக்களிடம் அச்சம், போராட்டம், நன்றியுணர்வுகளால் பெற்ற தெய்வ சிந்தனை வளர்ந்து வழிபாடு தொடங்கலாயிற்று. ஞாயிறு,


ISBN Number: 978-93-91115-95-1

ஆறு, நெருப்பு போன்ற இயற்கைப் பொருட்களைத் தான் மக்கள் தெய்வங்களாக வழிபட்டனர். இயற்கை வழிபாட்டின் தொடர்ச்சியாக பாம்புவழிபாடும், மரவழிபாடும் தோன்றின. எருது, யானை, கருடன் ஆகிய உயிரின வழிபாடுகள் இதன் பின் தோன்றியதாகக் கொள்ளலாம். மர வழிபாட்டின் வளர்ச்சி நிலை தான் இன்று தல விருட்ச வழிபாடாக விளங்குகின்றது. குழந்தைப்பேறு இல்லாத பெண்கள் இன்றும் அரசமரத்தைச் சுற்றி வந்து வணங்குவதைக் காண முடிகிறது. அதுபோல கிராம மக்கள் வேப்பமரத்தை மாரியம்மனாகவும், பனைமரத்தை இசக்கியம்மனாகவும் எண்ணி வழிபாடு செய்வதை மரவழிபாட்டின் வளர்ச்சி நிலையாகக் கொள்ளலாம். அடுத்தாக சிறுதெய்வ வழிபாடு, பெருந்தெய்வழிபாடு தோன்றியது. குறிப்பாக மனிதன் மனப்பிணிகளைக் கடவுள் வழிபாடு தணிக்கும் என்பது உலகமெங்குள்ள நம்பிக்கை ஆகும். ஆகவே தான் இறைவனை வணங்கி அவனது அருளைப் பெறும் நோக்கத்துடன் கோயில்கள் அமைக்கப்பட்டன.

***சிலப்பதிகாரம்***

தமிழில் எழுந்த ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று சிலப்பதிகாரமாகும். சிலம்பு காரணமாக எழுந்த கதை ஆனதால் சிலப்பதிகாரம் எனப் பெயர் பெற்றது. இதனை

 ISBN Number: 978-93-91115-95-1

இயற்றியவர் இளங்கோவடிகள் ஆவார். இந்நூல் மூன்று காண்டங்கள் மற்றும் 30 காதைகளை உடையது. தமிழில் தோன்றிய முதற்காப்பியம் என்ற சிறப்பிற்குரியது. இது உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள், முத்தமிழ் காப்பியம், நாடகக் காப்பியம், ஒற்றுமைக் காப்பியம், குடிமக்கள் காப்பியம், வரலாற்றுக்காப்பியம், புரட்சிக்காப்பியம், புதுமைக்காப்பியம் என்று இவை போன்ற பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது. வணிககுலத்தில் பிறந்த கோவலன், கண்ணகி பற்றிய கதையே சிலப்பதிகாரம் ஆகும்.

**சிலம்பு உணர்த்தும் வழிபாட்டு மரபுகள்**

தமிழ்க் காப்பிய மரபில் தனித்துவமான அடையாளமாக விளங்குவது சிலப்பதிகாரமாகும். அது மட்டுமின்றி அக்கால தமிழ் மக்களின் வாழ்வியலை மிக அழகாக சித்தரிக்கக் கூடிய நூலாகவும் இது திகழ்கிறது. மனித வாழ்வியலோடு இரண்டற கலந்து விளங்கக் கூடிய வழிபாடு தொடர்பான மரபுகள் இதில் குவிந்துள்ளன. சமயச்சார்பற்ற காப்பியமாக இது கூறப்படினும் இளங்கோவடிகள் அவரை அறியாமலேயே வழிபாடு தொடர்பான பல பண்பாட்டுப் பதிவுகளைக் கூறிச் சென்றுள்ளார். சிலம்பில் காணப்படும் வழிபாடுகளைக் கீழ்க்கண்டவாறு பகுக்கலாம்.


ISBN Number: 978-93-91115-95-1

- இயற்கை வழிபாடு
- சிவவழிபாடு
- முருக வழிபாடு
- திருமால் வழிபாடு
- இந்திர வழிபாடு
- கோயில் கோட்ட வழிபாடு
- கொற்றவை வழிபாடு
- சமண வழிபாடு
- நடுகல் வழிபாடும், பத்தினி வழிபாடும்

**இயற்கை வழிபாடு**

மனிதன் தொடக்கக் காலத்தில் தன் கண் முன்னே காணும் இயற்கையைத் தான் வழிபட தொடங்குகிறான். ஆதிமனிதனின் வழிபாட்டில் ஞாயிறு, திங்கள், மழை ஆகியவைகளே முதன்மையான இடத்தினை பெற்றிருந்தன. இளங்கோவும் தன் நூலின் தொடக்கத்தில் இம் மூன்றையும் வழிபட்டே நூலினைத் தொடங்குகிறார். இதை,

**திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்**
**ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்**
**மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்**
**(மங்கல வாழ்த்துப்பாடல் 4-7)**

என்ற அடிகள் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

 ISBN Number: 978-93-91115-95-1

### சிவவழிபாடு

சிவவழிபாடு என்பது சிவநெறி ஆகும். இதனைச் சைவநெறி என்றும் கூறலாம். சைவச் சமயத்தின் முழுமுதற் கடவுளாக சிவபெருமான் திகழ்கிறார். சேரன் செங்குட்டுவன் சிவபெருமான் அருளினாலே பிறந்தவன் என இளங்கோ சிலப்பதிகாரத்தில்,

**செஞ்சடை வானவன் அருளினில் விளங்க**

**வஞ்சித் தோன்றிய வானவன் (கால்கோட்காதை: 98 – 99)**

எனக் கால்கோட்காதையிலும்,

**ஆனேறு ஊர்ந்தோன் அருளில் தோன்றி**

**மாநிலம் விளக்கிய மன்னவன் (வரந்தரு காதை 67-68)**

என வரந்தரு காதையிலும் குறிப்பிடுகிறார். சிவனருளால் பிறந்த சேரன் செங்குட்டுவன் சிறந்த சிவபக்தனாக விளங்குகிறான். சேரன்செங்குட்டுவன் வடநாட்டுப் படையெடுப்பை மேற்கொண்டு புறப்படுகிறான். அனைத்துப் பணிகளையும் முடித்தப் பிறகு வஞ்சி மாநகரில் வீற்றிருக்கக்கூடிய சிவன் கோயிலுக்குச் சென்று வணங்குகிறான். யாருக்குமே தலைவணங்காத அவனது திருமுடி சிவபெருமான் முன்னால் தாழ்ந்து பணிகிறது. இதை,

நிலவுக்கதிர் முடித்த நீளிருஞ்சென்னி


ISBN Number: 978-93-91115-95-1

**உலகு பொதி யுருவத் துயர்ந்தோர் வேடி**
**மறஞ்சேர் வஞ்சி மாலையொடு புனைந்து**
**இறைஞ்சாச் சென்னி இறைஞ்சி வலங்கொண்டு**
**(கால்கோள் காதை – 54 – 57)**

என்ற அடிகள் தெற்றென உணர்த்துகின்றது. அது மட்டுமல்லாமல் அவன் தீவிர சிவபக்கதனாக விளங்கியமையை, யானை மேல் வந்து கொண்டிருந்த செங்குட்டுவனிடம் கோயில் பட்டர்கள் திருமாலின் பிரசாதத்தைக் கொடுத்தனர். அவன் அதை வாங்கித் தன் தோள் மீது வைத்துக் கொண்டானாம். ஏனெனில் சிவபெருமானின் திருவடி அவன் தலையில் இருப்பதால் அவன் திருமாலின் சேடத்தை வாங்கி தோள் மீது வைத்துக் கொண்டதாக இளங்கோ குறிப்பிடுகிறார். இதிலிருந்து சேரன் செங்குட்டுவன் சிவபெருமான் மேல் கொண்ட அதீத பக்தி வெளிப்படுகிறது.. சிவபெருமான் தான் தனக்கு எல்லாம் என்ற போதிலும் மற்ற கடவுளை அவன் வெறுக்கவில்லை. பட்டர்கள் கொடுத்த பிரசாதத்தை வாங்க மறுக்காமல் அதை வாங்கி தன் தோளில் இருத்திக் கொண்டது அவனது சமயப் பொறையைக் காட்டுகின்றது.

கனக விசயரைத் தோற்கடித்து வெற்றி கொண்ட சேரன் செங்குட்டுவன் தன் அமைச்சனை அழைத்து

 ISBN Number: 978-93-91115-95-1

வேள்வி செய்து சிவ வழிபாட்டில் ஈடுபட்டிருக்கும் அந்தணர்கட்கு எந்தத் துன்பமும் வராதவாறு சென்று காக்க வேண்டும் என்று கட்டளை இடுகிறான். இதிலிருந்து அவன் சிவனடியார்கள் மேல் கொண்ட பற்றினையும் அறிய முடிகின்றது. மேலும், சேரன் செங்குட்டுவன் நடத்திய போரில் தோற்றவர்கள் உடல் முழுவதும் திருநீறு பூசிய சிவனடியார்கள் போலவே தங்களை மாற்றிக் கொண்டு ஓடினார்கள் என்று குறிப்பிடுகின்ற செய்தியால் சிலப்பதிகாரக் காலத்தில் திருநீறு பூசி சிவனை வழிபடும் வழக்கம் இருந்தமை உறுதியாகின்றது.

குன்றக்குரவையில், சிவபெருமான் ஆலமரத்தின் கீழ் அமர்ந்து முனிவர்களுக்கு அறம் உரைத்து அருளியதும், சிவபெருமான் கயிலை மலையில் வீற்றிருப்பதும் மலையரசன் மகளாகிய உமையவளை மணந்ததும் குறிக்கப் பெற்றுள்ளன. ஊர்காண் காதையில், மதுரை நகரில் திருஆலவாயான் திருக்கோயிலில் நான்மறை ஓசைகள் முழங்கின என்ற செய்தி குறிக்கப் பெறுகிறது. சிவபெருமானுடைய கொடு கொட்டிக் கூத்தினைக் கடலாடு காதையில், காண முடிகிறது. ஆக, சிலம்பில் இடம் பெறும் செய்திகளால் சிவபெருமான் பெரியோன் என்பதும், நெற்றிக்கண் உடையவன்


ISBN Number: 978-93-91115-95-1

என்பதும், உமையவளை ஒரு பாகத்தில் கொண்டவன் என்பதும், ஆலின்கீழ் அறமுரைத்தவன் என்பதும் தெரிய வருகின்றது. மேலும், சிவபெருமானைக் குறிக்கின்ற இடங்களில் எல்லாம் பிற தெய்வங்களுக்கு முதன்மையானவராகவே *சிலப்பதிகாரம்* காட்டுகிறது. எனவே அக்கால தமிழ் மக்களால் கடைப்பிடிக்கக்கூடிய முதன்மை வழிபாடாக சிவ வழிபாடு இருந்திருக்கிறது என்பதை உணர முடிகின்றது.

**முருகவழிபாடு**

முருக வழிபாடு என்பது தொன்மை மிக்கதாகும். சிவனின் மகனான முருகனுக்கும் தமிழர்களுக்கும் இருக்கக் கூடிய தொடர்பு மிகவும் முற்பட்டதாகும். தமிழர்களின் பண்பாட்டோடும் மொழியோடும் பின்னிபிணைந்திருந்த வழிபாடு முருக வழிபாடாகும். சிலப்பதிகாரத்தில் முருக வழிபாடு குறித்த செய்தியும் பலவிடங்களில் வருகிறது. முருகன் ஆறுமுகத் தோற்றத்தில் அழகுடன் எழுந்தருளிய கோயில் புகார் நகரில் இருந்தது. அங்கு இந்திர விழாவின் போது வேள்வி நிகழ்ந்தது. மேலும் வேலின் பெயரால் வழிபாடு நிகழ்ந்த வேற்கோட்டம் இருந்த செய்தி சிலப்பதிகாரம் வழி புலனாகிறது. சூரமாதடிந்த வேல், பிணிமுகம் கொண்டவுணர் பீடழியும் வண்ணம் செய்த வேல்,

 ISBN Number: 978-93-91115-95-1

கிரிதடிந்த வேல், என இளங்கோவடிகள் வேலினை வாழ்த்திப் பாடுகிறார். சிவன் தியானத்தில் இருந்த போது தேவர் வேண்டுகோளினால் சிவனின் நெற்றிலிருந்து ஆறு தீப்பொறிகள் தோன்றின. அவற்றை அக்னித்தேவன் சிவனின் கட்டளையால் கங்கையில் விட்டான். கங்கை வெப்பம் தாங்காது சரவண பொய்கையில் மலர்ந்த தாமரைமலரில் வைத்தாள். அங்கு உதித்தவனே ஆறுமுகன். கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப் பட்டவன். முருகன் குறித்த பிறப்புக் கதையை,

**அணிமுகங்கோராறு மீராறுகையு**
**மிணையின்றித் தாவேந்திய**
**சரவணப்பூம் பள்ளியறைத் தாய்மார் அறுவர்**
**திருமுலைப்பால் உண்டான் திருக்கை**
**வேலன்றே (குன்றக்குரவை- 9 – 10)**

என்ற பாடலடிகள் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

மேலும், முருகன் சூரபத்மனை வதம் செய்த நிகழ்வு இங்கு கூறப்படுகிறது. சூரன் கடல் நடுவே மலை வடிவாய் நின்றான். முருகன் அம்மலையை இருகூறாய் பிளந்தான். இரு கூறாய் ஆன சூரன் முருகனுக்கு வேலும், மயிலுமாக மாறினான். இக்குறிப்பினை, **கடல் வயிறு கிழித்து மலை நெஞ்சு பிளந்து** என்ற வரிகள் உணர்ந்துகின்றன. சூரபதுமனின் தமையன் தாரகாசூரன்


ISBN Number: 978-93-91115-95-1

அவனை வேலாயுத்தாற் கொலை புரிந்து மாயம் செய்த மலையுருக் கொண்ட கிரௌஞ்சனைப் பிளந்த செய்தியை,

> **…பண்டொருநாட் சூர்மா தடிந்த சூடரிலைய வெள்வேலே (குன்றக்குரவை -7)**
>
> **வருதிகிரி கோல் அவுணன் மார்பம் பிளந்து குருகுபெயர்க் குன்றம் கொன்ற நெடுவேலே (குன்றக்குரவை -10–11)**

என்ற பாடலடிகள் தெளிவாக விளக்குகின்றன.

**திருமால் வழிபாடு**

திருமாலினை முழுமுதற் கடவுளாகக் கொண்டு அவர் மீது ஆழ்ந்த பக்தி கொண்டு, அவரைப் போற்றிப் பாராட்டுவது வைணவர் இயல்பாகும். சிலப்பதிகாரத்தில் மூன்று காண்டங்களிலுமே இளங்கோ திருமாலின் பெருமைகளைக் கூறிச் சென்றுள்ளார். புகார்க் காண்டத்தில் மாதவியின் பதினொருவகை ஆடல்களைப் பற்றி விளக்கும் போது திருமால் ஆடிய நான்கு வகையான ஆடல்களைப் பதிவு செய்கிறார். மல்லன் மூதூர் மகிழ்விழாக் காண்போன் மாயோன் பாணியும் (35), கஞ்சன் வஞ்சம் கடத்தற்காக அஞ்சன வண்ணன் ஆடிய ஆடலுள் அல்லியத் தொகுதியும் (46 – 49) வாணன் பேர் ஊர் மறுகிடை நடந்து நீள்நிலம் அளந்தோன் ஆடிய குடமும் (54- 55) திருமகள் அவுணர்களைப் போர் வென்று


ISBN Number: 978-93-91115-95-1

ஆடியபாவைக் கூத்தினையும் மாதவி தன் 11 வகை ஆடலில் ஆடினாள் எனக் குறிப்பிடுகிறார் இளங்கோ,

திருமாலின் கிடந்த கோலத்தையும், நின்ற கோலத்தையும் காடுகாண் காதை காட்டுகின்றது. கோவலனிடம் மாமறையாளன் தன் கண்கள், திருமாலின் கோலத்தைக் காண விரும்பியதால் அகவணையில் பள்ளி கொண்டவனைக் காண வந்ததாகக் கூறுகிறான். இதை,

**திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்**
**வீங்கு நீரருவி வேங்கடமென்னும்**
**ஒங்குயர் மலையத் துச்சி மீமிசை (காடுகாண் காதை -40–42)**
**செங்கணெடியோ னின்ற வண்ணமும்**
**என்கண் காட்டென் றென்னுளங் கவற்ற**
**வந்தேன் குடமலை மாங்காட்டுள்ளேன்”**
**(காடுகாண் காதை -51–53)**

என்ற வரிகள் மெய்ப்பிக்கின்றன. சிலம்பில் கோயில்கள் பற்றி குறிப்பிடுகையில் பலதேவன் திருமால் போன்றோரின் கோயில்கள் ஒரே ஊரில் வழிபாட்டுக்கு உரியனவாக இருந்த செய்தியை அறிய முடிகின்றது.

கண்ணகி இடைச்சேரியில் இருந்த பொழுது பல தீ நிமித்தங்கள் தோன்றியது. அது கண்ட மாதரி, “ஆயர்பாடியில் எருமன்றத்து மாயவன் தன்


ISBN Number: 978-93-91115-95-1

தலைமயனோடு ஆடிய குரவைக் கூத்து ஆடுதும் யாம்" என்றாள். ஆய்ச்சியர் குரவையில் கண்ணன் அவதாரம் பேசப்படுகின்றது. மேலும்,

**...தொல் இலங்கை கட்டழித்த**
**திருமால் சீர் கேளதாத செவியென்ன செவியே**
**கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே**
**...பஞ்சவர்க்குத் தூது**
**நடந்தானை யேத்தாத நாவென்ன**
**நாவே (ஆய்ச்சியர் குரவை-35 –37)**

என ஆயமகளிர் கைகோர்த்து குரவைக் கூத்து ஆடுகின்றனர். அங்ஙனம் ஆடும் போது திருமாலை வழிபடாத கண், செவி, நா போன்றவை இருந்தும் பயனில்லை என்கின்றனர். வஞ்சிக் காண்டத்தில் காட்சிக் காதையில் திருமாலின் மார்பில் நீண்டு தொங்குகின்ற மாலை போல பேரியாறு ஓடியது என்று கூறுகிறார் இளங்கோ. இவ்வாறாக சிலம்பில் திருமால் வழிபாடு குறித்த செய்திகளையும், அவரின் பெருமைகளையும் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

**இந்திர வழிபாடு**

பசி, பிணி, பகை முதலியவற்றால் துன்பம் அடையாது இருத்தல் பொருட்டு இந்திரனை நினைத்து எடுக்கும் விழாவே இந்திரவிழாவாகும்.

 ISBN Number: 978-93-91115-95-1

இந்திரன் தேவாதி தேவர்களுக்கெல்லாம் தலைவன் ஆவான். மருதநிலக் கடவுளாகச் சுட்டப்படுகிறான். காவிரிப்பூட்டினத்தில் இந்திரவிழா 28 நாட்கள் நடைபெற்றதாகக் குறிப்பு காணப்படுகின்றது. சோழநாடு காவிரியால் வளம் பெற்ற மருதநிலம் சார்ந்த நாடாகும். இதில்,

**மண்ணக மருள வானகம் வியப்ப**
**விண்ணவர் தலைவனை விழுநீராட்டி**
**(இந்திரவிழவூரெடுத்த காதை – 167-168)**

என்ற அடிகளிலிருந்து இந்திர வழிபாட்டை அறிய முடிகின்றது. இந்திர விழாவின் போது மக்கள் வீதிகளிலும், கோயில்களும், பூரணகும்பங்களும் பாவை விளக்குகளும் வைத்தனர். மேலும், வாழை, கரும்பு, கமுகு, வஞ்சிக் கொடி கொண்டு நகரை அலங்கரித்தனர். வீதிகளிலும், மன்றங்களிலும் பழைய மணலை மாற்றிய புது மணல் பரப்பினர். பல்வேறு இடங்களிலிருந்து இவ்விழாவினைக் காண மக்கள் இங்கு வருகின்றனர். இன்று நாம் ஊர்களில் கொண்டாடும் திருவிழாக்களுக்கு இவ்விழா ஒரு முன்னோடி ஆகும்.

**கோயில் மற்றும் கோட்ட வடிவம்**

சங்க இலக்கியங்களில் கோயில்கள் மற்றும் கோட்டங்களுக்குப் புலவர்கள் அழகாக விளக்கம்


ISBN Number: 978-93-91115-95-1

தந்துள்ளனர். உயர்ந்த கோபுரங்களுடன் கட்டும் அரண்மனைகளைக் கோயில் எனக் சுட்டுகின்றது பரிபாடல். அதனால் தான் இறைவனுக்கு நிகராக கருதப்படும் அரசன் வீற்றிருக்கும் இடம் கோயில் என அழைக்கப்பட்டது. உயர்ந்த கோபுரங்களுடன் இறைவன் கொலு வீற்றிருக்கும் இடத்தை கோயில் என அழைத்தனர்.

கோட்டம் என்றால் மேல் வீடு என்ற பொருளைத் தரும். படிகளில் ஏறிச் சென்று கோட்டத்தில் இருக்கும், தேவர்களை வணங்கினர். பெருந்தெய்வங்கள் கைகளில் தாங்கியிருந்த வாள், வேல் போன்ற ஆயுதங்களை கோட்டங்களில் நிறுத்தி வைத்து வணங்கினர். கோட்டங்கள் மிக அழகாக உயரமாகக் கட்டப்பட்டாலும் உயர்ந்த கோபுரங்கள் அற்று இருந்தன. சிலம்பில் இளங்கோவடிகள் எந்தெந்த தெய்வங்கள் கோயிலில் இருப்பார்கள். யார் யார் கோட்டங்களில் இருப்பார்கள். கோட்டங்களில் வேறு என்ன பொருட்கள் இருக்கும் என்பதை மிக அழகாகக் கூறியுள்ளார். இந்திர விழவூரெடுத்த காதையில்,

**பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்**
**அறுமுகச் செவ்வேள் அணி திகழ்கோயிலும்**
**வால் வளை மேனி வாலியோன் கோயிலும்**

 ISBN Number: 978-93-91115-95-1

**நீலமேனி நெடியோன் கோயிலும்**

**மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்**

**(இந்திரவிழவூரெடுத்த காதை 169 – 173)**

என்று சிவன், முருகன் பலராமன், திருமால், இந்திரன் என்று பண்டைத் தமிழர்கள் வழிபட்ட கோயில்களை வரிசைப்படுத்தி கூறுகிறார். பின், கனாத்திறம் உரைத்த காதையில் கோட்டங்களையும் வரிசைப்படுத்துகிறார். இதை,

**அமரர் தருக்கோட்டம்**

**வெள்யானைக் கோட்டம்**

**புகர் வெள்ளை நாகர் தங்கோட்டம்**

**பகல்வாயில்**

**உச்சிக் கிழான் கோட்டம்**

**ஊர்க்கோட்டம் வேற்கோட்டம்**

**வச்சிரக் கோட்டம் புறம்பணையான்**

**வாழ் கோட்டம்**

**நிக்கந்தக் கோட்டம் நிலாக்கோட்டம்**

**(கனாத்திறம் உரைத்த காதை - 9-13)**

என்ற அடிகளின் வழி உணர்ந்து கொள்ள முடிகின்றது. கற்பகத் தருவை, வெள்ளையானையை, தேவர்களை, சூரியனை, ஐயனாரை, அருகத்தேவனை, சந்திரனை, முருகனின் வேலை கோட்டங்களில் வைத்து வழிபட்ட

 ISBN Number: 978-93-91115-95-1

செய்தியை இவண் உணர முடிகின்றது. ஊர்க்கோட்டம் என்பது பூஞ்சோலைகளின் இடையே வாவிகளின் அருகே காற்றை அனுபவிக்கவும், இயற்கையின் அழகைக் கண்டு ரசிக்கவும் கட்டப்பட்ட கோட்டமாகும். இவ்வாறாக கோயில்கள் மற்றும் கோட்டங்களில் மக்கள் வழிபாடு செய்தமையைச் சிலம்பு சுட்டிச் செல்கின்றது.

**கொற்றவை வழிபாடு**

கொற்றவையைப் பாலை நிலத்திற்குரிய தெய்வமாக தமிழ் இலக்கியம் குறிப்பிடுகின்றது. கொற்றவையின் வாகனமாக மான் இருந்துள்ளது என்பதையும் அறிய முடிகின்றது. மதுரை நகருக்குக் கவுந்தியடிகளுடன் நடந்து வந்த கண்ணகியும் கோவலனும் முதலில் ஒரு கொற்றவை கோவிலில் தான் தங்குகின்றனர். இதைத் தொடர்ந்து வரும் வேட்டுவ வரிப்பாடலில் கொற்றவை வருணனை வருகின்றது. கொற்றவை கோவிலில் சாலினி வெறியாடுகிறாள். இதிலிருந்து ஒருவர் மேல் சாமி வந்து ஆடும் பழக்கம் அக்காலத்திலிருந்தே இருந்து வருகின்றது என்பதை அறிய முடிகின்றது. வெறியாடிய பெண் “கொற்றவைக்குப் பலி இட்டு மேற்செல்லவும்” என அறிவிக்கிறாள். அதன் படி வீர மரபினர் தம் குடிப் பிறந்த குமரிப் பெண் ஒருத்தியைக் கோலம் செய்து கொற்றவை

 ISBN Number: 978-93-91115-95-1

ஆக்கினர். அப்பெண்ணை முன்னால் நிறுத்தி வைத்து பலிப்பிடிகை முன் நின்று மானை ஊர்தியாகக் கொண்ட கோயில் தெய்வம் கொற்றவையை வணங்கி கைத் தொழுதனர். அச்சமயத்தில் தான் சாலினி, கண்ணகியை உலகுக்கே ஒளிதரும் ஒப்பற்ற மணி விளக்கு என்று தெய்வமுற்று உரைத்தாள்.

குமரிக் கோலத்தில் நின்ற கொற்றவையை அவ்வேடுவர்கள் பிறை சூடிய பெருமாட்டி, நெற்றிக் கண் படைத்த தெய்வம், சூலம் ஏந்தியவள், காலில் வீரக்கழல் அணிந்தவள் மகிடாசுரனை வென்று அவன் முடி மீது அடி வைத்து ஆடியவள் என பலவாறாகப் பாராட்டி அவளை வழிபடுகின்றனர். இந்த கொற்றவை வழிபாட்டு வழி அக்காலத்தில் தெய்வத்திற்குப் பலியிட்டு வழிபடும் மரபு இருந்தமையையும் அறிய முடிகின்றது.

**சமண வழிபாடு**

சிலப்பதிகாரத்தில் இளங்கோ சமண சமயம் சார்ந்த செய்திகளையும், அச்சமயம் உணர்த்தும் பொது அறங்களையும் காப்பியங்களில் எடுத்துரைக்கின்றார். பூம்புகாரில் பல தெய்வக் கோயில்கள் இடம் பெற்றிருந்தன. இவற்றோடு சமண சமய வழிபாட்டு இடங்களும் அமைந்திருந்தமையைச் சுட்டிச் செல்கிறார்.

**அவலம் நீத்திறிந் தடங்கிய**

 ISBN Number: 978-93-91115-95-1

**கொள்கை**

**மெய்வகை உணர்ந்த**

**விழுமியோர் குழிஇய**

**ஐவகை நின்ற அருகத் தானத்துச்**

**சந்தி ஐந்தும் தம்முடன் கூடி**

**...இலகு ஒளிச்சிலா தலம் தொழுது**

**வலம் கொண்டு (நாடு.காண்.காதை, 16 – 25)**

என்ற இவ்வடிகள் புகார் நகரத்தில் இந்த சமண இருக்கைகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. இதில் அருகத்தானம், பெருமன்றம், சிலாவட்டம் என்ற மூவகையான சமண இருப்பிடங்கள் இருந்துள்ளமையை அறிய முடிகின்றது. அருகத்தானத்தில் இருப்பவர்கள். புலால் உண்ணாமலும், பொய் கூறாமலும் ஆகிய விரதத்தை மேற்கொண்டவர்கள் ஆவார்கள். அருகர், சித்தர், உபாத்தியாயர், ஆசிரியர், சாதுக்கள் என்ற ஐவரும் கூடும் மன்றம் பெருமன்றமாகும். இம்மன்றத்தில் சமண சமயக் கருத்துக்களைப் பரப்பியும், விவாதித்தும் அவர்கள் வந்தனர். சாரணர்கள் தங்குவதற்கும், அறக்கருத்துக்களை அறிவதற்கும் அமைக்கப்பட்ட மேடை சிலாவட்டமாகும். கோயில், மன்றம், மேடை போன்ற பல்வேறு அமைப்புகளைப் புகார் நகர அருகன் கோயில் கொண்டிருந்தது என இளங்கோ காட்டுகின்றார்.


ISBN Number: 978-93-91115-95-1

கவுந்தியடிகள் மதுரை வருவதற்கான காரணமே அருகத்தேவனை வழிபடதான் என்று கூறுவதை,

**அறவுரை கேட்டாங் கறிவனை ஏத்தத்**
**தென் தமிழ் நன்னாட்டு தீதுதீர் மதுரைக்கு**
**ஒன்றிய உள்ளம் உடையேன் ஆகலின்**
**போது வல் யானும் போது மின் (நாடு. காண். காதை. 57 – 60)**

இவ்வடிகள் மெய்ப்பிக்கின்றன. அருகப்பெருமானின் இயல்புகள் அனைத்தும் நாடு காண் காதையில் கூறப்பட்டுள்ளது. இதைக் கேட்ட கவுந்தியடிகள் ஆனந்தமும், நெகிழ்வும் அடைவதாக இளங்கோ காட்டுகிறார்.

**நடுகல் வழிபாடும், பத்தினி வழிபாடும்**

பழந்தமிழர்களின் வழிபாட்டு முறைகளுள் நடுகல் வழிபாடும் ஒன்றாக இருந்துள்ளமையை அறிய முடிகின்றது. பிற நாட்டவருடனும், பகைவருடனும் சண்டையிட்டு அப்போரிலே விழுப்புண் பட்டு வீழ்ந்து இறந்து போன வீரர்களைத் தெய்வமாகப் போற்றினர். விழுப்புண் பட்டுப் போர்க்களத்தில் மடிவதை வீரர்கள் பெருமையாகவும் கருதினர். அத்தகைய வீரர்களுக்கு கல் அமைத்து "நடுகல்"; என சிறப்பு செய்து தெய்வமாக வழிபட்டனர். இவ்வீரர்களுக்காக எடுக்கப்பட்ட கற்களை

 ISBN Number: 978-93-91115-95-1

மக்கள் வணங்கி வந்தமையைச் சங்க காலத்தில் இருந்தே அறிய முடிகின்றது. இறந்த வீரனுக்காக உடன் மாய்ந்த பெண்களுக்கும் கல் எடுப்பது உண்டு. அதனைச் சதிக்கல் என்று குறிப்பிடுவர். இவ்வாறு இறந்த வீரர்களைத் தெய்வமாகப் போற்றி நடுகல் நட்டு வழிபடும் மரபைத் தொல்காப்பியத்தில்,

**காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்**
**சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தலென்று**
**இருமூன்று மரபிற் கல்லொடு புணரச்**
**சொல்லப்பட்ட எழுமூன்று துறைத்தே**
**(தொல்காப்பியம், பொருள், புறத்திணை - 5)**

எனக் குறிப்பிடுகின்றார் தொல்காப்பியர். இந்நூற்பாவில் நடுகல் எடுத்தலின் ஆறு துறைகளாகக்காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல், பெரும்படை, வாழ்த்து என்பனவற்றைக் குறிப்பிடுகின்றது நடுகல் காதை என்று தனியான ஒரு காதையே சிலப்பதிகாரத்தில் இடம் பெறுகிறது. இந்நடுகல் வழிபாடும், சதிக்கல்லும் இணைந்து பத்தினி தெய்வ வழிபாடாக மாற்றம் பெறுகிறது.

சிலப்பதிகாரம் தமிழ்ப் பண்பாட்டின் கருவூலமாக திகழ்கிறது. அது காட்டும் பண்பாட்டில் மிகவும் குறிப்பிடத்தக்கது. பத்தினி வழிபாடாகும். கல்லைக்


ISBN Number: 978-93-91115-95-1

காணுதல் அதனைத் தேர்ந்து கொள்ளுதல், நீரில் ஆட்டுதல், கோட்டத்தில் நிலை நிறுத்துதல், வாழ்த்துதல் ஆகியன வீரர்களுக்கே என்று இருந்தன. இவற்றைக் கண்ணகிக்குரியனவாக ஆக்கிப் பத்தினி வழிபாட்டை உலகிற்கு அறிமுகப்படுத்துகிறார் இளங்கோ.

சேரமன்னனாகிய செங்குட்டுவன் கற்புடைத் தெய்வமாகிய கண்ணகிக்கு இமயமலையில் இருந்து கொண்டு வரப்பட்ட கல்லினைக் கங்கையாற்றில் நீராட்டி அக்கல்லில் சிலை (படிமம்); அமைத்து வஞ்சி நகரத்தில் (மதுரையில்) பத்தினிக் கோட்டம் அமைத்து கடவுள் மங்கலம் செய்துள்ளமையைச், சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகளால் வஞ்சிக் காண்டத்தில் நடுகற் காதையில் அழகுற விரித்துரைக்கப் பெற்றுள்ளமையைக் காணலாம்.

**பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டத்து**
**(நடுகற் காதை- 225)**
**இமையவர் உறையும் இமையச் செவ்வரைச்**
**சிமையச் சென்னித் தெய்வம் பரசிக்**
**கைவினை முற்றிய தெய்வப் படிமத்து**
**முற்றிழை நன்கலம்முழுவதும் பூட்டிப்**
**(நடுகற் காதை- 230)**
**புப்பலி செய்து காப்பக்கடை நிறுத்தி**

 ISBN Number: 978-93-91115-95-1

**வேள்வியும் விழாவும், நாடொறும் வகுத்துக்**
**கடவுள் மங்கலம் செய்கென ஏவினன்**
**வடதிசை வணக்கிய மன்னவரேறென்**
**நடுகற் காதை- 235**

இப்பாடலில், பத்தினிப் பெண்ணான கண்ணகிக்குக் கோயில்m கட்டி அதில் கண்ணகி சிலையினை நிறுவி அதற்கு பொன்னணி பூட்டி, பூக்களைத் தூவி வழிபாடு செய்து, வேள்விகளும், விழாக்களும் நாள்தோறும் நடைபெற ஆவண செய்ததுடன் நாள்தோறும் "தெய்வ வழிபாடு தொடர்ந்து செய்வீராக" என்று செங்குட்டுவன் அறிவித்துள்ளதைச் சிலப்பதிகாரம் நடுகற் காதை மூலம் அறிந்து கொள்ளமுடிகின்றது. இச்செய்தியானது வாழ்வில் திறம் பட வாழ்ந்தோர் உலக மக்களால் கல்வடிவில் தெய்வமாக நிறுத்தி வழிபடப் பெறும் உண்மையினைத் தெளிவாக எடுத்துரைப்பதை உணர்ந்து கொள்ள முடிகின்றது **கண்ணகி** காப்பியத் தொடக்கத்திலிருந்தே பத்தினி தெய்வமாக்கி காட்டுதலே ஆசிரியரின் நோக்கமாகும் போதிலார் திருவினாள், ஒருமாமணியாய் உலகிற்கு ஒங்கிய திருமாமணி என்றும் பொற்புடைத் தெய்வம், செம்பொற் சிலம்பு ஏந்திய தெய்வம், கொற்றவை, காளியின் வடிவம், பத்தினிக் கடவுள் என இளங்கோ பல இடங்களில் கண்ணகியைத்


ISBN Number: 978-93-91115-95-1

தெய்வத்தின் வடிவமாகவே பார்க்க வைக்கிறார். இறுதியில் செங்குட்டுவன் இமயத்தில் பத்தினிக்கல் எடுத்து, அதனைக் கங்கையில் நீராட்டி வடிவமைத்து வஞ்சி மாநகரிலே பத்தினிக் கோட்டத்தை எழுப்புகிறான்.

**முடிவுரை**

மனித உணர்வுகளை நெறிப்படுத்தும் நல்கருவியாக வழிபாடு செயல்படுகின்றது. தமிழின் ஒப்பற்ற படைப்பான சிலம்பில் ஏராளமான தெய்வங்களை மக்கள் வணங்கியமை தெரிய வருகின்றது. காப்பியமானது இயற்கை வழிபாட்டில் தொடங்கி பத்தினி வழிபாட்டில் முடிவடைகின்றது. சாதாரண பெண் தெய்வ நிலைக்கு உயருவதே கதையின் அடிநாதமாகும். மேலும் அக்காலத்தில் மக்கள் மிக ஆழமாக நம்பிய கடவுளர்கள் குறித்த செய்திகளையும், அவர்களை வழிபட்ட மரபுகளையும் அறிய முடிகின்றது. சமயச் சார்பற்ற காப்பியமாகக் கருதப்படினும் இதில் பொதிந்துள்ள சமயச் செய்திகள் அதிகம். சைவம், வைணவம், சமணம் போன்ற பல கடவுளர்களின் பெருமைகளையும், சிறு தெய்வ வழிபாட்டு முறைகளையும், விழாக்காலங்களில் ஊரில் நடைபெறும் நிகழ்வுகளையும் மிக அழகாக பதிவு செய்துள்ளார் மேலும் இளங்கோவடிகள். தமிழ்ப் பெண்ணொருத்தி தன்


ISBN Number: 978-93-91115-95-1

கற்புத்திறத்தால் உலகத்தார் தொழுது ஏத்தும் பத்தினியாக உருமாற்றம் பெறுவதையே. பாடுபொருளாக வகுத்துக் கொண்டார் என்பது தெளிவாக புலனாகின்றது

**பயன்பட்ட நூல்கள்**

[1] சுப்பிரமணியன் ச.வே. *சிலப்பதிகாரம்.* கங்கை புத்தக நிலையம், சென்னை.

[2] சிவஞானம், ம.பொ. *சிலப்பதிகாரத்திறனாய்வு.* அழகாய் அம்மன் பதிப்பகம், திருச்சி, 2012.

[3] இரகுபரன், க. *சிலப்பதிகாரத்தில் பண்பாட்டுக் கோலங்கள்.* இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கை, 2003.

[4] மோகன், இரா. நிர்மலாமோகன். *பன்முகநோக்கில் சிலப்பதிகாரம்.* வானதி பதிப்பகம், சென்னை.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

 **ISBN Number: 978-93-91115-95-1**

# Folk Deity Worship in *Silapathikaram*

**Dr. A. Mahabobu,** Assistant Professor of Tamil, NGM College, Pollachi, Tamilnadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0003-4761-4707**
**DOI: 10.5281/zenodo.7776988**

## Abstract

*There are many folk elements in the classical epic "Silapathikaram'. It has special features and is called as Desiya Kapiyam, Muthamil Kapiyam and Kudimakkal Kapiyam. Both minor and major deity worships are found in Silamu. Among them, this article portrays and examines the stories about the Sun, Moon, Fire God, Satukabhootams, Varnabhootams, Vana deivams, Koratavai, Aiyya, Dharaka, etc. Hence, this article gives a radical ideas on the folk deities found in the epic "Silapathikaram".*

**Keywords**: Folk, Deity, Worship, *Silapathikaram.*

## References

[1] Dr Alagu Krishnan. *Silapathikaram Kattum Panbadum Samuthaya Varalarum*. p. 282, 283.
[2] Dr. Ne.V. Karuppusamy. Tarapuram Nattupura Deivangal. p. 18.
[3] Dr. Kathir Muruku. Nattupura Vazhibatiil Thonmangal. P. 81, 82.
[4] Dr. Gnanam. Nattupuraviyal Thotramum Valarchuiyum. P. 126.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.

**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.


ISBN Number: 978-93-91115-95-1

# சிலப்பதிகாரத்தில் நாட்டுப்புறத் தெய்வவழிபாடு

**முனைவர் அ. மகபுபூ,** உதவிப்பேராசிரியை, தமிழ்த்துறை,
என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0003-4761-4707**
**DOI: 10.5281/zenodo.7776988**

**ஆய்வுச்சுருக்கம்**

*தேசியக்காப்பியம், முத்தமிழ் காப்பியம், குடிமக்கள் காப்பியம் என்ற சிறப்புகளை உடைய சிலப்பதிகாரத்தில் நாட்டுப்புறக்கூறுகள் நிறைந்துள்ளன. சிலம்பில் சிறுதெய்வ வழிபாடுகளும் பெருந்தெய்வ வழிபாடுகளும் காணப்படுகின்றன. அவற்றில் சிறுதெய்வ வழிபாடான நாட்டுப்புற வழிபாடு போன்று சூரியன், சந்திரன், தீக்கடவுள், சதுக்கபூதங்கள், வர்ணபூதங்கள், வனதேவதை, கொற்றவை, ஐயை, இயக்கி போன்றவைகள் பற்றியச் செய்திகளை நாட்டுப்புற தெய்வங்களுடன் ஒப்பிட்டு ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

**குறிப்புச்சொற்கள்:** *சிலப்பதிகாரம்*, நாட்டுப்புறத் தெய்வம், தெய்வவழிபாடு.

## முன்னுரை

நாட்டுப்புற வழிபாடுகளும் தெய்வங்களும் தோன்ற நாட்டுப்புற மக்கள் தங்களுக்கு மேலான ஆற்றலுடைய வல்லமை பெற்ற சக்தியிருந்ததாக நம்பினர். அச்சக்திதான் மக்களையும் இந்த உலகத்தையும் இயக்கிக் கொண்டிருக்கின்றது என்ற உணர்வுடன் வாழ்ந்து வருகின்றனர். இவ்வுணர்வு என்று நாட்டுப்புற மக்களின் உள்ளத்தில் தோன்றியதோ அன்றைக்கே வழிபாட்டுச் சிந்தனைகள் வளரத் தொடங்கின. தொடக்கக் காலத்தில் இடி, மின்னல், மழை, பூகம்பம், தீ போன்ற அச்சம் தரும் நிகழ்வுகளைக் கண்டு பயந்து இவற்றுக்குக் காரணம் உலகின்கண் உலவுகின்ற எண்ணற்ற ஆவிகளே என நம்பினர். அந்த ஆவிகளின் சினத்தைத் தணிக்க அவற்றைத் தேவதைகளாக எண்ணி வழிபட்டனர். மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஒன்றை வணங்க வேண்டும் என்று எண்ணிய நாட்டுப்புற மக்கள் கடவுள் கோட்பாட்டையும் காலப்போக்கில் உருவ வழிபாட்டையும் உருவாக்கினார்கள். இவ்வாறான நாட்டுப்புற வழிபாடுகளும் தெய்வங்களும் சிலப்பதிகாரத்தில் பெரும்பாலான இடங்களில் காணப்படுகின்றன. அவற்றை நாட்டுப்புற

 ISBN Number: 978-93-91115-95-1

வழக்காறுகளுடன் ஒப்பிட்டு ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**வழிபாட்டு வகைகள்**

நாட்டுப்புற மக்களின் வழிபாட்டு முறைகளை

1. **இயற்கை வழிபாடு**
2. **ஆவி வழிபாடு**
3. **வீட்டுத் தெய்வ வழிபாடு**
4. **குலதெய்வ வழிபாடு**
5. **ஊர்த் தெய்வ வழிபாடு என்பனவாகும்.**

**இயற்கை வழிபாடு**

இயற்கை வழிபாடு என்பது ஆதி மனிதர்களின் வாழ்வோடு இரண்டறக் கலந்தது. தான் முதலில் கண்டதும், தனக்குப் பேருதவியாக இருந்ததும், தன்னை அழிக்கும் ஆற்றல் கொண்டதும் ஆகிய சூரியன், சந்திரன், காற்று, மழை, புயல், இடி, மின்னல், மரம் போன்றவற்றை முதலில் வணங்கினர். “இயற்கைப் பொருள்களைக் கண்டு ஏற்பட்ட வியப்பு, அதிர்ச்சி, அச்சம் என்னும் உள்ளத்து உணர்வுகளே சமயங்களும், கடவுள்களும் தோன்றக் காரணமாயின” என்பார் மார்க்ஸ் முல்லர். (நாட்டுப்புறவியல் தோற்றமும் வளர்ச்சியும், முனைவர் ஞானம், பக்:126) இத்தகைய இயற்கை வழிபாட்டை

 ISBN Number: 978-93-91115-95-1

சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் காப்பியத் தொடக்கமாக கடவுள் வாழ்த்தாக கூறும் போது,

**திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்**
**கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்**
**வம்கண் உலகளித்த லான்,**
**ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்**
**காவிரி நாடன் திகிரிபோற் பொற்கோட்டு**
**மேரு வலந்திரித லான்.**
**மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்**
**நாமநீர் வேலி யுலகிற்கு அவன் அளிபோல்**
**மேல்நின்று தான்சுரத்த லான்.**
**பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்**
**வீங்குநீர் வேலி உலகிற் கவன் குலத்தோடு**
**ஓங்கிப் பரந்தொழுக லான் (சிலம்பு - மங்கல :1-12)**

என்ற வரிகளில் சந்திரன், சூரியன், மழை, பூம்புகார் என்று இயற்கையை வாழ்த்தி வணங்கியது குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமில்லாமல் காவிரிப்பூம்பட்டினத்தில் சூரியன், சந்திரனுக்கு கோயில்கள் இருந்தன என்ற செய்தியை கனாத்திறம் உரைத்த காதையிலும் அறிய முடிகிறது.

உருவத்தில் பெரியதாகத் தோன்றும் மலைகளைக் கண்டு பயந்த மக்கள் அவற்றையும் வழிபடத்

 ISBN Number: 978-93-91115-95-1

தொடங்கினர். இதனுடைய தாக்கம்தான். மலைகளில் கோயில் அமைத்து வழிபடுவது. பழங்கால மனிதன் தனக்கு உணவும், தங்குவதற்கு இடமும், வெயில் காலத்தில் நிழலும், நோயைத் தீர்க்க உதவுகின்ற பச்சிலைகளையும் தந்துதவிய மரம், செடி, கொடிகளையும் வழிபட்ட தன் விளைவாக 'மர வழிபாடு' தோன்றியது. சக்தி வாய்ந்த வேம்பு, ஆலமரம், அரசமரம் போன்ற மரங்களைத் தெய்வமாக நாட்டுப்புற மக்கள் வழிபட்டனர். இன்றும் வழிபட்டு வருகின்றனர். இன்றும் பல இடங்களில் அரசமரங்கள், ஆலமரங்களுக்கு கீழ் கோயில் இருபதையும் கோயில்களில் இம்மரங்கள் இருப்பதையும் பார்க்க முடிகிறது.

**சூரிய வழிபாடு**

சிலப்பதிகாரத்தில் புகார்காண்டம் மங்கல வாழ்த்துப் பாடலுடன் தொடங்குகின்றது. "திங்களைப் போற்றுதும், ஞாயிறு போற்றுதும், மாமழை போற்றுதும், என்று போற்றி பாடுகின்றார் இளங்கோவடிகள் இந்த மரபு இன்றும் நாட்டுப்புற மக்கள் நாற்று நடும் பொழுது பாடுகின்றனர். "சந்திரரே சூரியரே சாமி பகவனே இந்திரரே நானோக்கி எடுத்தேன் திருவலவு" என்று பாடுகின்றனர். இந்நாட்டுப்புற மரபையே சிலம்பின் தொடக்கமாக இருப்பதை அறிகிறோம்.


ISBN Number: 978-93-91115-95-1

நாட்டுப்புற வழிபாட்டில் இன்றளவு பல பரிமாணங்களில் வணங்கி வரும் சூரிய வழிபாடு, உலக வரலாற்றை நோக்குங்கால் உலகம் முழுமையும் பன்னெடுங் காலமாகப் பல்வேறு இன மக்களிடையே இருந்தது. மேலும் வேதகாலம், மகாபாரத காலம், இராமாயண காலம் ஆகிய மூன்று காலங்களில் வாயிலாக சூரிய வழிபாடு வழக்கில் இருந்ததையும் அறிய முடிகிறது.

“கணபதி வழிபாடு அல்லது பிள்ளையார் வழிபாடு தமிழகத்தில் பரவுவதற்கு முன், ஒவ்வொருவரும் ஒரு பணியை ஆரம்பிக்கும் முன் சூரியனை வணங்க ஆரம்பித்தனர் என்று அறிஞர்கள் கூறுவார்கள்” என்கிறார். முனைவர். அழகு கிருஷ்ணன் (சிலப்பதியாரம் காட்டும் பண்பாடும் சமுதாய வரலாறும் ப.283).

சிலப்பதிகாரக் காலத்தில் கணபதி வழிபாடு பரவவில்லை ஆகவே தான் காப்பியத் தொடக்கம் ஞாயிறு வழிபாட்டுடன் ஆரம்பிக்கிறது. மணிமேகலையின் பதிகமும் ஞாயிறு வழிபாட்டுடன் தொடங்குகிறது. மேலும் சிலப்பதிகாரக் காலத்தில் சூரியனுக்குத் தனியாகக் கோவில் இருந்தது அது ‘உச்சிக் கிழான் கோட்டம்’ என அழைக்கப்பட்டு வந்தது. சூரியனுடைய தேருக்கு ஒரே உருளை எனவும் அது ஏழு குதிரைகளால் இழுக்கப்பட்டது எனவும் குறிப்பிடுவார் இளங்கோவடிகள். இவ்வாறு

 ISBN Number: 978-93-91115-95-1

ஒருளை, ஏழு குதிரைகள் என்று படைத்துக் கூறும் மரபு எப்போது வந்தது? என்பது தெரியவில்லை. இவை நாட்டுப்றச் சாயலை உடையது. மேலும் ஆராயத்தக்க வகையில் உள்ளது என்கிறார். இன்றளவும் சூரிய வழிபாடு உள்ள கோயில் உள்ளன. சான்றாக கொணார்க் சூரியனார் கோயில் (ஒரிசா), தஞ்சாவூர் மாவட்டம் - திருவாவடுதுறை - சூரியனார் கோயில் (கும்பகோணம் - பூம்புகார் - சாலையில் உள்ளது) இக்கோயில்களால் அரிய முடிகிறது. சிலப்பதிகாரத்தில் சூரிய குண்டம் என்று ஒன்று உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இதைப்போன்றே சங்க காலத்திலும் சூரிய வழிபாடு உள்ளதை சங்கப்பாடல்களில் அறிய முடிகிறது. இன்றும் உழவுத்தொழிலுக்கு நன்றி கூறும் உழவர் திருநாளான பொங்கல் திருநாளில் சூரியனுக்கு முதல் பொங்கல் வைப்பது குறிப்பிடத்தக்கது. இன்றளவும் நம்நாட்டினர் சூரிய நமஸ்காரம் செய்வதும் வெளிநாட்டினர் சூரிய குளியல் போடுவதும் நாம் அறிந்ததே. சூரிய ஒளியில் உடலுக்கு தேவையான விட்டமின் டீ கிடைக்கிறது என்கின்றனர் அறிவியளாளர்கள்.

**திங்கள் வழிபாடு**

உலகக் கடவுளர்களுள் திங்கள் சூரியனுக்குத் துணையாக விளங்கும் தோழமைக் கடவுளாகக்

 ISBN Number: 978-93-91115-95-1

கூறப்படுகிறது. இதை உறுதிசெய்வது போல் கிழமைகளுள் ஞாயிறு முதலாவதாகவும் திங்கள் அதற்கடுத்தும் இடம் பெற்றுள்ளன என்று எழுதுகிறார் மானிடவியலறிஞர் ‘டெயிலர்’. ஆனால் இளங்கோவடிகள் திங்களை முதலாவதாகவும், சூரியனை இரண்டாவதாகவும் வைத்துள்ளார். சிலப்பதிகாரக் காப்பியத்தின் தொடக்கமே “திங்களைப் போற்றுதும், திங்களைப் போற்றுதும் என்று திங்கள் வழிபாட்டுடன் ஆரம்பிக்கிறது. மேலும், நிலாக் கோட்டம் என்ற பெயரில் ஒரு தனிக் கோவிலாக வழி படப்பட்டதையும், அறியமுடிகிறது. மேலும், மாயோன், நால்வகை வருணப்பூதம் ஆகியவர்களைக் குறித்துப் பாடும் தேவபாணியின் போதும் திங்களும் பாடப்பெறும் சிறப்பைப் பார்க்க முடிகிறது. இவையெல்லாவற்றுக்கும் மேலாக,“உலகு தொழுத் தோன்றிய மலர் கதிர் மதியம்” என்று திங்கள் உலக மக்களால் வணங்கப் பட்டதைக் கூறுகிறார் இளங்கோவடிகள்.

**நிலாச்சோறு**

நிலாவை வணங்குவதும் அதன் குளிர்ச்சியை ரசிப்பது என்பதும் இன்றளவும் உள்ளது தான். கிராமப்புறங்களில் ஒரு விழாவாக கொண்டாடப்படுவது நிலாச்சோறு. இதனை தேரோட்டம் என்றும்


ISBN Number: 978-93-91115-95-1

நிலாப்பிள்ளைக்குச் சோறு மாற்றுதல் என்றும் கூறுவர். இவ்விழா தை மாத பௌர்ணமிக்கு ஒன்பது நாட்களுக்கு முன்பு சோறு மாற்றுதல் ஆரம்பிக்கும் ஊரில் உள்ள பொது இடத்திற்கு ஊரிலுள்ள சிறுவர் சிறுமியர்கள் அனைவரும் அவரவர் வீட்டிலிருந்து ஒரு பாத்திரத்தில் கொஞ்சம் உணவுப் பொருள்களைக் கொண்டு வருவார்கள். அந்த இடத்தைச் சாணி இட்டு மெழுகி மாக்கோலமிட்டு கோலத்தின் நடுவில் பிள்ளையார் பிடித்து வைப்பர். பூசை பொருள்களால் அலங்கரிப்பர். பின்பு அப்பிள்ளையாரைச் சுற்றிலும் தான் கொண்டுவந்த உணவுப் பாத்திரங்களை வட்டமாக வைப்பர். பின்பு அனைவரும் அப்பாத்திரத்தைச் சுற்றி வட்டமாக கும்மிப்பாட்டுப்பாடி கும்மியடிப்பர். பின்பு அதில் ஒரு சிறுமி நீல்விளாவிய சாம்பிராணி தூபம் காட்டி பூசை செய்த பின் அனைவரும் தங்களது உணவை மற்றவர்களுக்குப் பகிர்ந்து சாப்பிட்டு முடித்தவுடன் ஒரு சிறிய கூடையில் சாணத்தால் பிடித்து வைத்திருந்த பிள்ளையாரையும் பூசைக்கு பயன்படுத்தப்பட்ட பூக்களையும் இட்டு வைப்பர். இது போன்று எட்டு நாட்கள் நடக்கும் முதல் நாள் பழமும் சர்க்கரையும் மட்டும் மாற்றுதல் ஆரம்பித்து அதற்கடுத்த நாட்களில் வகை வகையான உணவுகளைக் கொண்டு வந்து மாற்றுவர்.


ISBN Number: 978-93-91115-95-1

ஒன்பதாவது நாள் மாவு மாற்றுதல் நடைபெறும். மாவு மாற்றுதல் என்றால் இனிப்புப் பலகாரங்களைச் சொல்வர். நிலவு வளர்வது போல உணவுப் பொருள்களின் வகைகளும் அதிகமாகும். இந்த ஒன்பதாவது நாளில் பெரிய தேர்க்கோலமிட்டு கும்மியடித்தலும் மாவு மாற்றுதலும் நடைபெறும்.

ஒன்பதாம் நாள் இரவு ஒன்பது நாள் பிள்ளையாரையும் போட்டு வைத்திருந்த கூடையை வைத்து இரவு நீண்ட நேரம் கும்மியடிப்பர். பின்பு பொழுது விடியும் நேரத்தில் ஆற்றில் இப்பிள்ளையாரை இடுவர் இப்பிள்ளையாரை இடும்போது,

**வாயைக்கட்டி வயித்தக்கட்டி வளத்துன பிள்ளையாரே'**

**நீ வாய்யகாலு தண்ணிய போறையே பிள்ளையாரே**

எனப் பாடிக் கும்மியடிப்பர். பத்தாவது நாள் தை பௌர்ணமியில் (தைப்பூசம்) மக்கள் அனைவரும் முருகன் கோயிலுக்குத் தேர்பார்க்கச் செல்வார்கள். அன்றைய தினம் நிலா பிள்ளையும் தேர்ப்பார்க்க செல்வதாகக் கருதி அன்று சோறு மாற்றுதல் நிகழ்வை நடத்த மாட்டார்கள் பதினோராவது நாள் கடைசி சோறு மாற்றுதல் நடைபெறும். அன்று வெள்ளுவங்க ரசம் வைப்பர்.


**ISBN Number: 978-93-91115-95-1**

அதாவது தூதுவளை போன்ற மூலிகை இலை தழைகளை எல்லாம் சேர்த்து வைக்கப்பட்ட ரசச்சோறு மாற்றுவர். அத்துடன் இவ்வாண்டு நிலாச்சோறு விழா நிறைவுபெறும். இவ்வாறு மக்கள் அனைவரும் மதம் இன பேதமின்றி ஒன்றுபட்டு நடத்தப்படும் ஒற்றுமைவிழா நாங்கள் பள்ளிபருவத்தில் இருக்கும் பொழுது எங்கள் ஊரில் அனைத்து இன மாணவியர்களாக விளையாடிய விழா இன்றும் ஒரு சில கிராமங்களில் உள்ளது. இதன் பயன் நமது பாரம்பரியம், ஒற்றுமை, இயற்கையை கண்டு இன்புற்று நிலவின் குளிர்ச்சியில் மகிழ்வடைவதும் ஆகும். இதனால் குழந்தைகளிடம் ஒற்றுமை, உறவு, உடல்நலன், மனநலன் என அனைத்தும் பாதுகாக்கப்படுகின்றது.

**சிலம்பில் நிலவு**

சிலப்பதிகாரத்தில் மதுரை மாநகரிலுள்ள பொதுமகளிர் ஏற்பாடாகிய பொழுதிலே இந்நிலவின் பயனை நுகர்த்தற்குரிய முற்றத்தில் தன் மனத்திற் தங்கிய கோலத்தைப் புனைந்து, கொழுநர் பாராட்ட மலர மணிமேல் இனிமையுடன் இருந்தனர் என்ற செய்தியை அறிகிறோம். இதை போன்றே பொன் மாளிகையின்கண் மணிகளால் புனையப்பட்ட நிலா முற்றத் திருந்து நிலவின் அழகினைக் கண்டு களிக்கின்றனர். அரசன் சேரன் செங்குட்டுவனும் அவன் மனைவி கோப்பெருந்தேவியும்,

 ISBN Number: 978-93-91115-95-1

அதுமட்டுமல்லாமல் கோவலனும் கண்ணகியும் நிலா முற்றத்திலிருந்து நிலவை ரசித்தனர் என்ற செய்தியையும், கணவனைப் பிரிந்த காலத்தில் நிலா முற்றம் எத்தகைய துன்பம் உடையது என்பதையும் இலக்கியங்களின் வாயிலாக அறியமுடிகிறது. இதன்மூலம் திங்களை ரசித்ததும் அதனை கடவுளாக வைத்து வணங்கியதும் போன்ற செய்திகளை அறிய முடிகிறது. இதைபோன்றே இன்றும் நடைபெறும் ஒரு விழா வீரமாத்தி விழா, வீரமாபத்தினி என்பது பேச்சு வழக்கில் ‘வீரமாத்தி’ என்று திரிந்து வழங்கியது கொங்கு நாட்டுப் பெண்கள் தை மாதத்தில், நிலா நோன்பு இருந்து நிலாச் சோறு எடுப்பார்கள். அப்பொழுது ‘வீரமாத்தி கோயிலுக்குச் சோறு மாத்த போறேன்’ என்று கூறிக் கும்மியடிக்கும் நிலையை இன்றும் காணலாம் என்கிறார். (முனைவர் நீ.வ.கருப்புசாமி, தாராபுரம் நாட்டுப்புற தெய்வங்கள் ப.18)

**தீக்கடவுள்**

பண்டைய மக்கள் ஐம்பூதங்களையும் கடவுளாக வணங்கினர். அதில் அக்னிக்கு முக்கிய இடம் கொடுத்தனர். வேள்விகள், திருமணம் போன்றவற்றில் அக்னி சாட்சியாக நடத்தப்படுகின்றன. இத்தீக் கடவுளை “நீல நிறத்துடன் நீண்ட சிவந்த சடை முடியுடன்

 ISBN Number: 978-93-91115-95-1

பார்ப்பனன் வடிவத்தில் காட்டுகிறார் இளங்கோவடிகள். பார்ப்பன வடிவம் என்பதால் பார்ப்பனர்கள் அணிந்திருந்த புரிநூலை இக்கடவுளும் அணிந்திருந்தார் என்று நம்பலாம். இதற்கு ஆதாரம் போல் வேத கால அக்கினிக் கடவுள் பூணூல் அணிந்திருந்ததைப் பார்க்கிறோம்'' என்கிறார். முனைவர். பொ. அழகு கிரு ஷ்ணன், (சிலப்பதிகாரம் காட்டும் பண்பாடும், சமுதாய வரலாறும் ப.282).

வேத நூல்களில் அக்னி சிவந்த மேனியனாகக் காணப்படுகின்றான். ஆனால் இளங்கோவடிகள் தீக்கடவுளை நீல நிறத்தினைக் காட்டுகிறார். சிலப்பதிகாரச் சான்றுகளிலிருந்து தீக்கடவுள் கோயில் இருப்பதாக தெரியவில்லை. கடவுள்களுக்கும் மனிதர்களும் பணிபுரியும் ஒரு தூதன். மானிடப் பெண்ணான கண்ணகியின் ஏவலுக்கு தலைசாய்த்து மதுரையை தீயிக்கு இரையாக்குகிறது என்பதை அறியமுடிகிறது. இதன் மூலம் அக்னியை மக்கள் வழிபடப்பட்டதை அறிகிறோம். இன்றும் திருமணங்கள் அக்னி சாட்சியாகவே நடத்தப்படுகின்றது.அனைவரும் அறிந்ததே, அதேபோல் பூசை செய்தல், ஓமம் வளர்த்தல், வழிபாடு செய்தல் ஆகியவற்றில் அக்னி இல்லாமல்


**ISBN Number: 978-93-91115-95-1**

இல்லை. இதன் மூலம் தீ கடவுளின் பயன்பாடு இன்றளுவும் உள்ளதை அறிய முடிகிறது.

**காவல் தெய்வங்களும் காப்புத் தெய்வங்களும்**

நாட்டுப்புற காவல் தெய்வங்கள் போன்றே சிலப்பதிகாரத்திலும், காவல் தெய்வங்கள் காப்பு தெய்வங்கள் என இரு வகையான தெய்வங்களைப் பார்க்க முடிகிறது. அழற்படு காதையில் மதுரை மாநகரைக் கண்ணகி எரிக்கும் பொழுது அந்நகரைத் தொன்று தொட்டுக் காவல் செய்து வந்த காவல் தெய்வங்கள் தாம் குடி கொண்டிருந்த கோயிலின் வாயிற் கதவுகளை அடைத்துக் கொண்டன என்றும் நடுக்கற் காதையில் கண்ணகிக்குக் கோவில் கட்டி முடித்து வழிபாடு நடத்துங்கால் காப்பு (தெய்வங்கள்) வாயிலில் காவலாக நின்றன என்றும் குறிப்பிடுவார், இளங்கோவடிகள். 'காவல் தெய்வம்' 'காப்பு' என்ற சொற்றொடர்களுக்கு முறையே நான்கு வருணப் பூதங்கள் என்றும் திக்கிற் தேவதைகள் என்றும் பொருள் எழுதுவார் அரும்பதவுரையாசிரியர். பெருமழைப் புலவர் சோம சுந்தரனார் இந்த நால்வகையான பூதங்களை அந்தண பூதம், அரச பூதம், வணிக பூதம் வேளாண் பூதம் என விரித்துக் கூறுவார். அரும்பதவுரையாசிரியர் கருத்துப்படி


**ISBN Number: 978-93-91115-95-1**

காவல் தெய்வங்களும், காப்புத் தெய்வங்களும் வெவ்வேறானவை என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

**பூத வழிபாடு**

சிலப்பதிகாரத்தில் சமய வளர்ச்சியில் பூதங்கள் பெறும் இடம் முக்கியமானது. வருணப்பூதங்கள், புகார் நகரிலிருந்து வந்த காவல் பூதம், சதுக்கப்பூதம் எனப் பல வகையான பூதங்களைப் பார்க்கிறோம். இவைகளின் உருவ அமைப்புகளும் சிலப்பதிகாரத்தில் விரிவாகவே பேசப்பெறுகின்றன. மணிமேகலையில் பிற பூதங்கள் இடம்பெறுகின்றன. இப்பூதங்களின் தொழில் காவல் காப்பது என்பதை இதனுடைய பெயரைக் கொண்டே அறியலாம். இப்பூதம் புகார் நகரின் நாளங்காடியில் இருந்து வந்தது என்பதையும், இந்திரன் ஏவலால் வானுலகத்திலிருந்து அனுப்பப்பட்டது என்பதையும் சிலப்பதிகாரத்தால் அறிகிறோம். இப்பூதத்திற்கு மறக்குடி மகளிர், பூ, புகை, பொங்கல், நோலை (கொழுக்கட்டை) ஆகியவைகளைப் படைத்து வழிபட்டு வந்தனர். இவ்வாறு வருணப் பூதங்கள் காவல் பூதம் ஆகிய பூதங்களைத் தவிர அடைக்கலக் காதையில் மற்றொரு வகையான பூதம் பேசப்பெறுகிறது. இப்பூதம் 'கற்புடைய மகள் ஒருத்தி பொய்ப் பழியினை எய்தும்படி அவளுடைய கணவனுக்கு அறிவிலான் ஒருவன் கண்டு தெளியாத

 ISBN Number: 978-93-91115-95-1

சான்று கூறிப் பொய்த்தலாள் அவனை அறைந்து கொன்றுவிடுகிறது.

பூத சதுக்கத்துப் பூதம், தவ வேடத்தில் மறைந்து நின்று கூடா ஒழுக்கத்தில் ஒழுகும் தவத்தன்மை யில்லாதவர்கள் தீய நெறியில் ஒழுகும் பெண்டிர், கீழறுக்கும் அமைச்சர், பிறர் மனைவியை விரும்புவோர், பொய்ச் சான்று பகர்வோர், புறங்கூறுவோர் ஆகியோர்களை நிலத்தில் புடைத்து உண்ணும் என்ற வகையில் சதுக்கப்பூதமும், அடைக்கலக் காதையில் வரும் பூதமும் ஒப்புமை உடையவையாக உள்ளன. பொதுவாக பூதங்களைப் பற்றிச் செய்தி சங்க இலக்கியங்களிலும் உள்ளது. நாட்டுப்புறத் தெய்வங்களைப் போன்றே சிலப்பதிகாரத்தில் ஐவகை மன்றங்களிலும் அரிய பல்வேறு பலிகளையும் இட்டு மக்கள் வழிபட்டுப் போற்றினர் என்பதை அறியமுடிகிறது.

'சுடுகாட்டுக் கோட்டம் என்பதற்குச் 'சக்கரவாளக்கோட்டம்' என்று பொருள் கூறுகிறார். அடியார்க்கு நல்லார். இதில் கோயில் கொண்ட தெய்வம் யாது? என்பதைச் சிலப்பதிகாரத்தால் அறிய இயலவில்லை. ஆனால், மாலதி எனும் பார்ப்பன நங்கை இக்கோட்டத்தை வழிபடச் செல்கிறாள். சக்கரவாளக் கோட்டமும், சுடுகாட்டுக்கோட்டமும் ஒன்றே என்பதை

 ISBN Number: 978-93-91115-95-1





மணிமேகலையின் மூலம் அறியமுடிகிறது. அக்காலத்தில் வழிபடப்பட்டு வந்த மற்றொரு கோட்டம், ஊர்க் கோட்டமாகும். ஊர்க்கோட்டம் என்ற சொற்றொடருக்குச் சிலப்பதிகார உரையாசிரியர்களான அரும்பத வுரையாசிரியரும் அடியார்க்கு நல்லாரும் 'கைலாயம் நிற்கும் கோயில்" என்று முனைவர். பொ. அழகு கிருஷ்ணன் அவர்கள் பொருள் எழுதுகின்றார். (சிலப்பதிகாரம் காட்டும் பண்பாடும் சமுதாய வரலாறும் பக்:287- 288)

**ஐயை (காளி) வழிபாடு**

ஐயை பாலைநிலத்தின் தெய்வம், வேட்டுவர்கள் இத்தெய்வத்தைக் கொண்டாடுவார்கள். பாய்கலைப் பாவை, கொற்றவை, அமரி, குமரி, கவுரி, சமரி, சூலி, நீலி சங்கரி, அந்தரி முதலிய பல பெயர்களால் இத்தெய்வம் வழங்கப்படுகிறது. துர்க்கை, காளி என்ற பெயர்களும் இத்தெய்வத்தைக் குறிக்கும். வேட்டுவப் பெண்கள் இத்தெய்வத்திற்குப் பலியிட்டுப் போற்றியதை,

**கூற்றுறழ் முன்பொடு கொடுவில் ஏந்தி,**
**வேற்றுப்புலம் போகிநல் வெற்றங் கொடுத்துக்**
**கழிபே ராண்மைக் கடன்பார்த் திருக்கும்**
**விழிநுதற் குமரி, விண்ணோர் பாவை**
**மையறு சிறப்பின் வான நாடி**

 ISBN Number: 978-93-91115-95-1

**(சிலம்பு-காடுகாண்: 211-214)**

அங்கு என்ற வரிகளில் கூற்றில் ஒத்த வலிமையுடைய வளைந்த வில்லினை கையிலேந்தி வேற்று நாடுகளில் செல்வோர் அங்கு அவர்கற்கு நல்ல வெற்றியைத் தொகுத்துக் கைம்மாறாக பலியை எதிர்பார்த்து இருக்கும் நெற்றிக் கண்ணினையுடைய குமரியும் விண்ணோர் பாவையும் மான ஐயை கோட்டத்தில் கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் மூவரும் ஒருபுறத்திலே ஒதுங்கினர். அப்பொழுது அங்கு நிகழ்ந்த விழாவை அவர்கள் கண்டனர் என்ற செய்தியின் மூலம் அறியலாம்.

**மோகினிப்பிசாசு**

மோகினிப்பிசாசு என்று ஒரு தெய்வம் உண்டு. இது அழகான பெண் உருவில் வந்து ஆண்களை மயக்குமாம், கனவிலே தோன்றி ஆண்களைக் காமவிதாரம் கொள்ளச் செய்யும் இவ்வாறு இத்தெய்வத்தைப் பற்றிப் பல கதைகள் சொல்லுவார்கள். இத்தெய்வத்தைப் பற்றி சிலம்பிலும் குறிப்பு உள்ளது. “ஆர் ஆருர்த்தெய்வம்” “கான் உறை தெய்வம்” என்ற பெயர்களால் இத்தெய்வம் சுட்டப்படுகின்றது. வனதேவதை என்றும் இதைக் கூறுவர்.


ISBN Number: 978-93-91115-95-1

கடத்தற்கு அரிய காட்டுவழியிலே மிகுந்த துன்பத்தைத் தரும் தெய்வம் ஒன்று உண்டு அத்தெய்வம் தோன்றி இடையூறு வழிப்போவாரைத் தடுக்கும்.

**ஆரிடை யுண்டோர் ஆரஞர்த் தெய்வம்**
**நடுக்கஞ் சாலா நயத்தின் தோன்றி**
**இடுக்கண் செய்யா தியங்குநர்த் தாக்கும்**
**(சிலம்பு-காடு: 144:146)**

இவ்வாறு கூறப்படும் இத்தெய்வத்தின் தன்மையை கூறுகையில் கோவலன் ஒரு பொய்கையிலே காலைக்கடன் கழித்து நின்றான். அப்போது இத்தெய்வம் மாதவியின் தோழியாகிய வசந்தமாலை சொல்லியதாகச் சில சொற்களை கூறியது. கோவலன் பாதங்களில் வீழ்ந்து வணங்கிற்று கோவலன் அது வனதேவதை என்று ஐயுற்றான். உடனே அவன் துர்க்கையின் மந்திரத்தைச் சொல்லி அத்தெய்வத்தின் சூழ்ச்சியை அகற்றினான். இந்த நிகழ்ச்சியைக் காடுகாண் காதையிலே 165 முதல் 200 வரையுள்ள அடிகளிலே காணமுடிகிறது.

**பாசண்டச் சாத்தன்**

பாசண்டச் சாத்தன் பிரதிட்டை செய்யப் பெற்ற கோவில் 'பாசண்டச் சாத்தன் கோட்டம்' எனப் பெயர் பெற்றது. பாசண்டமாவது தொண்ணூற்றறு வகைச் சமயச் சாத்திரத் தருக்கக் கோவை என்பார் அடியார்க்கு


ISBN Number: 978-93-91115-95-1

நல்லார். 'தொண்ணூற்றறு வகையான சமயச் சாத்திரங்களை அறிந்த வேழப்பர்களைக் கால்கோள் காதையில் பார்க்கிறோம். பாசண்டத்துறை தொண்ணூற்றறு வகை என்று திவாகரமும் குறிப்பிடுகிறது.

பாசண்டச் சாத்தனை நாட்டுப்புற காவல் தெய்வமான ஐயனாராகவே அடையாளம் காண்கிறார் அரும்பதவுரையாசிரியர். 'சாஸ்தா அல்லது சாத்தன் என்னும் வடசொல்லிற்கு நேரான தமிழ்ச்சொல் ஐயன் அல்லது ஐயனார் என்பதாகும். ஐயன் என்பதற்கு உயர்ந்தோன். குரு, ஆசான் என்பன பொருள்படுகின்றன. சாத்தன் என்னும் பெயர் புத்தரைக் குறிக்கும் பெயராகப் பண்டைக் காலத்தில் வழங்கப்பட்டு வந்தது. தமிழ் நாட்டிலிருந்த பௌத்தர்கள் 'சாத்தன்' என்னும் பெயரைப் பெரும்பாலும் மேற்கொண்டிருந்தனர் என்பது சங்க நூற்களினின்றும் தெரிய வருகிறது.

மணிமேகலையை இயற்றியவர் பௌத்த மதத்தினர் என்பதும், அவரது பெயர் சாத்தனார் என்பதும் கண்டு கருதத் தக்கது. சாத்தன் மகாக் குழந்தையாய் மாறி காப்பியப் குடி எனும் ஊரில் வளர்ந்ததைக் 'காப்பியத் தொல்குடிக் கவின் பெற வளர்ந்தது என்ற வரத்தரு காதை வரிகளால் அறியலார். 'இந்தக் காப்பியக்குடி என்பது


ISBN Number: 978-93-91115-95-1

தஞ்சை ஜில்லாவில் சீர்காழிக்குத் தென் கிழக்கில் மிக அண்மையில் உள்ளது. அங்குச் சாத்தனார் கோயில் ஒன்று இன்றும் உள்னது என்பார் வை.சுந்தரேச வாண்டையார். (சாத்தனார் கோயில்கள், செந்தமிழ் தொகுதி 32.ப.166) இவ்வாறாக பாசண்டச் சாத்தனை நாட்டுப்புற காவல் தெய்வமான ஐயனாராகவே அறியமுடிகிறது.

**இயக்கி (இருக்கி)**

மதுரை நகரின் கோட்டை வாயிலுக்கு வெளியே இயக்கி என்ற பெண் தெய்வம் பிரதிட்டை செய்யப்பெற்றிருந்தது. அடியார்க்கு நல்லார் 'இயக்கி" என்ற சொல்லுக்கு இயக்கி-யஷி தேவதை; 24 தீர்த்தங்கரர்களுள் ஒவ்வொருவருக்கும் பணி செய்தற்கு உரியவர்களாக ஆவியென்றும் யாஷியென்றும் இவ்விருவர் உள்ளாரென்று சைன நூல் கூறும். இப்பெயர் கன்னியாகுமரிப்பக்க ஊர்களில் 'இசக்கி' இசக்கியம்மன் என்று நாட்டுப்புற தெய்வமாக வழங்கப்படுவது குறிப்பிடத் தக்கது. இத்தெய்வத்தைப்பற்றிக் கூறுகையில் ஆரியாங்கனை கணவன் இருக்கும்போது துறந்தவள் என்று கூறப்படுகிறது. இவ்வியக்கியினைத் தீர்த்தங்கூர் திருக்கோயில்களில் இடப்பக்கத்தை முதலில் நிலைநிறுத்தி வந்தனர்.


ISBN Number: 978-93-91115-95-1

பின்னர் வலப்பக்கமாகப் பிரதிட்டை செய்தனர். 'இயக்கியை வழிபட்டால் பயன் கைமேல் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை வளர்த்தபோது இயக்கிக்குத் தனிக் கோயில் எழுபலாயிற்று மேலும் பக்தி இயக்கத்தின் மூலம் மலைகளுக்கும் திருமகளுக்கும் மதிப்பு ஏற்படுவதைக் கண்டு சமண சமயத்தினர் இயக்கி வணக்கத்தை மேற்கொண்டிருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுவதை எடுத்துக்காட்டுகின்றார் ப. அருணாசலம். சமண சமயத்தைச் சார்ந்த சீவகசிந்தாமணி இயக்கியைத் தேவ மகளாகக் கூறும் பாண்டிய நாட்டில் 'இசக்கி என வழங்குவர்' என்கிறார். முனைவர். பொ. அழகு கிருஷ்ணன் அவர்கள் (சிலப்பதிகாரம் காட்டும் பண்பாடும் சமுதாய வரலாறும் ப. 292).

இயக்கியைப்பற்றி சிலம்பில் கூறும் பொழுது மாதரி, இயக்கிக்குப் பால் மடை கொடுக்கிறாள். வையைக் கரையிலிருந்த திருமாலுக்கு, பூ, புகை, புனைசாந்து கண்ணி ஆகியவைகளைப் படைத்து வந்த மாதரி சமணத் துறவியான கவுந்திய மகளையும் தொழுகிறாள். ஆகவே இயக்கிக்குப் பால்மடை கடைத்தது மாதரியின் இயல்பாகவே கருதப்படுகிறது. இதன் மூலம் இயக்கி என்ற தெய்வத்தை அறிய முடிகிறது.இதைப் போன்றே சிறு தெய்வங்களான

 ISBN Number: 978-93-91115-95-1

தீக்கடவுள், சூரிய வழிபாடு, திங்கள் வழிபாடு, கூற்றுவன் போன்ற வழிபாடுகள் இருந்ததை அறியமுடிகிறது.

காவல் தெய்வங்கள் என்பதை நச்சினார்க்கினியர் திருமுருகாற்றுப்படைக்கு எழுதும் உரையால் இந்திரன், யமன், வருணன், சோமன் ஆகிய தெய்வங்கள் காவல் தெய்வங்களாக இருந்து வந்தன என்பதை அறிய முடிகிறது வால்மீகி இராமாயணம் வஜ்ரதாரா (இந்திரன்) யமன், வருணனன், தனேஷா, குபேரா ஆகியோர்களை முறையே கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய திசைகளுக்குக் கடவுள்களாகக் கூறுகிறது. திசைக் கடவுள்களைப்பற்றி ஆராய்ந்த அறிஞர் திரு.ம.சி. சர்க்கார் இறுதியாக எடுத்துக் கூறும்பொழுது 'யமனும் வருணனும் முறையே தெற்குத் திசைக்கும், மேற்குத் திசைக்கும் கடவுள்களாக நிலையாகக் கூறப்படுகிறார்கள். அக்கினி, குபேரன், இந்திரன், வரதன் ஆகியோர் கிழக்குத் திசைக் கடவுள்களாகக் கூறுகிறார்" என்கிறார் முனைவர். பொ. அழகு கிருஷ்ணன். (சிலப்பதிகாரம், காட்டும் பண்பாடு சமுதாய வரலாறும் ப.286)

பிற்காலத்தில் திசைக் கடவுள்களை நான்கு உலகக் கடவுள்களுடன் சேர்த்து எட்டுக்கடவுள்களாக ஆக்கியது போன்றே, கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு

 ISBN Number: 978-93-91115-95-1

ஆகிய திசைகளுடன் தென்கிழக்கு, தென்மேற்கு, வடகிழக்கு, வடமேற்கு ஆகிய திசைகளைச் சேர்த்து எட்டாக்கினர். மனுஸ்மிருதி என்ற நூல் எட்டு திசைகளுக்கு எட்டுக் கடவுளர்களைக் கூறுகிறது. கி.பி.ஏழாம் நூற்றாண்டில் தோன்றிய அமர கோசர் எண்திசைக் கடவுளர்களைக் குறிப்பிடுகிறார். அதன் மூலம் சிலப்பதிகாரத்தில் திசைகள் எட்டு என்று கூறப்பெறுவதைப் பார்க்க முடிகிறது.

**முடிவுரை**

அச்சத்தின் காரணமாக துவங்கிய வழிபாடானது பின்பு இயற்கை வழிபாடாகவும் சிறுதெய்வ, பெறுதெய்வ வழிபாடாகவும் மாறியது. இவ்வழிபாடானது பின்பு தொழில் அடிப்படையில் மக்களிடையே பிரிவுகள் ஏற்பட்டன. அதன் அடிப்படையில் இன்று பல மதங்களாக மாறியுள்ளன. இம்மதங்களின் அடிப்படையில் இன்று பல தெய்வவழிபாடுகளாகப் பல்கிப்பெருகியுள்ளதை அறியமுடிகிறது.

**துணைநூல் பட்டியல்**


[1] முனைவர். அழகு கிருஷ்ணன். *சிலப்பதியாரம் காட்டும் பண்பாடும் சமுதாய வரலாறும்*. ப. 283.

[2] முனைவர் நீ.வ.கருப்புசாமி. *தாராபுரம் நாட்டுப்புற தெய்வங்கள்.* ப. 18)


 ISBN Number: 978-93-91115-95-1

[3] முனைவர். பொ. அழகு கிருஷ்ணன். *சிலப்பதிகாரம் காட்டும் பண்பாடும் சமுதாய வரலாறும்*. ப. 282.

[4] முனைவர்.கதிர் முருகு. *நாட்டுப்புற வழிபாட்டில் தொன்மங்கள்*. பக்: 81, 82

[5] முனைவர் ஞானம். நாட்டுப்புறவியல் தோற்றமும் வளர்ச்சியும். பக்: 126.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.



ISBN Number: 978-93-91115-95-1